# திங்கள்

வைகாசி...அணு-4.

## சிறந்த பொழுது போக்குப் புத்தகங்கள்

| | ரூ. | அ | பை |
|---|---|---|---|
| வான வீதி (பாலு) | 1 | 8 | 0 |
| நக்ஷத்திரமாலை (குண்டூசி) | 1 | 0 | 0 |
| ராஜா சாண்டோ (ராமநாத்) | 2 | 0 | 0 |
| மனோரதம் (கே. ஸ்ரீ.) | 1 | 4 | 0 |
| ரேஷன் காலம் ( ,, ) | 1 | 4 | 0 |
| நினைவு (நாகர்கோவில் மஹாதேவன்) | 2 | 0 | 0 |
| மீனுவின் பூனைகள் (எஸ். ஓய். சுப்ரமணியம்) | 1 | 4 | 0 |
| புதுமணத் தம்பதிகள் (இளவேனில) | 2 | 4 | 0 |
| நான் டைரக்டரானேன் (கொத்தமங்கலம் சுப்பு) | 0 | 8 | 0 |

### சிரஞ்சீவி எழுதிய பயங்கர நாவல்கள்

| | | | |
|---|---|---|---|
| மர்மம் நிறைந்த மாயவில்லா | 1 | 0 | 0 |
| சூனியக்காரி | 1 | 0 | 0 |
| மின்மினி | 1 | 0 | 0 |
| சூறைக்காற்று | 1 | 8 | 0 |
| மரணயாத்திரை | 1 | 8 | 0 |
| நீதி மயக்கம் | 1 | 0 | 0 |
| காதலன் கொலை வழக்கு | 1 | 4 | 0 |
| மர்மத்தீவு | 1 | 4 | 0 |
| இரட்டைக் கொலை | 1 | 4 | 0 |
| மர்மக்கொலை | 1 | 0 | 0 |
| ரத்தப் பசி | 1 | 4 | 0 |
| பயங்கர மனிதன் | 2 | 0 | 0 |

வியாபாரிகளுக்குக் கமிஷன் உண்டு. தேவையான பிரதிகளுக்கு முன் பணம் அனுப்ப வேண்டும். வி. பி. பி. யில் அனுப்ப இயலாது.

ராமநாத் பப்ளிகேஷன்ஸ்

17, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2

வே. கோவிந்தசாமி

உங்களின்
சுவையான சமையலுக்கு
S.R
பெருங்காயம்
பரிசுத்த
ஆராதணைக்கு எற்ற கற்பூரம்
ஊதுபத்தி முதலானவைகளுக்கு
S.R
ஒரு சின்னம்
தயாரிப்பவர்:-
பாலகிருஷ்ணா இண்டஸ்ட்ரியல் ஒர்க்ஸ், சென்னை-13

# திங்கள் ★★★★★

மாதப் பத்திரிகை

## சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| உள் நாடு ஒரு வருஷம் | ரூ. | 6 |
| ,, அரை வருஷம் | ரூ. | 3 |
| வெளிநாடு ஒரு வருஷம் | ரூ. | 8 |
| தனிப்பிரதி விலை | அணா | 8 |

## விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| சாதாரண முழுப்பக்கம் | ரூ. | 100 |
| ,, அரைப்பக்கம் | ரூ. | 50 |
| ,, கால்பக்கம் | ரூ. | 30 |
| கடைசி அட்டை (மூவர்ணம்) | ரூ. | 300 |
| உள் அட்டை | ரூ. | 150 |
| முகப்புப் பக்கம் | ரூ. | 150 |

## கட்டுரையாளர்களுக்கு

'திங்கள்' பத்திரிகையில் பிரசுரம் செய்ய கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. நவீன முறையில் எழுதப்படும் கட்டுரைகளுக்கு முக்யத்துவம் அளிக்கப்படும். பழைய விஷயங்களானாலும் புதிய முறையில் எழுதப்பட வேண்டும். எல்லாவித ஆராய்ச்சிக் கட்டுரைகளுக்கும் நமது பத்திரிகையில் இடம் உண்டு. சொந்த அனுபவங்களைப்பற்றி எழுதலாம். அதிசய சம்பவங்களைப்பற்றியும் கூறலாம். பிரசுரிக்கப்பட்ட எல்லாக் கட்டுரைகளுக்கும் சன்மானம் உண்டு. பிரசுரிக்கப்படாத கட்டுரைகளைத் திரும்பிப்பெற விரும்புவோர் போதிய தபால் தலைகள் அனுப்பி வைக்கவேண்டும்.

## போட்டோ நிபுணர்களுக்கு

நீங்கள் எடுக்கும் போட்டோக்களை எங்கள் பார்வைக்கு அனுப்புங்கள். தனிப்பட்ட போட்டோக்கள் பத்திரிகையில் இடம்பெறாது. படக்கட்டுரைகளுக்கு ஏற்றதான தொடர் போட்டோக்கள் மட்டுமே எங்களுக்குத் தேவை. போட்டோக்களை அனுப்பும்போது அவற்றின் விளக்க உரைகளையும் அனுப்பி வைக்கவேண்டும்.

## கடிதங்கள்

வியாபார சம்பந்தப்பட்ட கடிதங்கள், 'ராமநாத் பப்ளிகேஷன்ஸ், சென்னை-2' என்று விலாசமிட்டு எழுதப்பட வேண்டும்.

பிரசுரத்திற்காக அனுப்பப்படும் கட்டுரைகள், போட்டோக்கள் முதலியவற்றை ஆசிரியர், 'திங்கள்', சென்னை-2 என்று விலாசமிடவும். காரியாலய சம்பந்தப்பட்ட விஷயங்களுக்கு காரியாலய உத்தியோகஸ்தர்களின் சொந்தப் பெயர்களில் கடிதப் போக்குவரத்து கூடாது.

'ஹாஸ்ய சம்பவம்', 'மறக்கமுடியாத சம்பவம்' குறித்து அனுப்பப்படும் விஷயதானங்கள் பற்றிய கடிதங்களுக்கு பதில் எழுத இயலாது.

காரியாலயம் :

17, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2.

கோட்டாகுடி பெரியநாயக்கா
ஸ்டி. கோவிந்தசாமி அவர்களின்
நூல் தொகுப்பு

# திங்கள்

மே 1956

ஆண்டு 1 ★ துன்முகி—வைகாசி ★ மாதம் - 5

இம்மாதம்


| | | |
|---|---|---|
| ஆதாரக் கல்வியின் லட்சியங்கள் | ... | 7 |
| பகவான் புத்தர் | ... | 12 |
| புத்தர் போதனை | ... | 15 |
| நான் கண்ட பௌத்த சிற்பங்கள் | ... | 17 |
| வெண்பாவிற் புகழேந்தி | ... | 43 |
| நிலப்புரட்சி இயக்கம் | ... | 46 |
| தமிழகத்தில் புத்த மதம் | ... | 50 |
| நீலமுகில் தவழும் நீலகிரி | ... | 54 |
| பிறை | ... | 65 |
| கவி ரவீந்திரர் | ... | 69 |
| காகம் | ... | 70 |
| சதுரங்கம் | ... | 76 |
| காவேரியின் பிறப்பிடம் | ... | 80 |
| மூவேந்தரின் யானைகள் | ... | 89 |
| கோடைகால பானம் | ... | 92 |
| எமனை வென்றவர்கள் | ... | 94 |
| உயிர்வாங்கும் ஊமத்தை | ... | 96 |
| தாலியும் பூணூலும் | ... | 100 |
| செயற்கை மழை | ... | 104 |
| மாங்கனி | ... | 105 |
| பழமொழிகள் | ... | 108 |
| உப்புச் செல்வம் | ... | 112 |
| பேனு நட்பு | ... | 114 |
| கல் ஆயுதங்கள் | ... | 117 |

படக் கட்டுரைகள் :

புத்த பகவான் — நீலகிரி பிரயாணம் — தலைக்காவேரி


அட்டைப்படம் : சென்னை மியூசிய புத்தர் சிலை

THINGAL, Tamil Monthly Magazine. Printed and Published by T. V. Ramanath, at RAMANATH PRESS, 17, General Patters Road, Madras-2. (Phone: 86001) Proprietors: RAMANATH PUBLICATIONS. Managing Editor: T. V. Ramanath.

திங்கள்

# வணக்கம்

'திங்கள்' வைகாசி இதழ் புத்தஜெயந்தி சிறப்பு மலராக வெளிவந்துள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். வைகாசி திங்களில் வரும் பௌர்ணமி தினம் புத்தபிரானின் ஜன்மதினம். உலகெங்கும் புத்தபிரானின் 2500-வது ஜன்மதினம் இந்த வைகாசி பௌர்ணமியன்று கொண்டாடப்படும்.

புத்தரின் ஜன்மதினத்தையொட்டி இம்மாதத் 'திங்க'ளில், ராஜாஜி, டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் ஆகியவர்களின் கட்டுரைகளும், 'கிருத்திகா' எழுதியுள்ள 'நான் கண்ட பௌத்த சிற்பங்கள்' என்ற விசேஷ கட்டுரையும் வெளியாகியுள்ளன. தென்னாட்டில் புத்தமதம் பரவியிருந்த வரலாற்றை 'தமிழகத்தில் புத்தமதம்' என்ற கட்டுரை விளக்குகிறது.

வினோபாவின் தமிழக விஜயத்தையொட்டி 'நிலப்புரட்சி இயக்கம்' என்ற கட்டுரையை வெளியிட்டிருக்கிறோம்.

தென்னாட்டில் கோடை வாசஸ்தலமான நீலகிரியின் அழகை நம்முன் படம்பிடித்துக் காட்டும் கட்டுரை 'நீலமுகில் தவழும் நீலகிரி.'

கௌதமரின் ஜன்மதினம் கொண்டாடப்பட்ட இம்மாதத்திலேயே, கவி ரவீந்திரரின் 95-வது ஜன்மதினமும் கொண்டாடப்பட்டதை நாம் அறிவோம். 'கவி ரவீந்திரர்' என்னும் சிறு கட்டுரை கவியின் ஞாபகார்த்தமாக வெளியாகியுள்ளது.

இவ்வளவு விசேஷ அம்சங்கள் தவிர, இவ்விதழில் வெளியாகியுள்ள 'பிறை', 'சதுரங்கம்', 'காகம்', 'மூவேந்தரின் யானைகள்', 'தாலியும் பூணூலும்', முதலிய கட்டுரைகளுக்கும், 'புத்த பகவான்', 'நீலகிரிப் பிரயாணம்', 'தலைக்காவேரி' ஆகிய படக் கட்டுரைகளுக்கும் வாசகர்கள் சிறந்த வரவேற்பளிப்பார்கள் என நம்புகிறோம்.

'திங்கள்' பத்திரிகைக்கு வாசகர்களிடையே ஒவ்வொரு மாதமும் ஆதரவு அதிகமாகிவருகிறது. நமது பத்திரிகையின் கொள்கையையும் சிறப்பையும் பாராட்டி ஏராளமான கடிதங்கள் வந்துகொண்டே இருக்கின்றன. ஒவ்வொரு 'திங்களு'ம் பல வருஷங்கள் போற்றிப் பாதுகாக்க வேண்டிய பொக்கிஷமாக அமைந்திருக்கிறது என்று ஒரு வாசகர் எழுதியுள்ளார். அதன்படியே ஒவ்வொரு இதழையும் அமைக்க முயற்சி எடுத்து வருகிறோம்.

# திங்களுக்குத் திங்கள்

சென்ற திங்களில் அரிசி, மிளகாய், எண்ணெய் போன்ற அத்யாவசிய பொருள்கள் விலை மிகவும் ஏறிவிட்டிருந்தன. நல்லெண்ணெய் விலை இரட்டிப்பாகவும் மிளகாய் விலை கிட்டதட்ட 80 சதவிகிதம் ஏறியுமிருக்கிறது. இந்த விலையேற்றம் திடீரென ஏறவில்லை. இந்த விலையேற்றத்திற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. முதன் மந்திரி ஸ்ரீ காமராஜ், பதுக்கல்தான் அரிசி விலை உயர்வுக்கு காரணமாக இருக்க வேண்டும் என்கிறார். இந்த அகவிலைகள் உயர்ந்து செல்வதற்குக் காரணம் குழப்பமான பொருளாதாரக் கொள்கைதான். நிச்சயமற்ற தன்மையைப்பற்றி மத்திய அரசாங்கத்திற்கு ராஜ்யசர்க்கார் எடுத்துக் கூறினால் நெருக்கடியை இப்போதும் தடுக்கலாம். புயல் வெள்ளம் போன்ற உற்பாதங்கள் சம்பவிக்கும் போது எவ்வளவு சுறுசுறுப்பும் ஜரூரும் காட்டப்படுகிறதோ, அவ்வளவு ஜரூர் விலைவாசிகள் உயர்வு விஷயத்திலும் சர்க்கார் காட்ட வேண்டும்.

* * *

இம்மாதம் 27-ந் தேதிமுதல் 29-ந் தேதிவரை காஞ்சீவரத்தில் 8-வது அகில இந்திய சர்வோதய சம்மேளனம் நடைபெறவிருக்கிறது. இதில் கலந்து கொள்ள ஆச்சார்யா விநோபாவே இம்மாதம் தமிழ்நாட்டிற்கு விஜயம் செய்கிறார்.

பூமிதான இயக்கத்தின் தற்போதைய லட்சியம் 1957க்குள் தேசம் முழுவதிலும் ஐந்து கோடி ஏக்கர் நிலதானம் வசூலிப்பதாகும். இதில் தமிழ் நாட்டின் பங்கு 25 லக்ஷம் ஏக்கர்.

* * *

ரஷ்யத்தலைவர்களான புல்கானின், குருஷ்சேவ் இங்கிலாந்துக்கு விஜயம் செய்து சமாதானத்தில் தங்களுக்குள்ள ஆர்வத்தை வெளிப்படுத்திவிட்டு, தங்கள் நாடு திரும்பி இருக்கிறார்கள்.

ரஷ்யத் தலைவர்கள் நேருஜீயின் பஞ்சசீலக் கொள்கையில் பரிபூர்ண நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள் என்பதை நிரூபிக்கும்வகையில் ரஷ்ய கம்யூனிஸப் பிரசார யந்திரமாகிய 'காமிங்

புத்தஜெயந்தியையொட்டி வெளியிடப்படும் விசேஷ தபால் தலை

பாம்'மை கலேத்துவிட்டார்கள். இருந்தும் அமெரிக்க ஜனதிபதி ரஷ்யப் போக்கில் அவ நம்பிக்கையையே தெரிவித்து வருகிறார்.

* * *

இலங்கையில் ஸ்ரீ பண்டார நாயகா தலைமையில் புது மந்திரி சபை ஏற்பட்டிருக்கிறது. இலங்கை இந்தியர் பிரச்னை இவருடைய முயற்சியால் சுமுகமாகவே தீர்க்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. லண்டனில் நடைபெறப்போகும் காமன்வெல்த் மகாநாட்டிற்குச் செல்லுமுன் ஸ்ரீ பண்டார நாயகா, நேருவை சந்தித்துப் பேசவிருக்கிறார். நேருவின் லட்சியப் பாதையில் செல்ல விரும்பும் ஸ்ரீ பண்டார நாயகாவின் ஆட்சி காலத்தில் இந்தியர் பிரச்னை தீர்ந்து, இலங்கைக்கும் இந்தியாவிற்கும் நல்லுறவு ஏற்படுமென்று எதிர் பார்க்கலாம்.

* * *

வாரிசுரிமை பற்றி ராஜ்ய சபை முடிவு, லோக சபையில் மாறியது. இதன்படி முதல் வாரிசு வரிசையில் தாயாருக்கு



புத்தர் ஞானம் பெற்ற போதி விருக்ஷம்-பூர்ண நிலவொளியில்

ஸ்தானம் கிடைத்திருக்கிறது தந்தை சொத்தில் மகளுக்கு சம உரிமை கிடைக்க வழி செய்யப்பட்டிருக்கிறது. ஸ்திரீயின் சொத்தில் பெண் பிள்ளையுடன் கணவனுக்கும் உரிமை உண்டு என்பது விளக்கப்பட்டிருக்கிறது.

* * *

இரண்டாவது ஐந்து வருஷ திட்டத்தில் முக்கியமாக தேசிய விஸ்தரிப்பு சமுதாய நல திட்டங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பகுதிகளில், ஸ்தல அபிவிருத்தி வேலைகளை நிறைவேற்றி வைப்பதற்கு அதிக அளவு பொறுப்புள்ளவையாய் ஒவ்வொரு கிராமத்திலும் சட்ட பூர்வமான பஞ்சாயத்துகள் நிறுவப்படும். *1960-61*-ல் கிராம பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை *2,44,564* ஆக உயரும். அபிவிருத்தி சம்பந்தமாக பஞ்சாயத்துகளிடம் விட உத்தேசித்துள்ள அலுவல்களாவன:

உற்பத்திக்கான வேலைத் திட்டம், புறம்போக்கு, தரிசு நிலங்கள், ஏரிகள் அபிவிருத்தி செய்தல், கிணறுகள், ரோடுகள் ஏற்படுத்துதல், கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தல், சிறு சேமிப்புகள், கால்நடை அபிவிருத்தி, நிலச்சீர்திருத்தம், நீதி பரிபாலனம் இவைகளிலும் பஞ்சாயத்துகளுக்கு முக்ய பொறுப்புகள் இருக்கும்.

* * *

புத்த ஜயந்தி ஞாபகார்த்தமாக இரண்டு அணு விலையிலும் *14* அணு விலையிலும் விசேஷத் தபால் பில்லைகள் வெளியிட ஏற்பாடாகி யிருக்கிறது. இவை *1956* மே *24*-ந் தேதியன்று தபாலாபீஸுகளில் விற்பனைக்கு வரும்.

★ நம் குழந்தைகளில்தான் நம் எதிர்காலம் இருக்கிறது; அவர்கள்தான் நம் அரும் பொக்கிஷங்கள். அவர்கள் வாழ்வு வளம் பெற வேண்டுமென்பதே...

# ஆதாரக் கல்வியின் லட்சியங்கள்

## தி. சு. அவனுசிலிங்கம்

இந்திய சர்க்கார் ஆதாரக் கல்வியின் பல்வேறு அம்சங்களையும் எடுத்துக் காட்டுவதற்காக ஒரு கண்காட்சியைப் புது டில்லியில் நடத்துவது பற்றி நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆதாரக் கல்வி முறை என்ற கருத்தைத் தேச பிதா நமக்கு அளித்து, இருபது வருஷங்கள் ஆகிவிட்டன; இந்திய சர்க்காரும் ராஜ்ய சர்க்கார்களும் ஆதாரக் கல்வியைத் தங்கள் கல்வித்துறைக் கொள்கையாக அங்கீகரித்துப் பத்து வருஷங்கள் ஆகிவிட்டன. இருந்தும் தேசத்தில் ஆதாரக் கல்வி அதிக முன்னேற்றம் காணுமலிருப்பது வியப்பையும் வருத்தத்தையும் ஊட்டுவதாயிருக்கிறது. அவ்வாறு முன்னேற்றம் தடைப்பட்டிருப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன; அவைகளில் சில காரணங்கள் நம் நாட்டில் உடலுழைப்பு சம்பந்தமாக வெகுகாலமாய் இருந்துவருகிற வெறுப்புணர்ச்சியால் ஏற்பட்டவையாகும்.

கடவுள் கிருபை இருக்குமானுல், மகத்தான, பெருமை மிக்க இந்தியாவை சிருஷ்டிக்கும் பேறு நமக்குக் கிடைக்கும். அதைச் செய்யவேண்டுமானுல் நாம் எல்லாரும் அப்பணியில் சேர்ந்து நின்று பாடுபடவேண்டும். நாம் நம் மக்களின் வறுமையை வேரறுக்கவேண்டும்; அறியாமை இருளை அழித்தொழிக்க வேண்டும். அதை வெறும் பிரசங்கங்கள் மூலமோ, வாய்ப்பேச்சுக்கள் மூலமோ, சர்க்கார் காரியாலய உத்தரவுகள் மூலமோ சாதித்துவிட முடியாது; கஷ்டப்பட்டு உழைத்துத்தான் சாதிக்கமுடியும். சொற்பகால சரித்திர வாழ்க்கையேயுள்ள இளம் நாடான அமெரிக்கா நாட்டு மக்கள் உலகத்திலேயே மிகவும் செல்வச்செழிப்புள்ளவர்களாக இருக்கிறுர்கள் என்றுல், பல நூற்றுண்டுகளாகப் பிற்போக்கின் சின்னமாக விளங்கிய ரஷ்யா இன்று ஒரு மாபெரும் வல்லரசாகத் தன்னை ஆக்கிக் கொண்டிருக்கிறது என்றுல், அதற்கு அந்நாட்டு மக்கள் செய்துள்ள கடும் உழைப்புத்தான் காரணம் ஆகும். ஆங்கே கோடிக்கணக்கான மக்கள் வயல்களிலும் தொழிற்சாலைகளிலும், மலைகளிலும் மைதானங்களிலும், தரையிலும், கடலிலும் அரும்பாடு பட்டு உழைத்திருக்கிறுர்கள். உழைப்பே செல்வம். மதிநுட்பத்துடன் செய்தவேலை, விஞ்ஞான பூர்வமான அறிவு விளக்கத்

### உற்பத்தி அம்சம்

கல்வி நிலையங்களுக்கு ஏதாவது ஒரு வகையில் அதிக வருமானம் கிடைத்தால் அது நமது நாட்டைப் போன்ற ஒரு எளிய தேசத்தில், வரவேற்கத்தக்க அம்சமாகவே இருக்கும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், ஆதாரப் பள்ளிக்கூடத்தில் வேலைத் திறமை, மாணவர் பெறுகிற உற்பத்தி சக்தியைப் பொருத்ததேயாகும் என்பதை நாம் மறக்கக் கூடாது. ஆதாரக் கல்வி ஆசிரியர் திறமைசாலியாக இருந்தால், சரிவர போதனை செய்தால், அவரது மாணவர்கள் பள்ளிக்கூட சமுதாயத்துக்கு உடனடியாக உபயோகப்படுகிற பல சாதனங்களை உற்பத்தி செய்யும் திறமை பெறுவார்கள் என்பது நிச்சயம்.

— ஸ்ரீமன் நாராயண்

துடனும், மற்றவர்களின் கூட்டுறவுடனும் செய்யப்பட்டால் பிரம்மாண்டமான பலன்களைத் தந்துவிடும். நம்நாடும் முன்னேறவேண்டுமானால் அதற்கு இது ஒன்றுதான் வழி.

### எது முக்கியம்?

நமக்கு நீண்டகாலமான பரம்பரை மரபு ஒன்று இருக்கிறது; உடல் உழைப்பை அம்மரபு மதித்ததே இல்லை. நம் குழந்தைகள் புதிய ஒரு உணர்ச்சி சூழ்நிலையில் வளர வேண்டும்; வேலை செய்வதற்கு விருப்பமும், அது பற்றிப் பெருமையும் கொள்ளக்கூடிய மனப்பான்மையை அவர்கள் பெற வேண்டும்; மற்றவர்களுடன் கூடிச் சேர்ந்து பாடுபடக் கற்றுக் கொள்ளவேண்டும்; நாம் மற்றவர்களுடன் பொருந்திப் பழகத் தெரிந்துகொள்ள வேண்டும்; பொது நன்மைக்காகப் பாடுபட முன்வரவேண்டும்; சமூகத்துக்காகவே நாம் உயிர்வாழ்கிறவர்களாக ஆக வேண்டும். மேலும், இப்போதைய நிலையில் நாம் நம் பிள்ளைகளுக்குத் தலைமைப் பதவி வகிக்கும் ஆற்றலையும், பொறுப்பை ஏற்று நடத்தும் சக்தியையும் உண்டுபண்ணுவது மிகவும் அவசியமாகும். இந்தப் பண்புகள் எல்லாம் இளமைப் பருவத்தில் சுலபமாக ஏற்படும்படி செய்யலாம்; அந்நோக்கங்களை நிறைவேற்றக்கூடிய பொருத்தமான கல்விமுறை மூலம் அவைகளை உண்டுபண்ணலாம். ஆதாரக் கல்வியாவது, இந்தத் தேவையைப் பூர்த்தி செய்விப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு முயற்சியாகும்.

சாதாரண ஆரம்பப் பாடசாலையில் படிப்பு முறையை விட ஆதாரக் கல்விப் பள்ளிக்கூட வேலைமுறை அதிகமாய் ரசிக்கக்கூடியதாகவும் இருக்கும்; சாதாரண பள்ளிக்கூடத்தில், ஆசிரியர் உற்சாகமில்லாத மாமூல்போக்கில் கற்பித்து வருவார்; பிள்ளைகளும் பள்ளிக்கூட வாழ்க்கையை ஜீவத்துடிப்புள்ளதாக ஆக்கக்கூடிய வேறெந்த முயற்சியும் இல்லாமல், அந்த பாடபோதனையைக் கட்டாயமாய்க் கேட்டுக்கொண்டிருக்கவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. அதற்கு மாறாக, ஆதாரக் கல்விப் பள்ளிக்கூடத்தில் எத்தனையோ விதமான நடவடிக்கைகளுக்கு இடமிருக்கிறது. ஆசிரியரின் மேற்பார்வையில் அங்குள்ள மாணவர்கள் தங்கள் வேலைகளைத் திட்டமிட்டு நடத்துகிறார்கள்; பள்ளிக்கூடத்

தைச் சுத்தம் செய்கிறார்கள்; தாங்கள் நட்டுவளர்க்கும் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுகிறார்கள்; பூச்செடிகளையும், பழச் செடிகளையும் வளர்க்கிறார்கள். தங்களைப் பல பிரிவுகளாகப் பிரித்துக் கொண்டு தங்கள் தலைவனைத் தெரிந்தெடுத்துக் கொள்கிறார்கள்; தங்கள் நடவடிக்கைக் குறிப்பெழுதி வருகிறார்கள். கல்வி அதிக சுவையுள்ளதாகிறது. புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது. ஏனென்றால் அது தங்களுக்கு நேரில் தெரிந்துள்ள விஷயங்களைப் பற்றியதாக இருக்கிறது. அவர்கள் தங்கள் பிரச்னைகளை விவாதிப்பதை நீங்கள் கேட்டால், அவர்கள் தாங்கள் நேரில் தெரிந்த விஷயங்களைப் பற்றிப் பேசுகிறார்கள் என்பதையும் வெறுமனே ஏட்டில் எழுதிப்படிப்பதைப் பற்றிப் பேசவில்லை என்பதையும் உணர்ந்து கொள்வீர்கள். அவர்கள் தங்கள் அனுபவத்தையே விவாதிக்கிறார்கள். அவர்கள் ஒரு கோஷ்டியாகச் சேர்ந்து இருப்பதால், அவர்களுக்குத் தங்கள் சக மாணவரின் மன உணர்ச்சிகளை உணர்ந்து கொள்ள முடிகிறது. மற்றவர்களின் உணர்ச்சிக்குப் பொருத்தமாக நடந்து கொள்ள முடிகிறது. இதன் பலனாய், பள்ளிக்கூட வகுப்பு அதிக அக்கறையை உண்டுபண்ணுகிற ஒரு ஸ்தலமாகிறது.

## கைவேலைக்கு முக்கியத்துவம்

ஆதாரக் கல்வி என்றால் சதா ராட்டை சுற்றிக்கொண்டே இருப்பதுதான் என்று சிலர் கருதுகிறார்கள். அது முற்றிலும் தவறு. பல பள்ளிக்கூடங்களில் நூல் நூற்புதான் முக்கியமான அடிப்படை வேலையாக வைக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மைதான் ஆனால், அப்படித்தான் இருக்க வேண்டும் என்ற விதி எதுவும் இல்லை. தோட்ட வேலை, நந்தவன வேலை முதலிய எத்தனையோ வேலைகளை ஆதாரக் கல்வியின் கேந்திர வேலையாக வைத்துக் கொள்ளலாம். பஞ்சு அதிகமாய்க் கிடைக்காத மலபார் போன்ற பிரதேசங்களில் கயிறு தயாரிப்பு வேலையை நூற்பு வேலைக்குப் பதிலாக வைத்துக் கொள்ளலாம். இதன் பிரதான கருத்து என்னவென்றால், குழந்தைகள் ஆரம்பம் முதலே ஏதாவதொரு ஆக்க வேலையில் பயிற்சிபெற வேண்டு வென்பதுதான். அதாவது அவர்கள் குழந்தைகள் தங்கள் கை வேலைத் திறமையையும், விஷயங்களைக் கண்கொண்டு பார்த்துத் தெரிந்து கொள்கிற

### நிரந்தரத் தொடர்புக்கு...

ஆதாரக் கல்வி காந்திஜியினுடையவும், சர்வோதய ஊழியர்களுடையவும் வெறும் ''செல்லக் குழந்தை'' அல்ல. ஆதாரக் கல்வியைத் தேசம் முழுவதிலும் அமுல் செய்தாக வேண்டுவது அவசியம் என்றே நான் கருதுகிறேன். இப்போது தேர்ச்சியுள்ள ஊழியர் இல்லாமையால், பல திட்டங்களை நம்மால் நடத்த முடியாமலிருக்கிறது. அதே சமயத்தில், நம் பள்ளிகளில் படித்து வெளிவருகிற மாணவர்களுக்கு வேலை கிடைக்காமலும் இருக்கிறது. ஆதாரக் கல்விதான் கல்வி முறைக்கும், பெரிய பொருளாதார—தொழில் அபிவிருத்தித் திட்டங்களுக்கும் இடையே உண்மையான, நிரந்தரமான தொடர்பை ஏற்படுத்தும்.

— ஸ்ரீமன் நாராயண்

சக்தியையும், இதர பொறிகளைச் செயல்படுத்தும் ஆற்றலையும் பெற்று, எந்த விஷயத்திலும் அழுத்தமான ஈடுபாட்டுடன் ஊன்றி வேலை செய்கிற பண்பையும் பெறவேண்டும் என்பதுதான் நோக்கம்.

### ஆசிரியர் பொறுப்பு

ஆதாரக் கல்வித்துறையில் ஆசிரியருக்கு உயர்ந்தபட்ச அறிவும், பொறுமையும் வேலைத் திறமையும் இருக்கவேண்டும். அவர் வெறுமனே சாதாரண புஸ்தகங்களை மட்டும் படித்துவிட்டால் போதாது. பள்ளிக்கூடத்தின் வேலைத்திட்டம் முழுவதையும் வகுத்து, பிள்ளைகளைப்பல பிரிவுகளாகப்பிரித்து, ஒவ்வொரு பிரிவுக்கும் ஏற்ற வேலைகளை அளித்து, வகுப்பில் தாம் போதிக்க விரும்புகிற விஷயத்தைக் குழந்தைகள் தங்கள் செயல்கள்மூலமும் அனுபவத்தின்மூலமும் தாங்களாகவே அறிந்துகொள்ளக்கூடியபடி செய்கிறவராக இருக்கவேண்டும். ஆதாரக்கல்வி நிலையங்களுக்கு உயர்தரத்திறமையுள்ள ஆசிரியர்கள் அவசியம். இதர கல்வித் திட்டங்களிற்போலவே, ஆதாரக் கல்வி விஷயத்திலும் ஆசிரியரைப் பொறுத்தே கல்வியும் அமைகிறது.

பொதுமக்கள் ஆதாரக் கல்வி பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுவது அவசியமாகும்; அவ்வாறு அவர்கள் தெரிந்துகொள்ளாவிட்டால், அது அபிவிருத்தியடையவே முடியாது. அதிலும் ஜனநாயக நாடான நம் நாட்டில் அது மிகவும் அவசியம். ''அரசாங்கம் மக்களுக்கு நன்மை செய்கிற அரசாங்கமாக இருந்தால் மாத்திரம் போதாது; தங்களுக்கு நன்மை செய்யப்படுகிறது என்பதை மக்கள் உணரும்படி செய்யவும் வேண்டும்'' என்பதாக ஒரு பெரிய ராஜதந்திரி கூறியிருக்கிறார். ஆதாரக் கல்வி குழந்தைகளுக்கு நல்ல கல்வி கிடைப்பதற்கு அஸ்திவாரம் அமைத்துவிட்டால் மாத்திரம் போதாது; பொதுமக்களும், முக்கியமாக அக்குழந்தைகளின் பெற்றோர்களும் அக்குழந்தைகளின் தேவையை எப்படிப் பூர்த்தி செய்கிறது என்பதை உணரவும் வேண்டும்.

### கஷ்டங்கள்

ஆதாரக் கல்வியைப் பரப்புவதிலுள்ள ஒரு கஷ்டம் நிர்வாகக் கஷ்டம். கல்வித்துறையில் உயர்தர நிர்வாகப் பதவிகளை வகிப்பவர்கள் வேறொரு விதமான கல்வியைப் பயின்றவர்கள்; சட்டை மடிப்பு கலையாத வேலை பார்ப்பதே சிறப்பு என்று நம்புபவர்கள். அதனால் அவர்கள் தங்கள் குழந்தைகளை ஆதாரப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவதில்லை. இதனால் கிராம விவசாயிகள் மனதில் ஒரு தப்பெண்ணம் ஏற்பட்டுவிடுகிறது. தங்கள் குழந்தைகள் தலைமுறை, தலைமுறையாக வேர்வை சொட்ட வயலில் உழைத்துப் பாடுபடவும், மற்றவர்களின் குழந்தைகள் சொகுசாக வாழவும் சூழ்ச்சி செய்வதற்காக வகுக்கப்பட்ட திட்டமே ஆதாரக் கல்வித் திட்டம் என்று அவர்கள் நினைத்துவிடுகிறார்கள். எனவே, நாம் ஆதாரக் கல்வி விஷயத்தில் தீவிர அக்கறை கொள்வதாயிருந்தால், கல்வித்துறையில் உயர் பதவியிலிருப்பவர்கள் இந்தக் கொள்கையில் நம்பிக்கை கொள்ளும்படி செய்யவேண்டும்.

இப்புதிய திட்டம் வெற்றி பெறுவது அதில் ஈடுபடுகிற

ஆசிரியர்களைப் பொருத்திருக்கிறது. ஆசிரியர்கள் மோசமானவர்களாயிருந்தால் எவ்வளவு நல்ல திட்டத்தையும் கூடப் படுமோசமான திட்டமாக ஆக்கிவிடலாமென்பது முற்றிலும் உண்மைதான். நம் நாட்டில் ஆசிரியப் பதவியாவது வேறு போக்கும் புகலுமற்றவர்களுக்கு ஏற்ற பதவி என்ற நிலையிலிருப்பது துரதிர்ஷ்டமான நிலைதான். வேறு வேலைகளுக்கெல்லாம் முயன்று பார்த்து அவை கிடைக்காத பட்சத்தில்தான் வாத்தியார் வேலைக்கு வருவது என்ற நிலையிலிருக்கிறது. தேசமக்கள் இந்த நிலைமையின் மோசமான போக்கை உணரவேண்டும்.

நம் குழந்தைகளில்தான் நம் எதிர்காலம் இருக்கிறது; அவர்கள்தான் நம் அரும்பொக்கிஷம். நம் தேசத்தின் எதிர்கால நல்வாழ்வை நாம் சிறிதும் யோக்கியதை இல்லாதவர்கள் கையிலும், ஆசாபங்கமுற்றவர்கள் கையிலும் ஒப்படைத்துவிட முடியாது. ஆசிரியர்கள் நியாயமாக நடத்தப்படவேண்டும் என்று பொதுஜன அபிப்பிராயம் வற்புறுத்தவேண்டும். ஆசிரியர்களின் அந்தஸ்தை நாம் எந்த அளவுக்கு உயர்த்துகிறோம் என்பதைப் பொருத்தே ஆதாரக் கல்வியின் எதிர்காலமும், நாட்டின் எதிர்காலமும் அமைந்திருக்கின்றன; தேசத்திலுள்ள மிகச் சிறந்த ஆணும் பெண்ணும் அந்த வேலையை ஆர்வத்தோடு மேற்கொள்ளுகிற நிலையை நாம் உண்டு பண்ணவேண்டும். ★

## கவிகளும் அன்னமும்

கவிச்சக்ரவர்த்தி கம்பன் தமிழ்க்கவி. டெனிஸன் ஏரி நாட்டுக் கவிகளுள் ஒருவர். இருவரும் கவிதையுள்ளம் படைத்திருந்ததால், தங்கள் கவிதையில்ஓர் அன்னப்பறவையை எவ்வளவு அழகாக உவமித்திருக்கின்றனர்!

டெனிஸன் 'ஆர்தரின் இறுதி' என்னும் தன் கவிதையில் "அன்னப்பறவை தன் வெண்ணிறச் சிறகுகளை விசிறிக்கொண்டு நீரில் நீந்துவதுபோல, ஆர்தரை ஏற்றிச் செல்லும் படகு தனது துடுப்புகளை ஆட்டி அசைத்துக்கொண்டு மிதந்து சென்றது" என்று அழகுற வர்ணிக்கிறார்.

டெனிஸனுக்கு ஒன்பது நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த கவிச்சக்கரவர்த்தி கம்பர், தன் இராமாயண காவியத்தில் இதே அன்னத்தை எவ்வளவு நயம்பட உவமித்திருக்கிறார்!

"வடிகின நெடுநாவாய் முரிதிரை நெடுநீர்வாய்க்,
கடிதினின் மடவன்னக் கதியது செலநின்றார்."

கவிகளின் பிறப்பிடமும் சூழ்நிலையும் மாறுபடலாம். ஆனால் கவித்வம் மாறிவிடுமா?

அகில உலகத்தாலும் புகழப்பட்டு அன்பு பாராட்டப்பட்ட புத்த பகவான் தம்மை ஒரு போதுமே கடவுளின் குமாரர் என்றோ, அவதாரமென்றோ, தூதுவர் என்றோ கூறியதே இல்லை. தாம் ஒரு புதிய மதத்தை ஸ்தாபிப்பதாகவும் கூறவில்லை. புத்த கிரந்தமான 'தம்மபத'த்தின் இருபத்தாறுவது வர்க்கத்தில் ஒரு மனிதன் எப்படி நடந்து உண்மையான பிராமணனாகத் தகுதிபெறலாமென்பது விளக்கப்பட்டிருக்கிறது. பிராமணனை ஒழித்துவிட விரும்பியவரின் வார்த்தையாக அது அமையவில்லை; ஹிந்துக்கள் மேற்கொண்டொழுகிய தத்துவங்களை ஒழித்துவிட விரும்பியவரின் வார்த்தையாகவும் இல்லை. கர்மவினைத் தத்துவத்தை அவர் எதிர்க்கவோ, மறுக்கவோ இல்லை; அதற்கு மாறாக அவர் அதை வற்புறுத்தினார்; மனதாலும் செயலாலும் ஆற்றப்படுகிற நல்வினை, தீவினைகளுக்குக் கட்டாய விளைவுகள் உண்டு என்பதை அவர் வற்புறுத்தினார்.

ராஜாஜி

அவர் ஆத்மா உண்டு என்பதை மறுக்கவே இல்லை; அது நித்தியமான அழிவில்லாத வஸ்து என்பதையும் புனர்ஜன்மம் உண்டு என்பதையும் அவர் ஆமோதித்துக் கூறியிருக்கிறார். அவர் கூறிய முக்தி நிலையான நிர்வாண நிலையானது, ஒருநதி சமுத்திரத்தில் கலப்பது போன்றதுதான். சூன்யமாய், பாழாக முடிகிற நிலையல்ல. அவர் அறிவு விளக்கம் பெற்ற ஒரு ஹிந்து ஆசிய மக்களுக்குப் போதிக்கிற பாணியில் தான் பேசினாரே தவிர, நாஸ்திகர் போல் பேசவில்லை. அவர் உலகத்தில் மிக மகத்தான அதிசயத்தை நிகழ்த்தினார். எப்படி என்றால் மக்களின் மனதை மாற்றினார். கொடுமையான—கடினமான ஹிருதயத்தை இரக்கமும் அருளும் உள்ளதாக ஆக்கினார்.

அவர் நிரந்தரமாக இருந்து வருகிற மறைபொருள்களைப் பற்றி விவாதிக்கவோ அவைகளைத் தெளிவுபடுத்தவோ மறுத்தார். கடவுளும், உயிரும்—பரமாத்மாவும் ஜீவாத்மாவும் ஒன்றுதானா, அல்லது இரண்டுதானா, இரண்டில் ஒன்றா என்று அத்வைதம், துவைதம், விசிஷ்டாத்வைதம் முதலிய தத்துவ விளக்கம் கூற மறுத்தார். ஆனால், அவர் வேதாந்த மார்க்கத்துக்கு விரோதமானவர் என்றோ, அதை மறுப்பவர் என்றோ கூறுவதற்கில்லை. அவர் போதனை உண்மையான தன்னடக்கமும், உண்மை

யான ஞானமும் நிறைந்த போதனையாகும். புத்தரை ஸ்ரீ கிருஷ்ணனைப் போலவே விஷ்ணுவின் அவதாரம் என்று கூறிய ஹிந்துக்கள், வெறும் ஏமாற்றுத் தந்திரத்தைக் கையாளவில்லை, அவரது உண்மை நிலையை உணர்ந்த பக்தியுணர்ச்சியால்தான் அவ்வாறு செய்தார்கள்.

கௌதம சாக்கிய முனிக்கு 2500 வருஷத்துக்குப் பிறகு இந்தியா அளிக்கக்கூடிய பாராட்டு மெய்ஞ்ஞானத்தை உணர்ந்த, போதித்த இதர ரிஷிகள், முனிவர்கள் வரிசையில் அவருக்குள்ள ஸ்தானத்தை சந்தேகத்துக்கிடமின்றி ஸ்திரப்படுத்தி விடுவதுதான்.

### புத்தர் போதனைகள்

புத்தர் தன் போதனையால் நம் அகக்கண்ணைத் திறக்க முயன்றார். அகக்கண்ணைக் கொண்டு பார்த்தால்தான் நாம் மற்றப்படி நமக்குத் தெரியமுடியாத, நம் பார்வையிலிருந்து மறைந்து நிற்கிற 'எல்லா ஜீவன்களும் ஒன்றுதான்' என்கிற மகத்தான உண்மையைப் பார்க்கமுடியும். 'நான் வேறு, நீ வேறு, அவன் வேறு, அவள் வேறுதான்'. ஆனால் உபநிஷத்துக்களை உபதேசித்த ரிஷிகளும் (கீதையை உபதேசித்த) ஸ்ரீ கிருஷ்ணனும், ''பிறரில் உன்னைப் பார், உன்னில் பிறரை நீ கண்டுகொள்'' என்று போதித்தார்கள். அதுதான் சத்திய நெறி, பேரின்ப நெறி என்று அவர்கள் கூறிவந்திருக்கிறார்கள்.



பகவத்கீதையிலும் இதே உபதேசம்தான் கண்டிருக்கிறது. ''யோகத்தில் கலந்தவன் எங்கும் ஸமப்பார்வையுடையவனாய், எல்லா உயிர்களிடத்தும் தானிருப்பதையும் தன்னுள் எல்லா உயிர்களுமிருப்பதையும் காண்கிறான்'' இது வெறும் ஞான உபதேசம் போல் தோன்றும். நாம் நம் மனதில் இரக்கத்தை உண்டு பண்ணிக்கொண்டு அருள் நோக்கோடு பார்த்தால், பிறரில் நம்மையும், நம்மில் பிறரையும் காணலாமென்று புத்தர் போதித்தார். நாம் நம் மனதைக் கல்லாக்கிக்கொண்டால் நம் கண்கள் மூடிவிடுகின்றன; நாம் குருடர்களாகி விடுகிறோம். நாம் இரக்கத்தால், அன்பால் கண்ணீர் சுரந்த கண்களோடு பார்க்கும்போதும், ரிஷிகளும் ஸ்ரீ கிருஷ்ணனும் நாம் எதைப் பார்க்கவேண்டுமென்று கூறினார்களோ, அதைக் காண்கிறோம். இரக்கத்தை மேற்கொள்ளாத போதுதான், மனித பரம்பரையின் மகத்தான சொத்தாகிய அருளைக் கைக்கொள்ளாத போதுதான், நாம் கண்பார்வை இழந்து குருடாகி விடுகிறோம்; உலகம் இருளில் மறைந்து விடுகிறது. சுயநல ஆசைதான் குருட்டுத் தன்மை.

இரக்கம்தான், பொருள்களைப் பிரித்துவைக்கிற மாயை என்னும் திரையை ஊடுருவிப் பார்ப்பதற்கு சக்தி ஊட்டு

கிற பூரணஒளி. அத்வைதத்தை சுலபமாகப் போதிக்கிற ஆச்சாரியாரும், மிகவும் காரிய சாத்தியமான முறையில் போதிக்கிற ஆச்சாரியாரும் புத்தர்தான் என்று சொல்லலாம். கீழே விழுகிற கல்லை கவனித்து இயற்கையின் உண்மைத் தத்துவத்தை உணரும்படி வெறுமனே பூமியின் ஆகர்ஷண சக்தியை மாத்திரம் அறிந்தால் போதாது என்பதை — அவர் போதித்தார். இரக்கம்-அருள்-தான் அத்வைதம்; கடின சித்தமோ, வெறும் தர்க்க வாதமோ அல்ல.

அத்வைதம் வெறும் தத்துவ விசாரணை மாத்திரமல்ல; வாழ்க்கை அனுஷ்டான ஒழுக்கமுறையும் ஆகும். அதை எப்படிக் கையாளுவது என்றால், இரக்கத்தைக் கடைப்பிடித்துத்தான் கையாளவேண்டும். அதுதான் புத்த தர்மம். சாமானிய, படிப்பறிவில்லாத ஏழை எளியவர் முதல், சகல பேர்களும் பச்சாத்தாபம் என்ற இனிமையான, சர்வ உலகக் கோட்பாட்டை மேற்கொண்டு உண்மையை உணர்வதற்கு விடுக்கப்பட்ட அழைப்புதான் அவரது போதனை.

## தென்னிந்தியாவில் வியாபகம்

ஒரு காலத்தில் பௌத்தம் தென்னிந்தியாவில் நன்றாகப் பரவி, மன்னர்களின் ஆதரவையும் பெற்றிருந்தது என்பதற்கு ருஜுக்கள் இருக்கின்றன. தமிழ் உன்னத நிலையில் இருந்த காலத்தில் தமிழ் நாட்டில் புத்தர் போதனைகள் நெடுகிலும் பரவிச் செழித்து வளர்ந்து வந்தன; அவைகளைத் தழுவி நடந்தவர்கள் புத்தரின் சிறந்த போதனையான கொல்லாமை விரதத்தை அனுஷ்டித்து வந்தார்கள். இன்றும் தமிழில் முழு பௌத்த இலக்கியங்கள் இருக்கின்றன. அவை தவிர, இலக்கணங்களிலும் யாப்பு நூல்களிலும் மேற்கோள்களாகக் காட்டப்பட்ட மிக அருமையான பகுதிகள் மறைந்துபோன இலக்கியங்களின் பகுதிகள், பல இருக்கின்றன. அவைகளில் ஒரு பகுதி இங்கே குறிப்பிடப்படுகிறது.

"அருள் வீற்றிருந்த
திருநிழற் போதி
முழுதுணர் முனிவ
நிற்பரவுதும் தொழுதக
ஒரு மனம் எய்தி
இருவினைப் பிணிவிட்டு
முப்பகை கடந்து நால்
வகைப் பொருள் உணர்ந்து
ஓங்கு நீர் உலகிடை யாவரும்
நீங்கா இன்பமொடு
நீடு வாழ்கெனவே".

*(டெல்லி வானொலி நிலயத்தாரால் ஒலிபரப்பப்பட்டது)*

### சித்தார்த்தா!

கௌதமரின் இயற்பெயர் சித்தார்த்தர் என்பது. சின்னஞ் சிறு சிசுவாக இருந்த போது, அவரது ஜாதகத்தைக்கணித்த யோகிகள், அவர் உலகரக்ஷகராக விளங்கவிருக்கிறார் என்பதைக் கண்டு 'சித்தார்த்தர்' என்று பெயரிட்டனர். —தன் மனவிருப்பங்களைப் பூர்த்தி செய்து கொள்ளும் சக்தி பெற்றவன்' என்பதே இதன் பொருள்.

★ புத்த ஜயந்தியை முன்னிட்டு இக்கட்டுரை

# புத்தரின் போதனைகள்

டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்

உலகத்தில் பகுத்தறிவு வாதி என்று யாரையாவது கூற லாமென்றால் அது புத்தர்தான்; அவரை விடச் சிறந்த பகுத் தறிவுவாதி கிடையாது. அவர் ''எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு'' என்பதையே வற்புறுத்தினர்.

அறிவுக் கண் கொண்டு உல கத்தைப் பார்த்தால் ஒன்றுமே நித்தியமாயில்லையே என்று தோன்றும்; பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடு ஆகியவை சங்கிலித் தொடர் போல் வரு வது தெரியும். இதுதான் வாழ்வா, வேறு நீடித்த, நிரந் தர உண்மை எதுவுமே இல்லையா என்ற கேள்வி எழும்.

நிரந்தர உண்மை உண்டு என்பதையும், மனிதன் காலத்தை வென்று, நித்திய ஜீவியாக இருக்க முடியும் என் பதையும் அறிய வழியுண்டு. அந்த அறிவுதான் உண்மை அறிவு; மெய்ஞ்ஞான போதம். அந்த போதம் கிடைத்துப் புத்தி பெற்றவனே முத்தி அல் லது ''நிர்வாண'' நிலையை அடைவான்.

புத்தர் வெறும் சித்தாந்தி அல்ல: தம் கொள்கையை விடாப்பிடியாய்ப் பிடித்துக் கொண்டிருந்தவரல்ல. அவர் தாம் கண்டவற்றை மற்றவர் களுக்கும் கண்டு உண்மை தெரியும்படி கூறினர். ஒவ் வொரு நிகழ்ச்சியின் காரண காரியத் தொடர்புகளை உணர்ந்து கொள்ளும்படி கேட் டுக் கொண்டார். எல்லாம் ஒரு நியதிப்படி நடப்பதை உணரலாமென்று அவர் கூறினர்.

### தர்மம்

தர்ம வழியே அறிவு வழி என்று புத்தர் போதித்தார். இரக்கமே, அருளே தர்மத் துக்கு அடிப்படை. உபநிஷத் துக்கள், தர்மம், தயை, தானம் ஆகியவற்றின் முக்கியத்துவத் தைப் போதித்தன. புத்தரும் அவைகளையே போதித்தார். தர்ம முரசைக் கொட்டி, சங் கத்தை முழக்கி, தர்மக் கொடி யை உயர்த்தி, தர்ம வழியில் நடக்க வேண்டும்.

### சுய அனுபவம் அவசியம்

ஒவ்வொருவரும் சுய அனுப வத்தின் மூலம் மெய் உணர்வை உணர வேண்டும் என்றுதான் புத்தர் போதித்தார். தாம் அறிந்த எல்லாவற்றையும் அவர் ஒளிக்காமல் கூறினர். ஆனல், தாம் கூறியவற்றை யாரும் அப்படியே நம்பி நடக்க

வேண்டாம் என்றும், ஒவ்வொருவரும்சுயஅனுபவத்தைக் கொண்டு உண்மையை அறிய வேண்டுமென்றும் அவர் கூறினார். மெய்ஞ்ஞானம் மற்றொருவர் போதனையால் வருவதல்ல; மெய் உணர்வால், தன் அனுபவத்தால் பெறவேண்டியதாகும்.

எனவே, ஒவ்வொருவரும் தர்மநெறியை, ஒழுக்க நெறியைக் கடைப்பிடித்து முக்தியை — ''நிர்வாண'' நிலையை — அடைய வேண்டும் என்று புத்தர் மக்களுக்குக் கூறினார். ''நிர்வாண நிலை'' என்ன என்பதை அவர் விளக்கவில்லை; தாம் அதை விளக்கி, மற்றவர்கள் அதை அப்படியே பிரமாணமாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதுதான் அவர் கருத்து. தம் பேச்சைப் பிரமாணமாக கொண்டால் அதே போல் மற்ற விஷயங்களையும் பிரமாணமாகக் கொள்ளலாமல்லவா? அந்த நிலை ஏற்படக் கூடாது என்பதுதான் அவர் கருத்து.

அதனால்தான் அவர் நடுவழியை—மத்திய மார்க்கத்தை—வற்புறுத்தினார். சுய அனுபவம், பகுத்தறிவு ஆராய்ச்சி, ஒழுக்கநெறி ஆகியவைகளையே அவர் வற்புறுத்தினார்.

புத்தர் போதனைகளை யாரும் ஆட்சேபிப்பதற்கில்லை. ஆனால், எல்லா மதங்களையும் போல் பௌத்த மதமும் பிறகு தர்க்க வாதத்திலும், வறட்டு வேதாந்தத்திலும், துவேஷம், மனஸ்தாபம் முதலியவைகளிலும் அமிழ்ந்து விட்டது. ★

(டெல்லி வானொலி நிலையத்தாரால் ஒலிபரப்பப்பட்டது)

## அங்கதம்

ஒருவருடைய குறையையோ ஒரு சமூகத்தின் குறையையோ, அவரது நெஞ்சில் உறுத்தும் வண்ணம் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் கூறுதல் 'அங்கதம்' எனப்படும். இதையே ஆங்கிலத்தில் (Satire) என்கிறோம். வெளிப்படையாகக் கூறுதலை 'செம்பொருள் அங்கதம்' என்றும், கருத்தை உள்ளடக்கிக் கூறுதலை 'பழிகரப்பு அங்கதம்' என்றும் இருவகைப்படுத்தியுள்ளனர். மறைந்த மொழிகளால் கயவருடைய அறியாமைக் குணங்களை நகைச்சுவை தோன்ற இடித்துரைத்தலே 'பழிகரப் பங்கதம்' (Satire) ஆகும். திருக்குறளில்,

> ''தேவர் அனையர் கயவர் அவருந்தாம்,
> மேவன செய் தொழுகலான்''

என்கிறார் வள்ளுவர். வஞ்சக நெஞ்சம் படைத்த கயவர்களை தேவருக்கொப்பாக நகைச்சுவை ததும்ப அங்கதமாக இடித்துக் கூறுகிறார். தேவர்கள் தம்மையாரும் கட்டளை யிடாதவாறே தங்கள் கடமைகளைச் செய்து வருவதுபோல, வஞ்சக நெஞ்சினர் தன் மனம்போன போக்கில் செய்யும் செயலின் நன்மை தீமைகளைப் பகுத்தறியாமல் செய்கின்றனர் என்பதையே 'பழிகரப் பங்கத'மாகக் கூறுகிறார்.

★ பகவான் புத்தரின் 2500-வது ஜன்ம தினம் இம்மாதம் உலகெங்கும் கொண்டாடப்படுகிறது. அவரது பொன்மொழிகளை நினைவுபடுத்திக்கொள்ள வேண்டிய பொன்னுள் இந்த வைகாசி பௌர்ணமி தினம். பௌத்த சிற்பங்களையும் அவற்றின் சிறப்பையும் விளக்கும் இக்கட்டுரை புத்த ஜெயந்தியை யொட்டி பிரசுரிக்கப்பட்டுள்ளது.

# நான் கண்ட பௌத்த சிற்பங்கள்

" கிருத்திகா "

காளிதாசனை வாசித்தவர்களுக்கு மால்வா பிரதேசத்தின் அழகைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. வெறும் அழகை மாத்திரம் அவன் வர்ணிக்கவில்லை. ஒரு ஓவியனைப் போல், அவன், இயற்கையிலுள்ள வர்ண ஜால அமைப்பையும், அது செய்யும் விந்தைகளையும் கவனித்தான். அவனைப் போலவே, பூமாதேவி மனமுவந்து தந்திருக்கும் இக்கருவிகளை, சாஞ்சி சிற்பிகளும் கண்டிருக்க வேண்டும். கிழக்கு மால்வா பிரதேசத்திலுள்ள சாஞ்சி மலைமீது ஏறும் பொழுது, அந்த இடத்தின் பொலிவு என் மனதில் இவ்வித சிந்தனைகளைக் கிளப்பின.

மலை ஏறும் பொழுதே என்னைப்போல அச்சிற்பிகளும் அங்கேயுள்ள கல் வெட்டுக்களின் வர்ண அழகைக் கண்டிருக்க வேண்டும். வஸந்தகாலத்தில் அம்மலையிலுள்ள அடர்ந்த காட்டில் வளையவருகிறுன் பௌத்த பிக்ஷு. அக்கற்களைக் கண்டவுடன் அவனுடைய அகத்தில் புதைந்து கிடக்கும் கற்பனைப் பொறி கொழுந்து விடுகிறது. அக்கற்கள், நிழலில் சாம்பல் நிறத் தோற்றமும், இளம் வெயிலில் ரோஜா நிறத் தோற்றமும், வெய்யலில் மஞ்சளோ, வெண்மையோ கலந்த வர்ணமுடனும் காட்சியளிக்கின்றன. என்ன அபூர்வமான பொருள்! அவைகளை எடுத்துச்

பலாச மர நிழலில் மாயாதேவியும் சிசு சித்தார்த்தனும்



சாஞ்சி கிழக்குத் தோரண
வாசலிலுள்ள சிற்பம்

செதுக்கினுல் நிழலுடன் வர்ணம் போராட, எத்தனை அழகிய சித்திரங்கள் உருவாகும்! சுற்றுமுற்றும் பார்த்தான் துறவி: வானளாவும்பகுள மரங்கள் பச்சைப் பசேலென்று வளர்ந்திருந்தன. மலையில் ஒரு பக்கத்தில் காடும், மற்ருெரு பக்கத்தில் சமமான வெளித்தரையும் இருந்தன. ஆங்காங்கு, காளிதாசன் வர்ணித்திருக்கும் கிம்சுக மரங்கள் (பலாச மரங்கள்) நவயுவ கோலத்தில் காட்சியளித்தன ரத்தவர்ண பலாச புஷ்பத்தின் அழகு, அவனை ஈர்த்தது. பலாச மரத்தின் நிழலில் தானே அன்று மாயா தேவி புத்தரை ஈன்ருள்? அவன் சமபூமியான அந்த விஸ்தாரப் பரப்பை நோக்கி நடந்தான். அங்கே அசோக சக்கரவர்த்தியின் ஸ்தூபம் தனிமையில் நின்றது. அதற்கு அழகு கொடுக்க ஆசைப்பட்டான் — ஊக்கம் கொண்டான் — கனவு கண்டான்.

நானும் மலை ஏறிவிட்டேன். என் கனவும் கலைந்தது. என் எதிரில் பிரசித்தி பெற்ற சாஞ்சி ஸ்தூபம் காக்ஷியளித்தது. அசோகர் காலத்தில் சின்ன செங்கல் ஸ்தூபம் ஒன்று மாத்திரம் இருந்த அந்த இடத்தில், இப்பொழுது எத்தனைவித கட்டடங்கள்! அங்கே ஸ்தூபங்கள் இருந்தன. இடிந்த கோயில்களும், மண்டபங்களும் இருந்தன. அழகான அசோகஸ்தம்



போதி விருக்ஷத்தினடியில் புத்தர்—புத்தகயாவில்

பங்கள் இருந்தன. பழமையி ஞல் சிதைந்து போன பல பௌத்த விஹாரங்களுமிருந் தன. அசோக சக்கரவர்த்தி காலத்திற்குப் பிறகு இந்த இடத்தில் மடங்களும் கோயில் களும் வெகுவாக விருத்தி யடைந்து வந்திருக்கவேண்டும். அங்கிருக்கும் அதிசயங்கள் யாவையும் பற்றிச் சொல்ல இயலாது. அதனுல் பெரிய ஸ்தூபத்தைப் பற்றியும் அத னுடைய வேலைப்பாட்டைப்பற் றியும் மாத்திரம் சொல்லு கிறேன்.

அசோகன் காலத்தில் இப் பிரதேசத்திலுள்ள முக்கிய பட் டணம் விதிஸா. தற்போது இப்பட்டணத்தின் பெயர் பிலஸா. தகப்பனுரால் உஜ்ஜ யினியின் இளவரசராக நியமிக் கப்பட்டான் அசோகர். உஜ்ஜயி னிக்குச்செல்லும்போது அசோ கன் விதிஸாவிலுள்ள ஒரு வியாபாரியின் மகளைக்கண்டு காதல் கொண்டானும்; தேவி யென்ற அந்தப் பெண்ணை மண மும் செய்து கொண்டானும். அவளுடைய சொந்த ஊரின் அருகில் அசோகன் இந்த ஸ்தூ பத்தைக் கட்டினுன் என்று தெரியவருகிறது. சாதாரண மாக கௌதமரையோ, அவ ருடைய சிஷ்யர்களையோ ஆரா திக்கவே பௌதர்கள் ஸ்தூபங் கள் கட்டினுர்கள். சாஞ்சியி லும் இன்னும் வேறு இடங் களிலும், இவர்களுடைய அஸ்தியும் சாம்பலும் சிறு பெட்டிகளில் கிடைத்துள்ளன. அனேகமாக இப்பெட்டிகளை ஸ்தூபத்திற்கு நடுவே புதைத் திருப்பார்கள். சாஞ்சி ஸ்தூ பம் அசோகனின்தேவி ஞாப கார்த்தமாகவோ, அல்லது ஒரு புண்ணிய சம்பவத்தைக் குறித்தோ கட்டப்பட்டிருக்க



ருசி நகரத்தில் அசோகன் கட்டியுள்ள புத்தபிரான் கோவில்

லாம். முதன் முதல் அசோக னுல் செய்யப்பட்ட ஸ்தூபம் சிறியதாகவும் செங்கலாலும் செய்யப்பட்டிருந்ததாம். அசோகனுக்குப் பிற்பாடு வந்த பௌத்த பக்தர்கள் இதை பெரி தாகவும் கற்களாலும் கட்டி னுர்களாம். கி. பி. முதல் நூற் ருண்டில் சாதவாகன ஆந்தி ரர்கள் இந்த பிரதேசங்களை ஆண்டு வந்தார்கள் என்றும், அவர்களால்தான் சாஞ்சி தோரணங்கள் செய்யப்பட் டன என்றும் தெரிகிறது.

சாஞ்சி பெரிய ஸ்தூபம், ஒரு பிரம்மாண்டமான பாதி கோழி முட்டை போன்ற கல்வடிவம். அதைச்சுற்றி உயர்ந்த மேதியும் பிறகு சிறிய பிரதக்ஷிண பாதை



சாரநாத்தில்—போதிசத்துவரின் உபதேச நிலை

யும் இருக்கின்றன. இச்சிறு பிராகாரத்தைச்சுற்றி அழகிய கல்தூண்கள் கொண்ட ஒரு பந்தியும் இருக்கிறது. இந்த வேதி அல்லது வேலியில் அதிக வேலைப்பாடு ஒன்றுமில்லாவிட்டாலும் அதனுடைய பிரமாணம் கச்சிதமாக அமைந்திருக்கிறது. ஆனால் ஸ்தூபத்தின் நான்கு புறங்களிலுமுள்ள தோரண வாசல்களில் பிரமாத சிற்பவேலைகள் நிரம்பியிருக்கின்றன. மேன்மை பொருந்திய பெரிய ஸ்தூபம் தெளிவான ஏகாந்தத்தில் நிர்மலமாக சோபிக்க அந்த சாதாரண தோற்றத்திற்கு ஒரு சிறப்புக் கொடுப்பது போல் நான்கு புறத் தோரணங்களும் பிரகாசித்தன. சாஞ்சிதோரண வாசல்கள் அற்புதமானவை. அவைகளை சிருஷ்டித்த கலைஞர்கள் அமரர்களே. சதுரங்கத் தூண்களிலும், தோரணச் சட்டங்களிலும் அருமையான சிற்பங்கள் இருக்கின்றன. சிற்பக் கலைக்கே சிகரங்களாக விளங்கும் இவை, புத்தருடைய அவதாரங்களையும், சரித்திர வரலாற்றையும், பௌத்த பக்தர்களை ஒட்டிய விவரங்களையும், குறிப்பிடுகின்றன. ஏடுகளைப் போல் அழகாகக் கதைகள் சொல்லும் இச்சிற்ப சித்திரங்களில் சிலவற்றைப்பற்றி வெளியாகியுள்ள விவரங்களை புகைப் படங்கள் மூலம் விளக்குகிறேன்.

(1) இந்தப் படம் தெற்குத் தோரண வாசலிலுள்ள இரண்டு சட்டங்களைக் காட்டுகிறது. மேலேயுள்ள சட்டத்தில் யானைகள் கூட்டங் கூட்டமாகத் தெரிகின்றன. புத்தர் வெள்ளையானை அவதாரமெடுத்த கதை இது. பார்க்கும் கண்களுக்கு இது சிற்பமாகத் தோன்றாது. ஏதோ உயர்ந்த ரத்ன கம்பளத்தில் சித்திர வேலை செய்திருப்பது போலிருக்கும். யானைக் கூட்டத்தின் கம்பீரமும், அந்த நெருக்கடியில் அவைகளுடைய உடம்பின் வளைவுகளும், உருண்ட மொழுமொழுத்த குழைவும் உயிர் நாடியுடன் சித்திரத்தில் பிரதிபலிப்பதைக் காணலாம். கல்லில் இப்படி ஒளியும் நிழலும் இசைத்திருக்கும் சிற்பியின் கைத்திறமை தான் என்ன!

கீழேயுள்ள சட்டம், புத்தர் சமாதியடைந்த பிறகு அவருடைய ஞாபகசின்னமான அஸ்திகளுக்காகநடக்கும் போரைக் குறிப்பிடுகிறது. லேசாகப்

புடைத்து நிற்கும் இந்த சிற்பத்தின் காக்ஷி விநோதமானது.

''அசும்புறு மதகரி புரவி யாடகத்
தசும்புறு சயந்தன மரக்கர்
தாடர
விசும் புறு தூளியான் வெண்
மைமேயின
பசும்பரிப் பகலவன் பைம்
பொற்றேரோ''

என்று கம்பர் வர்ணித்த போர் முனை அமளியை இசையோடு அறிவிக்கிறது இந்த சித்திரம். இடது பக்கத்தில் யானை மேலிருக்கும் வீரனுடைய முகத்தில் ஒரு தனிகாந்தி தென்படுகிறது. அந்த ஒளியின் கனிந்த பார்வை இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு கூட நம் முன் ஜ்வலிக்கிறது. மாடங்களிலிருந்து பார்ப்பவர் முகங்களில் கவலையும், கிளர்ச்சியும் தோய்ந்திருக்கின்றன. சேனை போகும் திக்கும் இரண்டு மார்க்கமாகப் பாயும் பாணியும் கவனிக்கத் தக்கவை. இவ்வித எதிர்மறையான இசைநடையால் சித்திரத்தின் அமைப்பு அபூர்வமாக இருக்கிறது.

(2) தெற்குத் தோரண வாசலிலுள்ள ஸ்தம்பத்தில் தெரிகிறது இந்த சிறிய சிற்ப சட்டம். ஒரு சிறிய அடக்கமான இடத்தில் விரிவாக பலவிஷயங்களைக்காட்டமுடியும் என்ற பாடத்தை இது கற்பிக்கிறது. விதிசாவிலுள்ள தந்த வேலைக்காரர்களால் இந்த சிற்பம் செய்யப்பட்டதாம். எத்தனை பொருத்தமானது! விஷயம், புத்தருடைய தலைமுடியை சுவர்க்கத்தில் ஆராதிக்கப்படும் கட்டம். குறுகிய இடத்தில் தெளிவாகவும் நேர்த்தியாகவும் செய்திருக்கும் இந்தச் சிற்பம் நுட்பமான வேலைத்திறனைக் காட்டுகிறது. ஏதோ ஒருவித தந்திரம் செய்து,



ராஜாவாழ்வை வெறுத்து
மோன நிலையில்...

சிற்பி தட்டையான கல்லில் ஆழத்தின் உணர்வை நமக்கு அறிவிக்கிறான். பார்க்கப் பார்க்க சாஞ்சி சிற்பங்கள் நம்முடைய ரஸிக உணர்ச்சியைத் தூண்டி, அதற்கு களிப்பைத் தருகின்றன.

(3) பௌத்தர்கள் மிருங்களை அன்புக்கண்களால் பார்த்தார்கள். என்ன அரவணைப்பு, என்ன பொங்கும் கருணை! பௌத்த பக்தர்களே இப்படி என்றால் அந்த அன்பின் ஊற்றான புத்தர் எப்படியோ? படத்தில் தெரிவது தோரணத்தில் ஒரு பகுதி. இதில் காணும் மிருகங்களும் மரஞ்செடிகளும்

நாட்டை விட்டகன்று காடு செல்லும் காட்சி

வாழும் நாம் இத்தகைய செல்வங்களை சிருஷ்டித்துள்ளோமா? பௌத்த சிற்பத்தில் நாம் காணும் அந்தரங்க ஒளியின் ஊற்று எது? எளிதாகவும் தெளிவாகவும் இவ்வுலகமே அன்புமயமென்ற ரகசியத்தை வெளியிட இச்சிற்பிகள் யாரிடம் கற்றார்கள்? என் மனக் கண்முன் யானைமேல் ஏறிவரும் வீரனுடைய முகம் தோன்றி மறைந்தது. நான் பௌத்த சிற்பங்களைப்பற்றி மேலும் மேலும் அறிய ஆசைப்பட்டு, அமராவதி சிற்பங்களைப் பார்க்கச் சென்றேன். இவை இப்பொழுது சென்னை மியூசியத்தில் இருக்கின்றன. சாதவாகன ஆந்திரர்கள் ஒரு காலத்தில் வடக்கே மால்வாவிலிருந்து தெற்கே கிருஷ்ணா, கோதாவரி வரையில் ஆண்டு வந்ததாக ஒரு பாகத்து சரித்திர ஆசிரியர்கள் நம்புகிறார்கள். கிருஷ்ணா நதிக்கரையோரமாகவுள்ள அமராவதி ஸ்தூபம் சாஞ்சி ஸ்தூபத்திற்கு பிற்பாடு உருவானது. அமராவதி சிற்பங்கள் என்னை பிரமிக்கச் செய்தன. வெள்ளை சுண்ணாம்பு கற்களால் செதுக்கப்பட்ட இச்சிற்பங்கள் அங்கே பல அறைகளை நிரப்பியிருந்தன. மிக்க சாதுர்யமாக இவைகளை வகுத்து, தக்கவாறு அங்கங்கே தரையில் குழி வெட்டி கட்டுவித்தவர் ஒரு கலைஞரே. அவ்வறைகளில் நுழையும் பொழுதே சைத்திய அறைக்குள் உண்டாகும் சாந்தி நம் அகத்தில் புகுந்து கொள்ளும். அமராவதி சிற்பத்தில் பக்தகோடிகளின் கூட்டத்தின் இன்பம், துன்பம், ஏக்கம்,

தெய்வீகப் பொலிவு பெற்றுள்ளன. சிங்கத்தின் வீரச்செருக்கு, மயிலின் ஒய்யார நடை, பூவின் கொஞ்சும் பார்வை என்று எங்கும் அதே உள்ளத்துடிப்பை நாம் காணலாம்.

(4) தோரணத்தைத் தாங்கி நிற்கும் இதோ இந்தப் பெண்மணியின் பெயர் சாலமஞ்சிகா. தெய்வீக அழகு படைத்த இவளுடைய அங்க அமைப்பிலும் மோகனப் பார்வையிலும்தான் எவ்வளவு கவர்ச்சி! அவள் தாங்கி நிற்பது மரமல்ல, நம் மனப்பேயே யாகும். குதூகலத்துடன் கஷ்டங்களை ஏற்கும் பௌத்த மனப்பான்மை இங்கு வெளிப்படுகிறது.

ஆமாம்... எங்கிருந்து இத்தனை குதூகலம்? எதற்காக இந்த அக மகிழ்ச்சி? எதனால் இந்த களியாட்டம்? இந்த மனிதர்கள் எத்தகைய நாகரிகம் படைத்தவர்கள்? நாகரிகத்திற்கும் பண்புக்கும் சம்பந்தமிருப்பதாகத் தெரியவில்லை. தற்போதைய நாகரிக யந்திர உலகில்

குதூகலம் என்று பலவித மனோபாவங்கள் சித்தரிக்கப் டுள்ளன. இந்த பாணி மிக்க விசித்திரமானது. உணர்ச்சி ததும்பும் இம்முகங்களை ஒன்று சேர்த்தால் அவை அழகான சித்திரங்களாக பிரதிபலிக்கும். பிறகு வெவ்வேருக எடுத்துப் பார்த்தால் ஒவ்வொரு முகமும் ஒப்பற்ற பாவத்துடன் தனித் தனி சிற்பங்களாகத் தோன் றும். பலவித நூதன அனு பவங்களை கூட்டங் கூட்டமாக இப்படி காட்டுவது பிரஞ்சு தேசத்து ரனுவார் என்ற ஓவிய ருக்கு விருப்பமான ஒரு பாணி.

நகைச் சுவை பொங்கும் அம ராவதி காக்ஷிகளைப் பார்த்த பிறகு தான் எனக்கு புத்தரிடம் அந்த குணம் அபரிமிதமாக இருந்திருக்க வேண்டுமென்று தோன்றிற்று, கேட்போரை வருத்தாமல் உண்மையைத் தெளிவு படுத்தும் ஒருவித ஹாஸ்யமும் கனிவுடன் கடிந்து கொள்ளும் நகைச்சுவை பாவ மும் அவரிடம் இருந்திருக்க வேண்டும். கருணை பொழியும் புத்தபிரானுடைய புன்னகை யில் கோபம் தென்படாது.

அகத்தின் அடித்தளத்தி லிருந்து உருகி வரும் இதே ஒளியை நாகார்ச்சுன கொண் டாவிலும் காணலாம். சாத வாகனர்களுக்குப் பிறகு ஆந் திர பிரதேசங்களை ஆண்டு வந்த இக்ஷ்வாகு வம்சத்தவர் கள் அங்கே பற்பல மண்டபங் களும் ஸ்தூபங்களும் கட்டியுள் ளார்கள். இக்ஷ்வாகு அரசர்கள் ஹிந்துக்களாம். ஆனல் அந்த ராஜகுலத்துப் பெண்மணிகள் பௌத்த மதத்தைச் சேர்ந்தவர் களாம். அவர்கள் ஆராதித்து வந்த ஸ்தூபங்களே இப் பொழுது குண்டூர் பக்கத்தி லுள்ள நாகார்ச்சுன கொண் டாவில் மறைந்து கிடக்கின் றன. அங்கே சிதைந்துபோன சிற்பக் கற்கள் ஏராளமாக இருக்கின்றன. புத்தருடைய அவதாரங்களில் நிகழ்ந்த பல சம்பவங்களை எடுத்துக் காட் டும் இச்சிற்ப செல்வங்கள் நுண்மையான கலைச் சுவை பொருந்தியவை.

சாஞ்சி, அமராவதி, நாகார்ச் சுன கொண்டாவென்று ஒவ் வொரு இடமாகப் பார்த்துக் கொண்டு வந்த பொழுது புத்த ரைப் பற்றி மேலும் மேலும் அறிய நான் ஆவல் கொண் டேன். புத்தபிரான் அன்பின் உருவம், கருணாமூர்த்தி என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனல், புத்த கயாவுக்குப் போனவுடன்தான் இக்குணங் களின் விசேஷ ஆகர்ஷண சக்தியை உணர்ந்தேன். அங்கே சிற்பங்களில் ததும்பி நின்ற அன்பு வெள்ளம் என்னையும் ஆகர்ஷித்தது. கோவிலைச் சுற்றியுள்ள விசாலமான தோட் டத்திற்குள் புகுந்தவுடனேயே அமிழ்ந்த ஒரு சாந்தி என் உள்

ஞானோதயம் பெற்ற காட்சி



லும்பினியிலுள்ள அசோக ஸ்தம்பம்

ளத்தைத் தொட்டது. இந்த இடத்தில் மாத்திரம் ஏன் இவ்வித நூதன உணர்ச்சி? எத்தனையோ கோவில்களைப் பார்த்ததில்லையா? ராஜசுகங்களைத் துறந்து புனிதமான மோன வாழ்க்கையை நாடிச் சென்றார் புத்தர். அந்த சமயத்தில் ,அந்த இடத்தில், போதி மரத்தடியில், இந்த செய்கையின் விசேஷ அர்த்தம் மங்கலாக எனக்கு விளங்க ஆரம்பித்தது.

உலகத்தில் இன்பமுமுண்டு, துன்பமுமுண்டு. ஆனால், இவ்விரண்டு வகை அனுபவங்களுக்கும் ஓர் எல்லையுண்டு...... முடிவுண்டு. துன்பமானால், அதற்கு ஒரு உச்சநிலையுண்டு. அதற்கு மேல் துன்பம் வந்தால் அதை, நனைந்த வஸ்திரத்தில் ஜலம் ஏறாதது போல், மனம் ஏற்க மறுத்துவிடும். இன்பமும் இவ்விதம் தான். எத்தனை சுகத்தை உள்ளம் ஏற்கும்? தித்திப்புப் தெவிட்டிவிடுவது போல் சுகம் அதிகமானால் அதனால் அலுப்புண்டாகும். எப்பொழுதும் அதீத இந்திரிய சுகங்களைத் தடையின்றி அனுபவித்தார் சித்தார்த்தர். தடங்கலில்லாமல் வரும் சுகத்திற்கு எப்பொழுதுமே மகத்துவம் குறைவு. அதை அனுபவிப்பவனுக்கு அதனுடைய அருமையும் பெருமையும் எளிதில் விளங்காது. அவனுடைய மனம் இன்னும் பலவித நூதன இன்பங்களைத் தேட முயலும். இன்னும் எதைச் செய்தால் அலுக்காத சந்தோஷம் கிடைக்குமென்று ஏங்குவான். ஆனால் சித்தார்த்தரோ அப்படி நினைக்கவில்லை. 'இப்படியே வாழ் நாட்கள் முழுவதையும் கழித்தால்... அதற்கு முடிவு?' என்ற கேள்வியைத் தனக்குத்தானே கேட்டுக் கொண்டார். இன்பமென்னும் போதையில் இறங்கிவிடும் மனிதன் தன்னை மீட்டுக் கொள்ள விரும்புவதில்லை. அப்படியிருக்க சித்தார்த்தருக்கு மாத்திரம் ஏன் இந்த யோசனை? அவர் பிறவியிலேயே ஈரநெஞ்சம் படைத்தவர். துன்பமயமான இந்த உலக வாழ்க்கையைக் கண்டு அவருடைய மென்மையான இருதயம் அன்பினால் கசிந்தது. அதன் விளைவு ?

சித்தார்த்தர் சுமார் கி.மு. 560 ஆண்டுகளுக்கு முன் பிறந்தார். அவருடைய தகப்பனார் சுத்தோதனன் சாக்கிய குலத்தாருடைய அரசனாக இருந்தான். கபில வஸ்து என்னும் அவனுடைய

தலைநகரம் இப்போதைய இந்திய நேபால் எல்லையிலிருக்கிறது. சிற்றரசனான சுதோதனன் மிக்க கீர்த்தியுடனும், உயர்ந்த குணங்களுடனும் விளங்கினான். அவனுடைய நட்பை விதேக, கோசல, மகத தேசத்து அரசர்கள் கோரினார்கள். செல்வாக்குண்டு, பூமியுண்டு, தனமுமுண்டு. அரசன் தன் ஒரே பிள்ளையான சித்தார்த்தரை கண்களில் வைத்து இமைகளால் மூடி பாலித்து வந்தான். அதுவும் சித்தார்த்தன் பிறந்தவுடன் ரிஷிகள், "இவன் ஒரு மகாபுருஷனாக விளங்கப் போகிறான். இவன் வாழ்வைத் துறந்து உலகத்திற்கே நன்மை போதிக்கப் போகிறான்" என்று முன்னறிவிப்பாகக் கூறி யிருந்தார்கள். இந்தச் செய்தி சுதோதனனை திடுக்கிடச்செய்தது. தன் ஒரே மகன் சக்கரவர்த்தியாக வேண்டுமென்ற அவன் ஆசைக்கு நேர்மாறாக துறவறம் பூண்டு கொள்ளப் போகிறானா? இதைத் தடுக்க அரசன் பல யுக்திகள் செய்தான். சித்தார்த்தரை ஒரு மாபெரும் அரண்மனையில் பாதுகாப்பில் வைத்திருந்தான். அழகான பூந்தோட்டங்கள், இன்பம் தரும் கானம், சுகமூட்டும் தோழர்கள், அன்பளிக்கும் மோகன அழகிகள், சுவையுள்ள உணவு என்று இந்திரியக் கயிறுகளால் அவரைப் பிணைத்து விலங்கிடப் பார்த்தான் அரசன்.

ஆனால், பிறவியிலிருந்தே ஏதோ ஒன்று சித்தார்த்தர் மனதைக் குடைந்துகொண்டிருந்திருக்க வேண்டும். இப்பொழுது கூட அந்த மலைப்பிரதேசம் மிக்க செழிப்பாயும் இன்பமாயும் விளங்குவதாகச் சொல்லுகிறார்கள். அங்குள்ள ஜனங்களும் அப்படியே கள்ளங் கபடமறியாத எளியவர்கள்தாம். அப்பொழுதும் அந்த நல்ல விளைவு பூமியில் ஜனங்கள் சந்துஷ்டியாகவே வாழ்ந்து வந்தார்கள். சித்தார்த்தரும் சுக வாழ்வில் தன் ஜனங்களிடையே இருந்திருக்கவேண்டும். ஆனால், அவரால் அழிந்து போகும் அந்த சுகத்தை ஏற்க முடியவில்லை. தன் ஜனங்கள் பேரிலுள்ள அபார அன்பினால் அவர்களுக்கு தொண்டு செய்ய ஆசைப்பட்டிருக்கலாம். அல்லது சாத்திரங்கள் கற்ற பிறகு, தன்னைத் தானாகவே விலங்கிட்டுக்கொண்டு அவதிப்படும் ஹிந்து மதத்தைச் சீர்திருத்த நினைத்திருக்கலாம். அல்லது தன் தகப்பனாருடன் மகத, கோசல அரசர்களையும், ராஜீய விஷயங்களையும் பார்வையிட்ட

வியட்நாமில் வெங்கலத்தில்
செய்யப்பட்ட புத்தபிரான்

பிறகு, ராஜ தந்திரத்தை புது வழியில் செலுத்த யோசித்திருக்கலாம். என்னவானாலும் சரி, இளம் வயதிலேயே சித்தார்த்தருக்கு ஆழ்ந்த யோசனைகள் தோன்றினவென்பதில் ஐயமில்லை. அவர் தன் ராஜ்யத்தைத் துறந்துவிட்டு காட்டுக்குச் செல்வதைப்பற்றி தீவிரமாக சிந்தனை செய்திருக்கவேண்டும். ஒரு நாள் புறப்பட்டும்விட்டார் என்றுதான் தெரிய வருகிறது.

இப்படியே சாக்கிய முனியுடைய வாழ்க்கைப் படலம் ஒரு விநாடிக்கு என் மனக்கண் முன் விரிந்து மறைந்தது. அந்த சாந்தி மயமான சூழ்நிலையை

அபயஹஸ்த நிலையில் காட்சி தரும் புத்தபிரான்

கலக்க வேண்டாமென்ற எண்ணத்துடன் நான் மிருதுவாக அடிமேல் அடிவைத்து பவித்திரமான போதி மரத்தை அணுகினேன். சுமார் 2500 வருஷங்களுக்கு முன் இந்த இடத்தில் அரச மரத்தினடியில் உட்கார்ந்திருந்தார் புத்தர் பெருமான்.

(5) அசைவில்லா மோன நிலையில், அந்த இடத்தில் அவருக்கு ஞானோதயம் ஆயிற்று. அறிவின் விளக்கான அந்த திவ்விய ரூபம் கோவிலில், பல இடங்களில், பல ஆசனங்களில் பிரகாசித்து வருவதை நாம் இன்றும் காண்கிறோம்

புத்த கயா கோவில் பிராகாரத்தில் அழகான கற்சட்டங்கள் தென்பட்டன. (6) இவை சாதாரணமாக ஸ்தூபங்களைச் சுற்றியுள்ள அடைப்புக்கள் போலிருந்தன. சட்டங்கள் யாவும் சிதைந்திருந்தன. இருந்தாலும் வேதியின் சிறிய தூண்களில் அற்புத காக்ஷிகள் தோன்றின. அங்கே பதிந்திருந்த கல்பதக்கங்களில் சிரிக்கும் முகங்களைக் கண்டேன். இந்த முகங்களுடைய எழிலையும், குதூகலத் தோற்றத்தையும், விஸ்தரிக்க இயலாது. தலைமுண்டாசிலிருந்து அவை மௌரிய காலத்துச் சிற்பங்களென்று ஊகிக்கலாம். ஆமாம், பரம பக்தனான அசோகன் இந்த இடத்திற்கு வந்ததாகத் தெரிகிறது. அவன் எப்பொழுதும் போல் இங்கேயும் ஒரு ஸ்தூபமும் சட்டமும் ஏற்படுத்தியிருக்கவேண்டும். ஸ்தூபம்போன இடம் தெரியவில்லை. ஆனால், சட்டங்கள் சில எஞ்சி நிற்கின்றன. கோவில் கோபுரத்தை (7) நிமிர்ந்து பார்த்தேன். என்னுடைய எண்ணங்களை ஆமோதிப்பது போல்

உயரே கோபுர உச்சியில் ஒரு சிறிய ஸ்தூபம் அதற்கு சிகரமாக பிரகாசித்தது. ஒரு காலத்தில் சாஞ்சியைப் போலிருந்த கயா ஸ்தூபம், இப்பொழுது குறுகி உச்சியில் நிற்கிறதோ! பௌத்த சிற்பமே நம் நாட்டு சிற்பக்கலைக்கு ஆதாரமாக விளங்குகிறது என்பது ஒரு அபிப்பிராயம். அதையொட்டி ஸ்தூபங்களே பிற்பாடு கோபுரங்களாக மாறின என்று ஒரு ஆகமம். இந்த வாதத்தை ருசுப் படுத்துவது போல் இதோ என் முன் நின்றது புத்த கயா கோபுரமும் அதன் உயர்ந்த ஸ்தூபமும். அந்த கோபுரம் இது வரையில் நான் காணாத பாணியில் அமைந்திருந்தது. பட்டையாக நாலு முகங்கள் கொண்ட இந்த கோபுரத்தில் அதிக வேலைப்பாடுகள் இல்லை. சின்னஞ் சிறிய சைத்திய வாசல்கள் மாத்திரம் அடுக்கடுக்காக கோபுரத்தை நிறைத்தன. இவ்விதமாக சைத்திய அல்லது பூஜை (8) அறை வாசல்களைக் காண்பிப்பது பௌத்தர்களுக்கு பிரியப்பட்ட ஒரு ரீதியென்று நான் அனுபவத்தால் தெரிந்து கொண்டேன். கோவில் வாயில் எதிரே ஒரு அழகான தோரண வாசல் சாஞ்சியை நினைவூட்டியது. அதனுடைய சாதாரண தோற்றத்தில் ஒரு நேர்த்தியும் உன்னதமான இசைவும் இருந்தன. எளியோன் மனதை எளிதில் வெல்லும் புத்தருடைய கவரும் புன்னகை, புத்த கயா சூழ்நிலையிலுள்ள யாவையும் அணைத்தது.

(11) நாட்டை விட்டுச் சென்ற கௌதமர் காட்டை

உலக ரக்ஷகர் பகவான் புத்தர்
—ஞானோதயத்திற்குப் பின்

அடைந்தார். உண்மை ஏகாந்தத்தையும் சத்தியத்தையும் நாடியது அவர் மனம். ஆனால், பல வருஷங்களுக்கு, நியமங்களைப் பழகி, தன் உடலை வருத்தி தவத்திலிருந்து பார்த்தும், அவர் யாதொரு பயனையும் காணவில்லை. ஆத்ம வெளிச்சத்திற்கு பதில் எங்கும் இருளைக் கண்டார். கடைசியில் உருவேலாவுக்கு அருகிலுள்ள புத்த கயா காட்டில் புகுந்தார். அங்கே போதி மரத்தடியில் உண்மையை அறிந்த பிறகே இங்கிருந்து பெயர்க்க வேண்டுமென்ற திண்ணமான உறுதி கொண்டார். ஒரு நாள் இரவு; அன்று சித்திரை மாத பூர்ண



பூஜை அறை வாயில்களைப் பிரதிபலிக்கும் காட்சி

சந்திரன் ஒளியுடன் பிரகாசித்தான். தியானத்தில் அமர்ந்திருந்த புத்தபிரானுடைய முகத்தில் ஒரு தெய்வீக தேஜஸ் வீசிற்று. கௌதமர் ஞான வெளிச்சத்தைக் கண்டு விட்டார். அதனுடைய ஜோதி அவருடைய அங்கமெல்லாம் பரவி, அவர் உடல் முழுதுமே தூயமான ஒளியுடன் பிரகாசித்தது. அந்த சமயத்தில் அம்மகானின் வடிவத்தில் தோன்றிய காந்தியை இன்றைக்கும் நாம் பல பௌத்த சிற்பங்களில் காணலாம்.

உலகத்திலுள்ள துன்பங்களைத் துடைத்து பாசவலைகளை அறுக்க என்னிடம் மருந்துள்ளது என்று மக்களுக்கு அறிவிக்க ஆசை கொண்டார் புத்தர். இந்த கருத்துடன் அவர் போதிமரத்தைவிட்டு காசிக்குப் பிரயாணமானார். அங்கே சாரநாதுக்கு அருகேயுள்ள ஒரு ரம்மியமான தோட்டத்தில் புத்தர் முதன் முதல் தம் அனுபவத்தை உலகத்திற்கு எடுத்துச் சொன்னார். என்ன தேஜஸ்! (9) என்ன வசீகரிக்கும் அன்புப் புன்னகை! இந்த அன்பளிப்பின் முதல் கட்டம் தான் இப்பொழுது பிரசித்தி பெற்று விளங்கும் சாரநாத். (10) அழகான இந்த சிலை புத்தருடைய வாழ்க்கை சம்பவங்களை எடுத்துச் சொல்லுகிறது. பக்தனான அசோகன் சாரநாதுக்கும் போனான். அவனால் செய்யப்பட்ட கற்சிலைகளும், ஸ்தூபங்களும், கம்பங்களும் இன்றைக்கும் அங்கே கௌதமரின் வாழ்வைச் சித்தரிக்கின்றன. உள்ளம் உருகி, பக்தியினால் பரவசமடைந்த அசோகசக்கரவர்த்தியின் கருத்துக்களை சாரநாத் சென்றால் புரிந்துகொள்ளலாம்.

சித்தார்த்தர் பிறந்த இடமான லும்பினிக்கும் அசோகன் யாத்திரை செய்தான். படத்தில் (13) லும்பினி கம்பம் தெரிகிறது. பௌத்த புராணங்களில் லும்பினி தோட்ட வர்ணனை பிரமாதமாக இருக்கும். சித்தார்த்தன் தாயார் மாயாதேவி பிரஸவத்திற்காக பிறந்தகம் போகிறாள். அங்கே அவளுடைய தகப்பனார் பெண்ணுக்கு களிப்புத்தரக்கூடிய மனோகரமான ஒரு பூந்தோட்டம் அமைக்கிறார். ஒரு நாள் மாயாதேவி அப்பூந்தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது புத்தபிரான் தோன்றுகிறார். புத்தர் ஒரு அவதாரமானதினால் அவர் மாயாதேவி வலப்புறத்தில்உதயமானார் என்றும், அவர் பிறந்தவுடன் தேவதுந்துபிகள் முழங்கின வென்றும்,தேவர்களே பிரத்யக்ஷமாக

வந்து குழந்தையை வாழ்த்தினார்கள் என்றும் பௌத்த புராணங்கள் கூறுகின்றன.(10) படத்தில் புத்தருடைய வாழ்க்கை கட்டங்கள் மூன்றும், அதாவது பிறப்பு, போதி நிலை, இறப்பு—தெரிகின்றன.

புத்தபிரான் எண்பது வயது வரையில் உயிருடன் இருந்து பல நன்மைகளை போதித்து விட்டு, கடைசியில் குசிநகரம் என்னும் இப்போதைய காசியில் பரமபதத்தை அடைந்தார். (14) அப்பொழுது மல்லர்கள் என்னும் அவ்வூர்வாசிகள் கௌதமருடைய சமாதிச் சாம்பலைத் தாங்களே வைத்துக் கொள்ள விரும்பினார்கள். எளியோனுக்கும் பெரியோனுக்கு ஒரு போல் அபயமருளின சாக்கிய முனியுடைய ஞாபகார்த்த சின்னங்களைப் பெற யாவரும் ஆவல் கொண்டார்கள், லிச்சவிகள், சாக்கியர்கள், அஜாதசத்துரு போன்ற பல அரசர்கள் அன்று குசிநகரத்தில் ஒன்று கூடினார்கள். புத்தருடைய அஸ்திக்காக அங்கு பகைமை புகைந்தது. போர் மூண்டது. அந்த சமயத்தில் துரோணர் என்னும் ஒரு பிராமணன், கௌதமருடைய உபதேசத்திற்கு நேர்மாறாக நாம் சண்டையிடுவது அழகல்ல என்று கற்பித்தான். அதைக் கேட்டு அரசர்கள் சமாதானப் பேச்சுக்கள் நடத்தி, அஸ்தியை பல பாகங்களாகப் பிரித்து, பல வேறு திக்குகளுக்குக் கொண்டு போனார்கள். இவ்விதமாகவும் தேசத்தில் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடி வரையில் பௌத்தமதம் பரவலாயிற்று. அஸ்தியைக் கொண்டு பெட்டிகளில் வைத்து பிற்பாடு வந்த அசோகன் முதலான அரசர்கள், பெரும் ஸ்தூபங்கள் எழுப்பினார்கள்.

சாக்கிய முனியுடைய உபதேசங்கள் விசித்திரமானவை. அவர் அரசனுக்குத் தகுந்தபடி ராஜநீதி பேசி அவனை அமைதியான வழியில் போகச் செய்வார். அன்பையே ஆயுதமாகப் பிரயோகித்தார். அரசர்கள் அவருடைய ஆதரவை நாடினார்கள், போதனையைக் கோரினார்கள். படித்தவர்களிடம் பகுத்தறிவுடன் தர்க்கம் செய்வார் புத்தர். நியாயப்படி வேதத்தில் வரும் மறைகளை எடுத்து விளக்குவார். சாதாரண எளியோனிடம் மறைபொருளாக நீதி போதிக்கும் திருஷ்டாந்தக் கதைகளாகவே சொல்லுவார். இக்கதைகள் காட்டு யானைகளைப் பற்றியும், மரவெட்டிகளைப் பற்றியும், கிராமத்தார்களைப் பற்றியும், வேடனைப் பற்றியும் ஊழியனைப் பற்றியுமே யிருக்கும். சூரியன், சந்திரன், வானம், காற்று

---

**புத்தரின் பொன்மொழிகள்**

**ஆனந்தா!**

**பஞ்சில் படியும் தீப்பொறியை விட, நெஞ்சில் படியும் துவேஷம் விரைவாகப் பரவும்.**

★

**எலும்பில் பசை இருக்கும் வரை ஈ அதனை விடாது மொய்க்கும். நெஞ்சில் கருணை உள்ள ஒருவனை ஜனசமுதாயம் ஈ போல் மொய்த்துக் கொள்ளும்.**

★

**உபதேசம் செய்! உபதேசம் ஏதுவிடில் உபதேசித்தபடி வாழ்ந்து காட்டு!**

★

**பிறரிடம் தீய சொல் கூறுவதில் உனக்கு இன்பமானால், அவர் உன்னைத் திருப்பித்தாக்குவதையும் நீ இன்பமாகவே கொள்ள வேண்டும்.**

மழை, பனி என்று எளியோனைத் தொடும் வாழ்க்கையின் நாடோடி அம்சங்களைக் கொண்டே அவர் உபமானங்கள் சொல்லுவார். சிறிய பாட்டிலும் புராணக் கதைகளிலும் தன் வேதாந்த சாரத்தை லாகவமாகப் பின்னி உரைப்பார். இப்படியே கடினமான பற்றுமை என்னும் வேதாந்தத்தை அவர் எளியது போல் எடுத்துரைத்தார். உலகத்தை துறந்து, மோன வாழ்க்கையில் தான் பரிபூர்ண இன்பமுள்ளது என்பதை அவர் தெளிவாக உரைப்பது வழக்கம். பாசத்தை விலக்கிக் கொண்டு, ஈவிரக்கமில்லாமல் ஆத்ம சோதனையோடும், இந்த நெறியைப் பின்பற்றுவது சுலபமல்ல. ஆனல் சமுத்திரம் போன்ற சாக்கிய முனியுடைய அன்பு எல்லாப் பிராணிகளையும் ஆதரவுடன் அழைத்தது. அந்த பிரேம வலையில் சிக்கினவர் யாவரும் தன்னை அறியாமல் அதன்பால்ஈர்க்கப்பட்டார்கள். ஆண்கள், பெண்கள், எளியவர், படித்தவர், பரதேசி, ராஜதந்திரி என்று எல்லாவித மனிதர்களும் அந்த அன்புப் பார்வைக்கு அடங்கினர்கள். அன்பின் வழிக்கு பலம் அதிகம். அந்த கருணை குணத்தினல் கடினமான பாதையிலும் புத்தர் வெற்றி கண்டார். இந்தப் பரிவு எவ்விதமானது என்று அறிய பல அத்தாக்ஷிகள் இருக்கின்றன. புத்தர் மறைந்து நூற்றுக் கணக்கான வருஷங்கள் ஆனபிறகுகூட அவருடைய பரிவு மிகுந்த குரல் காற்றில் மிதந்து வருகிறது.

புத்தபிரானின் வாழ்க்கைத் தத்துவங்களை விளக்கும் நூல்களைப் படிப்பதில் உள்ள ஆர்வம், அவரை சிலாரூபமாக வணங்கிவரும் பல இடங்களுக்குச் செல்லும்போது மேலும் அதிகமாகிறது. ஆகவே சித்திர விளக்கங்களுடன் இக்கட்டுரையை எழுத விரும்பி, டெல்லி புதைபொருள் ஆராய்ச்சி இலாகாவின் உதவியை நாடினேன். அவர்கள் மனமுவந்தளித்த புத்தர் சம்பந்தமான படங்களே இக்கட்டுரையில் நீங்கள் காண்பவை. ★



80 ஆண்டுகள் வாழ்ந்து உலக ரக்ஷகராக விளங்கிய புத்தபிரான் நிருவாணமடைந்த குசிநகர்

# இந்தியாவில் பௌத்தக் கலைகள்

பௌத்த பிக்ஷுகள் பிரசார நிமித்தம் பல இடங்களுக்கும் சென்று தங்கினர். அவர்கள் வாழ்ந்த இடங்களில் ஸ்தூபிகளும் பௌத்த விஹாரங்களும் கட்டப்பட்டன. கார்லியிலுள்ள புத்தர் கோயிலும் பம்பாய் ராஜ்யத்தைச் சேர்ந்த கான்ஹரி, பாஜா ஆகிய இடங்களிலுள்ள சைத்யங்களும் அஜந்தா குகை சிற்பங்களும் பௌத்தர்கால கலைகளின் சிறப்பை நன்கு விளக்குகின்றன. வட இந்தியாவில் சாஞ்சி, பர்ஹுத் ஆகிய இடங்களிலுள்ள ஸ்தூபிகளும் தென்னிந்தியாவில் அமராவதி, நாகார்ஜுன கொண்டா ஆகிய இடங்களிலுள்ள ஸ்தூபிகளும் உருவில் மிகப் பெரியவை. இவைகளில் காணப்படும் சிற்ப ஓவியங்கள் புத்தர் வாழ்வின் சில சம்பவங்களையும், அவரது முற்பிறப்பையும், நீதிகளை விளக்கும் கதைகளின் சம்பவங்களையுமே சித்தரிக்கின்றன.

### பௌத்தக் கலையில் ஸ்தூபங்கள்

'திரிரத்னம்' என்றழைக்கப்படும் தத்துவமே பௌத்தர்கள் ஸ்தூபி வழிபாட்டில் கடைபிடிக்கும் தத்துவம். புத்தரையும், அவரது தர்மோபதேசங்களையும், பௌத்த சங்கச்சிறப்பையும் சுருங்க விளக்கும் சொல் 'திரிரத்னம்' எனப்படும். திரிரத்னத்தின் கருத்து புத்தரைப்பற்றித் தெரிந்திராத புதியவனும் விளக்கமாகத் தெரிந்து கொள்ளுமாறு அமைந்திருக்கிறது.

> கௌதமர் நிருவாணமடைந்து 400 ஆண்டுகளுக்குப் பின்புதான் முதல் முதலாக அவரைப் பிரதிபலிக்கும் உருவம் ஒன்றை ஒரு சைத்ரீகர், புத்த நூல்களில் அவரைப் பற்றிக்கூறும் வர்ணனைகளைத் துணை கொண்டு வரைந்தார். அதன் பின்பே அவரவர் தம் கற்பனைக்கேற்ப புத்தரை சிலையிலும் சித்திரத்திலும் தீட்டினர். இதன் காரணமாகவே புத்தரின் உருவம்தேசத்திற்கு தேசம் மாறுபட்டு காணப்படுகிறது.

பௌத்த ஸ்தூபங்களில் சிறந்த எட்டு ஸ்தூபங்கள் கீழ்க்காணும் இடங்களில் இருந்து வருகின்றன. ராஜக்ருகம், வைசாலி, கபிலவஸ்து, அலக்கப்பா, ராம்கிராமா, வேதாதிப, பவ, குசிநரா. இவை தவிர பிரம்மதுரோணு என்பவரும், மௌரிய வம்சத்தைச் சேர்ந்த பிப்பிலிவானுவினாலும் ஸ்தூபங்கள் கட்டப்பட்டன,

கிறிஸ்து பிறப்பதற்கு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பும், பிறந்து மூன்று நூற்றாண்டுகளுக்கு பின்பும் இந்தியாவில் பௌத்தக் கலைகள் செழிப்புற வளர்ந்து வந்தன. கிரீஸும், ரோமும் ஒன்றுபட்டு காந்தாரத்திலுள்ள பௌத்தக்கலைகளை மேலைநாடுகளில் பரப்புவதில் மிகுந்த ஆர்வங்காட்டின.

இரண்டாம் நூற்றாண்டிற்குப் பிறகே புத்தரை சிலை உருவில் சிறப்புற அமைக்கும் வழக்கத்தைக் கையாண்டனர்.

---

ஆதாரம்: டி. என். ராமச்சந்திரன் எழுதிய 'பௌத்தக்கலைகள்' என்னும் கட்டுரை.

புத்தரின் சிறப்பும் அப்போதுதான் உலகமெங்கும் பரவ ஆரம்பித்தது. கல்லிலும், தந்தத்திலும், வெண்கலத்திலும் உருவம் அமைத்துப் போற்றும் வழக்கமும் அதிகரித்து வரலாயிற்று.

கி.பி. முதல் நூற்ருண்டில்வட இந்தியாவிலுள்ள மதுரா என்ற நகரில் இந்திய சிற்பக்கலையை வளர்க்கும் பாடசாலை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. பௌத்த கலைகளின் வளர்ச்சிக்கு இப்பாடசாலை சிறந்த சேவை செய்துள்ளது.

'இந்தியாவின் பொற்காலம்' என்றழைக்கப்படும் குப்தர் காலத்தில் இப்பாடசாலை சிறப்புற்று விளங்கியது. சிற்பக்கலையின் நுணுக்கங்களை விவரிக்கும் ஆற்றல் பெற்ற கலைஞர்கள் மதுரா, சாரநாத், அஜந்தா, பீஹார் ஆகிய இடங்களில் கருணை வடிவான புத்ததேவரின் உருவங்களை முகத்தில் பாவங் குன்ருமல், வெகு நயம்பட உருவாக்கி வந்தனர். கருணை பொழியும் புத்தபிரானின் முகவிலாசம் யாவரையும் அவர்பால் ஆகர்ஷிக்கும்படி செய்தது என்பதை இச்சித்திரங்கள் நமக்கு விளக்கிக் காட்டுகின்றன. வெங்கலமே குப்தர் காலத்தில் பௌத்தக் கலைகளை வளர்ப்பதில் பெரும்பாலும் உபயோகிக்கப்பட்டது.

கல்லிலும் சிற்பங்களை உருவாக்கி வந்தனர் குப்தர் கால சிற்பிகள். அவற்றுள் சுல்தான் கஞ்சிலுள்ள சிற்பம் சிறப்பு வாய்ந்திருந்ததால், தற்போது அது பர்மிங்காம் கலைக்கூடத்தில் வைக்கப்பட்டுள்ளது.

கி.பி. 8-ம் நூற்ருண்டிலிருந்து உலோகத்தில் சிலைகள் செய்யும் வழக்கம் வெகுவாகப் பரவி வரலாயிற்று. தென்னிந்தியாவில் வெண்கலத்தில் உருவாக்கப்பட்ட புத்தர் சிலைகளை தஞ்சை ஜில்லாவில் சில இடங்களில் காணலாம். அவை கி.பி. 10-ம் நூற்ருண்டிலிருந்து 15-ம் நூற்ருண்டிற்குள் செய்யப்பட்டவை.

முதல் ராஜராஜ சோழன் காலத்திலும், ராஜேந்திர சோழன் காலத்திலும் சுமித்தராவைச் சேர்ந்த சைலேந்திரர்களால் நாகப்பட்டினத்தில் சில புத்த விஹாரங்கள் கட்டப்பட்டன. சமீபத்தில் 350 பௌத்த சிற்பங்கள் அங்கிருந்து தோண்டி யெடுக்கப்பட்டன.

கி. பி. 5-ம் நூற்ருண்டில் பல்லவர் காலத்தில் பௌத்தக் கலை சிறப்புற்று வளர்ந்து வந்தது.

கி. பி. 11-ம் நூற்ருண்டில் பீஹாரிலுள்ள ஸ்தாவிரவாடா சிற்பக்கூடத்தில் புத்தபிரானின் திருவுருவம் ஒன்று செய்யப்பட்டது. அதைப் பார்க்க நேர்ந்த பர்மிய அரசர்கள் தங்கள் நாட்டில் அதைப் போன்ற உருவங்களை அமைத்து புத்தரை வழிபட்டனர். இந்த உருவம் வெகு விரைவில் உலகின் பல பகுதிகளிலும் பின்பற்றப்பட்டது.

மத்திய காலத்தில் பௌத்த நூல்களை வெளிக்கொண்டுவர முற்பட்டவர்கள், சித்திர விளக்கங்களுடன் அவற்றை வெளியிட விரும்பி, பௌத்தக் கலைகளை விளக்கும் சின்னஞ்சிறு படங்களையும் துணைகொண்டு வெளியிட்டதால் நூல்கள் மூலமும் பௌத்த ஓவியங்கள், சிற்பங்கள் இவற்றின் பெருமை வெளிப்படலாயிற்று. ★


புத்த பகவான்
பகவான் புத்தரின் 2500-வது ஜன்ம தினம் இம்மாதம் உலகெங்கும் கொண்டாடப்படுகிறது. அவரது பொன்மொழிகளை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டிய பொன்னாள் இந்த வைகாசி மாத பௌர்ணமி தினம்.

போதி விருக்ஷத்தினடியில் கௌதமர் ஞானம் பெற்ற காட்சி—

ஞானம் பெற்றபின் முதல் உபதேசக் காட்சி.
—காந்தார சிற்பம்

காந்தார சிற்பம் ஒன்றில் புத்த பிரானின் அன்பு ததும்பும்முகம்-விக்டோரியா ஆல்பர்ட் மியூசியத்திலுள்ளது.

நளந்தாவில் பௌத்த பிக்ஷுகளின் வாசஸ்தலம்

பௌத்த பிக்ஷுகள் கல்வி கற்கும்போது அமரும் பீடங்கள் – நளந்தா சர்வகலாசாலை.

புத்தரின் மோன நிலைக் காட்சிகள் - நளந்தா சிற்பம்

அசோகர் கால ஸ்தூபி - கல்பதக்கங்களால் அலங்கரிக்கப்பட்ட சட்டங்கள்





சாரநாத்திலுள்ள பிரசித்திபெற்ற ஸ்தூபி

சாஞ்சி தெற்குத் தோரண வாசலிலுள்ள சிற்ப வேலைப்பாடுகள்
நிறைந்த சட்டம்.



புத்தரின் தலை முடியை சுவர்க்கத்தில் ஆராதிக்கப்படும் காட்சி.

புத்தரின் வாழ்வில் சில சம்பவங்களை விவரிக்கும் சீன ஓவியம். கோபி பாலைவனத்தின் மத்தியிலுள்ள டாங்ஹுவன் குகையில் 1400 வருடங்களுக்கு முன்பு எழுதப்பட்ட ஓவியத்தின் பிரதிபலிப்பு இது.

# மறக்க முடியாத சம்பவம்

மறக்க முடியாத சம்பவங்கள் சிலவேனும் உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும். அவைகளைப்பற்றி 200 வார்த்தைகளுக்குள் எழுதி அனுப்புங்கள். ஒவ்வொரு மாதமும் பிரசுரிக்கப்படும் முதல் கட்டுரைக்கு ரூ. 10 சன்மானம் தரப்படும். பிரசுரம் செய்யப்பட்ட இதர சம்பவங்களுக்கும் ரூ. 3 வீதம் கொடுக்கப்படும்.

ஆசிரியர்: 'திங்கள்', 17, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2 என்று விலாஸமிட்டு எழுதியனுப்புங்கள்.

## கர்வபங்கம்

அப்போது நான் சென்னை ராஜதானிக் கல்லூரியில் இண்டர் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். நான் மிகவும் கெட்டிக்காரன் என்று எல்லோரும் புகழ்வார்கள். அதனால் மண்டைக்கர்வம் அதிகமாகவே இருந்தது.

அந்த வருட கோடை விடுமுறையின் போது பம்பாய் சென்றிருந்தேன். மாதுங்கா ஸ்டேஷனில் என்னை எதிர்கொண்டழைத்த என் மூத்த சகோதரியின் கணவர், என்னை தம் பக்கத்திலிருந்த நண்பருக்கு அறிமுகம் செய்கிற முறையில், "இதோ இவன்தான் என் மைத்துனன் சீமா. மிகவும் கெட்டிக்காரன். ஆங்கிலத்தில் புலி" என்று சொல்லி விட்டு, "சீமா, உனக்கு இவரைத் தெரிகிறதோ?" என்று கேட்டார். என் ஒன்றுவிட்ட சகோதரியான ஒரு பெண்ணிற்கு அவரைக் கணவனுக்க வேண்டிய முயற்சிகள் அப்போது நடந்து கொண்டிருந்தன. அந்த விஷயம் எனக்குத் தெரியும். எனவே, "ஓ! இவரா எனக்குத் தெரியுமே! இவர்தான் என் சகோதரியின் எதிர்காலக் கணவர்" என்று சொன்னேன். என் மனதிற்குள் நான் மிகவும் சமத்காரமாகப் பேசி விட்டதாக எண்ணம்.

அவர் மெதுவாக ஒரு கேள்வி போட்டார். "ஓ! உங்கள் சகோதரியின் தற்காலக் கணவர் யாரென்று தெரிந்து கொள்ளலாமா?" என்றார்.

தூக்கிவாரிப் போட்டது எனக்கு. நான் செய்த தவறு நன்றாகத் தெரிந்து விட்டது. "என் சகோதரிக்கு கணவராக வரக்கூடியவர்" என்று சொல்லி இருக்க வேண்டும். என் மண்டைக்கனம், சற்றுக் குறைந்தது. எதிர்பாராத முறையில் நடந்த இந்த சம்பாஷணை இன்னும் என் நினைவில் பசுமையாக இருக்கிறது.

எஸ். வாஸன் ரங்காச்சாரி,
சென்னை-4.

## மறக்க முடியுமா ?

எனக்கு அப்போது வயது சுமார் 15 இருக்கும். எங்களுடைய கிராமத்தை யடுத்தாற் போல் எங்கள் புஞ்சை நிலம் இருந்தது. அந்த வருஷம் எள் சாகுபடிக்குப் பின் அதில் உளுந்து விதைத்திருந்தோம். உளுந்து செடி அடர்த்தியாய் இருந்தது. ஒரு நாள் சாயங்காலம் ஐந்து மணி சுமாருக்கு வயல்பக்கம் சென்றேன். செடிகள் அடர்த்தியாயிருந்த இடத்தில் காடைக் குருவி ஒன்று அடிக்கடி போவதும் வருவதுமாய் இருந்தது. அது போன பின்பு அந்த இடத்தைப் பார்த்தேன். அழகான இரண்டு முட்டைகள் இருந்தன. எனக்கு ஒரு யோசனை உதித்தது. 'இருட்டான பின் காடை குருவி முட்டைகளிடம் வந்து உட்காரும்.

இரவில் அதற்கு கண் தெரியாது. அதை எப்படியாவது பிடித்து விடலாம்" என்று எண்ணி அன்று இரவு சாப்பிட்டபின், வீட்டில் யாருக்கும் சொல்லாமல் அதே நிலத்தில் அடையாளமாய் காடை முட்டையிட்டிருந்த இடத்தில் காடையைப் பிடிப்பதற்காக இரண்டு கைகளாலும் சேர்த்துப் பிடித்தேன். இப்பொழுது நினைத்தாலும் பயமாய் இருக்கிறது! காடைக்கு பதிலாய் என் கையில் அகப்பட்டது ஒரு சாரைப் பாம்பின் தலை. காடையின் முட்டைகளை விழுங்க அந்த சாரைப் பாம்பும் வந்திருக்கிறது. பாம்பின் தலையை இறுக்கிப் பிடித்ததால் என் கையை அதன் உடலால் நன்றாக சுற்றிக் கொண்டது. நான் இளமையிலேயே தைரியசாலி. பிடி தளர்ந்தால் பாம்பு கடித்து விடும். ஆகவே உறுதியாய் பிடித்துக் கொண்டு, என் தொண்டை கிழிய கூச்சல் போட்டேன். என் நிலைமை எப்படி இருக்கும்? என் கூச்சலைக் கேட்டு ஊர் ஜனங்களே வந்து சேர்ந்து விட்டார்கள். அதன்பின் பாம்பை என் கையிலிருந்து விடுவித்துக்கொன்று விட்டனர். பயத்தினால் இரண்டு நாள் ஜுரம்கூட வந்து விட்டது. இது என்ன சாதாரணமாய் மறக்க கூடிய சம்பவமா? அந்த நிலத்திடம் இப்பொழுது போனாலும் அதே நினைவுதான் எனக்கு.

கே. என். கோவிந்தையா,
மாதேமங்கலம்.

## எதிர்பாராதது !

என் படிப்பு முடிந்து விட்டபடியால், விழுப்புரத்திலிருந்து என் அத்தை விட்டிற்கு சென்னையில் வேலை பார்க்கும் எண்ணைத்துடன் வந்து கொண்டிருந்தேன். ரயிலிலே என்னைப்போலவே மனப்பான்மையுடைய கலா என்ற ஒரு பெண் எனக்கு சிநேகிதை ஆனாள். அவளும் எஸ்.எஸ்.எல்.ஸி. வரை படித்திருப்பதாயும், தன் சித்தி சென்னையிலிருப்பதால் தானும் அங்கு வருவதாக சொன்னாள். சென்னை சென்ற பிறகு தினம் மாலையில் கடற்கரையில் சந்திக்க நாங்கள் தவறமாட்டோம். என் அத்தையின் புருஷர் சென்னையில் பெரிய பதவியில் இருந்ததால் எனக்கு சிரமமின்றி வேலை தேடித்தந்ததுடன் என் சிபாரிசின் பேரில் கலாவிற்கும் வேறோர் ஆபீஸில் வேலை வாங்கிக் கொடுத்தார். ஒரு மாதத்திற்குப் பின்பு என் அருமை அண்ணன் ராஜு, மதுரையிலிருந்து சென்னைக்கு மாற்றலாகி அத்தை வீட்டுக்கே வந்து சேர்ந்தார். என் அத்தை எங்கள் இருவர் பேரிலும் அளவு கடந்த அன்பு பாராட்டி வந்தாள். ஒருநாள் அத்தையின் கணவர் ''கமலாவுக்கும் (அதுதான் என் பெயர்) ராஜுவிற்கும் வரன் நிச்சயம் செய்துள்ளேன். நாளை கமலாவைப் பெண் பார்க்க வருவார்கள்'' என்று என் அத்தையிடம் சொல்லிக்கொண்டிருந்ததைக் கேட்ட நான் பிரமித்தே போனேன். மறுநாள் பிள்ளை, தாயார், தகப்பனார் மூவரும் பெண் பார்க்க வந்தார்கள். என்ன ஆச்சரியம்! என் ஆபீஸில் எனக்கு மேலதிகாரியாக இருந்த சுகுமார்தான் எனக்குக் கணவராக வரப்போகிறவர். அவரைப் பார்த்ததும் நான் திகைத்து விட்டேன். ஒரு புறம் சந்தோஷமும் ஒருபுறம் பயமும் உள்ளூற என்னை வாட்டின. மறுநாள் என் அண்ணனுக்கு பெண் பார்க்கச் சென்றோம். இதைக் காட்டிலும் ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. என் ஆருயிர்த்தோழி கலா தான் மணப்பெண். அவளுடைய சித்தி பிள்ளைதான் என் மேலதிகாரியும் எனக்கு வரப்போகும் கணவரும் என்று தெரிந்தவுடன், என் தேகம் புல்லரித்தது. பின்பு கேட்பானேன்! அடுத்த சுபமுகூர்த்தத்திலே எங்கள் திருமணம் வெகு விமரிசையாக நடந்தது. எங்கள் இணைபிரியா ஸ்நேகத்தை என்றும் மாறாமல் இருக்கும்படி என் அத்திம்பேர் செய்த பேருதவியை நானும் என் தோழியும் வாழ்வில் மறக்க முடியாத சம்பவங்களாகக் கொண்டுள்ளோம்.

ஆர். எஸ். கமலா,
தஞ்சாவூர்.

★ கவி பாடுவதில் கம்பன் புகழ் பெற்றிருந்தாற்போல் வெண்பா இயற்றுவதில் சிறந்து விளங்கினுர் புகழேந்தி.

# வெண்பாவிற் புகழேந்தி

"சன்மிஷ்டை"

தமிழில் பாக்கள் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என நான்கு வகைப்படும். அவற்றுள் வெண்பாவே மிகவும் சிறந்த தென்பது கற்றறிந்தோரது கொள்கை. அதனுல் அதற்கு முதற்பா என்றும் ஒரு பெயர் வழங்கி வருகின்றது. இத்தகைய வெண்பாவை இயற்றுதலில் புகழேந்திப் புலவர் மிக்க சிறப்பு அடைந்திருந்தமைபற்றி 'வெண்பாவிற் புகழேந்தி' என்னும் பழமொழி தமிழ் உலகத்தில் உலவி வருகின்றது.

இவ்விதமான பெருமை வாய்ந்திருந்த புகழேந்திப் புலவர், தொண்டை நாட்டிலுள்ள செங்கற்பட்டுக்கு அடுத்த பொன் விளைந்த களத்தூரில் வேளாளர் மரபில் இன்றைக்குச் சற்றேறக்குறைய ஆயிரம் வருடங்களுக்கு முன்பு தோன்றினுர். இவர் சந்திரன் சுவர்க்கி என்னும் ஒரு சிற்றரசனுல் முதலில் ஆதரிக்கப் பெற்ருர். இச்சிற்றரசனை இவர் தாம் பாடிய நளவெண்பாவில் பல இடங்களில் புகழ்ந்திருக்கின்ருர்.

இவர் உரிய பிராயத்தில் வித்தியாரம்பம் செய்விக்கப் பெற்றுத் தமிழ்நூல்களை ஐயந்திரிபறக் கற்றுணர்ந்து, கவி பாடுதலில் செவ்வனே பயின்று, பாண்டிய நாட்டை அடைந்து, அங்கே மதுரையம்பதியில் அரசாட்சி செய்துவந்த சார்வபூம பாண்டியனது நட்பைப் பெற்று, அவனது ஆஸ்தான வித்துவானுய் விளங்கி வந்தார்.

ஒரு காலத்தில் கொழும்புக்கும் சென்று அங்கே அரசனுயிருந்த ஆதிசேகரனைக் கண்டு, அவன் இவரை மதியாதபோது அவனைப் பாடாமல், தம்மை ஓடத்தில் ஏற்றிக் கொணர்ந்த ஓடக்காரனை,

"கயற்காவி நாறுங்
 கொழும்பிற்பர சண்டா
காரார் கொடைச்செங்கை
 ஆரோதன் மைந்தா
இயக்கா நின்மார்பிற்
 செழும்புன் னையந்தா
ரிப்போது நீ நல்கி
 லென்பேதை தன்மேற்
சயக்காம வேளம்பு
 தையாது முத்தின்
தாமஞ் சுடா
 சந்தனம் பூசினுலும்
தியக்காது வேயுஞ்
 செவிக்கும் பொறுக்கும்
தீயென்று மூளாது
 திங்கட் கொழுந்தே"

என்று புகழ்ந்து பாடினுர் புகழேந்தி. இதனைக் கேள்வியுற்ற இலங்கை வேந்தன் இவரிடம் ஓடி வந்து, இவரைப் பன்முறை வணங்கித் தனது சபைக்குத் தக்க மரியாதையுடன் அழைத்துச் சென்ருன். அங்கே பிரசங்கிக்கும்படி இவரை வேண்டிக்கொள்ளவும் இவர் சபையோர் யாவரும் வியக்கும்படி புத்த சமயத்தைப் பற்றி மிகவும் அழகாகப் பேசினுர். அதற்குப் பிறகு அரசனிடமிருந்து பன்னிரண்டு யானைகளைப் பரிசாகப் பெற்றுக் குமாரக் கடவுளை வணங்கி, ஒரு வெண்பா பாடினுர். இலங்கையிலேயே சிலகாலம் தங்கித் தமது புகழ்பரப்பி, மீண்டும் மதுரைக்கு

வந்து சேர்ந்தார் புலவர் புகழேந்தி.

இவர் காலத்தில், சோழநாட்டில் விக்கிரம சோழனுடைய ஆஸ்தான வித்வானாக இருந்த ஒட்டக்கூத்தர், அவ்வரசனுக்காகப் பாண்டிய அரசரிடம் பெண் கேட்க வந்தபோது, சோழராஜனுடைய பெருமை தோன்றும்படி அவனுடைய குதிரை, நதி, மாலை முதலியவற்றை ஒரு செய்யுளில் அமைத்துப் பாடினார். அப்போது புகழேந்திப் புலவர் அதற்கு மாறாக,

'' திருநெடுமா லவதாரஞ்
சிறுபுலியோ வம்மானே
சிவன்முடியி லேறுவதுஞ்
செங்கதிரோ வம்மானே
கரையெதிரல் காவிரியோ
வையையோ வம்மானே
கடிப்பகைக்குத் தாதகியங்
கண்ணியோ வம்மானே
ஒருமுனிவ னேரியிலோ
வுரைதெளித்த தம்மானே
ஒப்பரிய திருவிளையாட்
டுறந்தையிலோ வம்மானே
பரவைபணிந் ததுஞ்சோழன்
பதந்தனையோ வம்மானே
பாண்டியனார் பராக்கிரமம்
பகர்வரிதே யம்மானே. ''

என்று பாடினார்.

இதனைக் கேட்ட ஒட்டக்கூத்தர் சோழனைப் பின்னும் சிறப்பிக்கக் கருதி, '' வென்றி வளவன் விறல் வேந்தர் தம்பிரான்'', என்றும் ''முதுகுக்கிடன் கவசம்..'' என்றும் கூறி அச்செய்யுளைப் பூர்த்தி செய்யச் சிந்தித்துக்கொண்டிருக்கையில், புகழேந்தியார், '' துன்றும், வெறியார் கமழ் தொங்கல் மீனவர்கோன் கைவேல், எறியான் புறங் கொடுக்கினென்று '' என்று பாண்டியனது மேன்மை விளங்கும்படி அதிவிரைவிற் பாடி முடித்தார். அது முதல் புகழேந்தியார்பால் ஒட்டக்கூத்தருக்குப் பொறாமையும் பகைமையும் உண்டாயின.

பாண்டிய வேந்தன் பின்னர், தனது பெண்ணைச் சோழராஜனுக்கு மணம் செய்து கொடுத்து, அப்பெண்ணுக்காக அனுப்பிய சீதனப் பொருள்களுடன் புகழேந்திப் புலவரையும் அனுப்பினன். அப்புலவரைக் கண்ட ஒட்டக்கூத்தர், '' இவன் உம்மைப் பலவாறு பாண்டியனிடம் இகழ்ந்து கூறி, உமக்குப் பெண் கொடுக்க வொட்டாமல் தடை செய்தனன் '' என்று சோழராஜனிடம் கூறி அவன் மனதை மாற்றி விட்டார். சோழ மன்னன் புகழேந்தியின் சிறப்பை உணராமல் அவரைச் சிறையில் அடைக்கும்படி உத்தரவு பிறப்பித்தான்.

புலவர் சிறையில் இருந்து கொண்டு அங்கே தண்ணீரெடுக்க வரும் பெண்கள் செவிக்கு இனிமையாக, 'அல்லியரசி மாலை' 'பவளக்கொடி மாலை', 'புரந்தரன் களவு மாலை' என்னும் நூல்களைப் பாடித் தம் உணவிற்கு வேண்டிய பொருள்களை அவர்களிடம் பெற்றுத் தாமே சமைத்து உண்டு, மிகுதியைக் காவலாளிகளுக்கும் கொடுத்து அவர்களைத் தம் வசப்படுத்திக் கொண்டார். ஒருநாள் அரசன் மனைவியுடன் யானைமீதேறிப் பவனி வருகையில், அச்சிறப்பைக் காணுமாறு, புகழேந்திப் புலவர் சிறைச்சாலையில் மேல்தளத்தில் ஏறி நின்றார். அவரை ஒட்டக்கூத்தருக்கு அரசன் சுட்டிக்காட்டி, '' இவர் தமிழில் மகா சமர்த்தரல்லவா ?'' என்று வினவினன். கூத்தர் புகழேந்தியை இகழ்ந்து ஒரு பாடலைக் கூறினார். அப்போது புலவர் அரசனை நோக்கி, ''அப்பாடலை ஒட்டிப்பாடவோ, வெட்டிப் பாடவோ ?'' என்று கேட்டார். சோழராஜன் ஒட்டிப்பாடும்படி கூறவும் புகழேந்தி,

'' மாணவ னனந்த வாளரி
வேங்கையும் வற்றிச்செத்த
கானவ னனந்த வெரியுந்
தழலுங் கனைகடலின்
மீனவ னனந்த வெங்கட்
சுறவமும் வீசுபனி
தானவ னனக் கதிரோ
னுதயமுந் தார்மன்னனே ''

என்று ஒட்டக் கூத்தர் வெட்கமடையும்படி பாடினார். அரசன் புகழேந்திப் புலவரிடம் மிக்க மதிப்புக் கொண்டவனாயிருந்தும்,

ஒட்டக் கூத்தரிடம் உள்ள அபி மானத்தால் புலவரைச் சிறையி லிருந்து விடுவிக்க மனம் இசைய வில்லை.

சோழனிடம் பரிசு பெறவரும் புலவர்களில் தாம் கேட்ட கேள்வி களுக்கு விடை பகராதவர்களை ஒட்டக்கூத்தர் சிறையிலடைப் பித்துத் துன்புறுத்துவது வழக்கம். இங்ஙனம் அடைபட்ட புலவர் களில் சிலரைப் புகழேந்திப்புலவர் ஆராய்ந்தெடுத்து, அவர்களைக் கல்வியில் வல்லவராக்கினர் அவர்களுள் குயவன், வண்ணான். நாவிதன், கம்மாளர் முதலி யோர் நவராத்திரி காலத்தில் வழக் கப்படி அரசனுடைய சபைக்குச் சென்று, ஒட்டக் கூத்தர் கேட்ட கேள்விகளுக்குத் தக்கபடி விடை யளித்து, அவரை அவமதித்து மீண்டனர். இச்செய்திகளை எல் லாம் அறிந்த சோழராஜன் மனைவி, புகழேந்தியை அரசன் சிறை யினின்றும் விடுதலை செய்யா மைக்கு மிகவும் வருத்தமுற்ருள். அரசன் பள்ளியறைக்கு வரும் போது வாயிற் கதவை மூடித் தாழிட்டுக் கொண்டாள் ராணி.

அரசன் பலவாறு இனிய மொழிகள் கூறியும் மனைவி கதவைத் திறவாமையால், அவளுடைய சினத்தை தணிக் கும் பொருட்டு ஒட்டக் கூத்தரை அனுப்பினன். கூத்தர் போய் ஒரு பாடலைப்பாட, அரசி, "ஒட்டக் கூத்தர் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்" என்று மற்ருெரு தாழ்ப்பாளையும் போட்டாள்.

இது புகழேந்தியைச் சிறை யிலடைத்தமையால் வந்ததென அரசன் அறிந்து, தன் தவ றுக்கு வருந்தினன். புலவரைச் சிறையினின்றும்விடுவித்து, ராணி யின் கோபத்தைத் தணிக்கும் பொருட்டு அவரை அனுப்பினன். அவர்அங்ஙனமே சென்று இரண்டு கவிகள் பாடவே, அரசி மகிழ்ந் தாள் அது முதல் அரசன் புலவரை மிகவும் பெருமையாக நடத்தி வந் தாள். ஆயினும் புலவர் சோழ ராஜனிடம் இருக்க விருப்பங் கொள்ளாமல், முரணை நகரிலிருந்த சந்திரன்சுவர்க்கி என்னும் சிற்றர சனைச் சார்ந்து, அவன் வேண்டு கோளுக் கிணங்கி 'நளவெண்பா' என்னும் நூலைச் செய்து அவனி டம் பரிசு பெற்றுவாழ்ந்திருந்தார்.

'நளவெண்பா'வேயன்றி, 'செஞ் சிக்கலம்பகம், 'உவமான சங்கி ரகம்', 'இரத்தினச் சுருக்கம்' என் னும் நூல்களையும், சில தனிச் செய்யுட்களையும் புகழேந்திப் புலவர் இயற்றி இருக்கின்ருர்.

புகழேந்தியின் புகழை தமிழ் இலக்கியத்தில் நிலை நிறுத்தியுள்ள நூல் 'நளவெண்பா' என்றே கூறலாம். ★

## சோர்வுற்ற மனம்?

"ஸ்ரீராமா! மனவுறுதி இழந்தவன் எத்தகைய பெரும்படையைக் கொண்டும் தன் ஆபத்துகளிலிருந்து மீளமுடியாது.நெஞ்சில் உள்ள உறுதியை செயலில்பரிண மிக்கச் செய்ய முற்படுபவனே, எதிர்த்து நிற்கும் எத் தகைய ஆபத்துகளையும் சமாளிக்கும் தீரனுக விளங்கு வான். வெற்றியுடன் திரும்புவான்" என்று கூறிவந்த வானரமன்னன் சுக்ரீவனின் வாக்கு, உறுதியிழந்த ஸ்ரீராமன் நெஞ்சை உறுதி பெறச் செய்தது.

—ஸ்ரீ ராமாயணத்தில்

வினோபாவின்

# நிலப்புரட்சி இயக்கம்

வி. ஆர். ராதாகிருஷ்ணன்

உலகில் இதுவரை பல புரட்சிகள் நடைபெற்றுள்ளன. ''சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்'' — இவையே லட்சியம் என்று பறை சாற்றப்பட்டு நடந்த பிரெஞ்சுப் புரட்சியின் இறுதியிலே சர்வாதிகாரியான நெப்போலியன் தான் தோன்றினான்! முடியாட்சிக்கு முடிவு கட்டி குடியாட்சியை நிறுவுவோம் என்று போர் முரசு கொட்டி, முதலாம் சார்லஸின் தலையைக் கொய்த புரட்சியின் முடிவில் கிராம்வெல் என்பவனே சர்வாதிகாரியாக முடி சூட்டிக் கொண்டான். ''இரணியன் போல் அரசாண்ட 'ஜார்' ஆட்சிக்கு சமாதி கட்டி, ஒப்பில்லாத சமதர்ம சமுதாயத்தை ஸ்தாபிக்க ரஷ்யாவில் ஏற்பட்ட புரட்சியின் பலன், லெனின் சர்வாதிகாரத்திலும்— அதைவிட கொடுமை மிக்கப் பயங்கரமான ஸ்டாலின் ஆட்சியிலும் தான் முடிந்தது.

இருக்கின்ற நிலைமையில் மாறுதல் ஏற்படுத்துவதற்காக செய்யப்பட்ட புரட்சிகள், முன்பு இருந்த நிலைமையே பரவாயில்லை என்று எண்ணத் தோன்றும் அளவிற்கு இருந்து வந்தன.

புரட்சி என்று நாம் சொல்லும் போது ரகசிய பலாத்கார இயக்கம் தான் நினைவிற்கு வரும். கொலையும், கொள்ளையும், பலாத்கார கோரத் தாண்டவமுமே நம் மனக் கண்முன் தோன்றி மறைகின்றன.

இப்புரட்சிகளினால் மாறுதல்கள் ஏற்படவில்லை; சமுதாயத்தில் திடீரென்று புதிய வேகம் ஒன்று தோன்றியது—ஆனால், நீடித்து நிற்கவில்லை. பழைய மதிப்புகளும் மாறவில்லை. ஆகவே புரட்சி முழுப் பலன் அளித்ததாகச் சொல்ல முடியாது.

இந்தியாவில் இன்றைய தினம் புரட்சி ஒன்று நடைபெற்று வருகிறது; தனி நபர் சொத்துரிமையை, பொது சமுதாய உடைமையாக்க வேண்டுமென்ற கருத்தை பல ஆண்டுகளாக பல்வேறு அறிஞர்களும், கட்சிகளும் கூறிவந்த போதிலும், புதிய முறையில் இதற்கான முயற்சி ஒன்று நடைபெறுகிறது. இது பூர்ண வெற்றி அடைந்து விட்டதாக நாம் இன்று தீர்ப்பளித்துவிட முடியாது. ஆனால் இதுவரையில் கிடைத்துள்ள அனுபவத்திலிருந்து, வெற்றி பெறுவதற்கான சூழ்நிலை இருக்கிறதென்று சொல்லலாம்.

இயற்கை வளமான நிலங்களை தனி நபர்கள் உடைமையாக வைத்திருப்பதைக் கண்டித்து பல பொருளாதார நிபுணர்கள், தத்துவப் பேராசிரியர்கள்—அறிஞர்கள் எழுதி யிருக்கின்றனர். ''நிலங்கள் தனிவுடைமையாக இருக்கும் வரையில், உலகில் சுரண்டல் ஒழியாது. சமத்துவம் ஏற்படாது. வறுமை போகாது'' என்று ஹென்றி ஜியார்ஜ் என்னும் பேரறிஞர் கூறி யிருக்கிறார். மகான் டால்ஸ்டாயும், ''தனி உடைமையே சகல தீய சக்திகளின் வளர்ச்சிக்கும் தாயகம்'' என்று கூறி யிருக்கிறார்.

ஆசிய நாடுகளில் கோடிக்கணக்காகவுள்ள நிலையற்ற விவசாயிகளின் நிலப்பசியைப் போக்காத வரையில், அமைதியான வாழ்க்கை வாழ முடியாது என்று அறிஞர்கள் எடுத்துக் கூறத் தவறுவதில்லை. ஆசியாவின்

பிரச்னை நிலப்பிரச்னையே! அந்த நிலப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு முதலில் சோவியத் ரஷ்யாவிலே— பிறகு யுகோஸ்லேவியாவிலே— பின்பு சீனாவிலே கம்யூனிஸ வழியிலே சில முறைகளைக் கையாண்டார்கள். சோவியத் முறையினால் லக்ஷக்கணக்கான ஏழை விவசாயிகள் உயிர் இழந்தனர். சீனாவில் கம்யூனிஸ முறையை மாற்றியமைத்தாலன்றி, ஆட்சியாளர்கள் அமைதியாக வாழ முடியாது என்ற நிலைமை ஏற்பட்டு விட்டது! யூகோவில் விவசாயிகளுக்கு 'விலங்கு போடுவதில்' பலனில்லை என்று ஒப்புக் கொண்டு விட்டார்கள்.

பயமுறுத்தலும், பலாத்காரமும், கட்டுப்பாடும், நிர்ப்பந்தமும் விவசாயிகளை உற்பத்தியைப் பெருக்கத் தூண்டாதென்ற உண்மையை இப்பொழுது கம்யூனிஸ்டுகளும் ஒப்புக்கொள்ளுகின்றனர்.

இந்தியாவைப் பொருத்த வரையில் விவசாயிகளுக்கு நில உரிமை வெறும் வாழ்விற்கான சாதன மாத்திரமல்ல—அது அவர்களது வாழ்க்கைச் சித்தாந்தமாகும். விவசாய நாடான இந்தியாவில் புரட்சி என்று நாம் சொல்லும் போது, நிலப்பிரச்னையைத் தீர்க்கும் புரட்சியாகத்தானிருக்க வேண்டும்; இருக்கவும் முடியும்.

சுதந்திரமடைந்த இந்தியாவில் விவசாயிகளின் நிலப்பசியைத் தீர்த்திடுவோம் என்று சொல்லிக் கொண்டு பெரும் கிளர்ச்சியைத் துவக்கினார்கள் கம்யூனிஸ்டுகள். தெலங்கானாவில் எதிர்க்க முயன்ற மிராசுதாரர்களின் நிலங்களைப் பலாத்காரமாகப் பறித்துக்கொண்டனர். கொடுக்க மறுத்த மிராசுதாரர்களின் தலைகள் உருண்டோடின! வீடுகள் கொளுத்தப்பட்டன! பொருள்கள் சூறையாடப்பட்டன! இம்மாதிரியான பலாத்கார சம்பவங்களை எந்த அரசாங்கம்தான் சகித்துக் கொண்டிருக்கும்? ராணுவம் பாய்ந்தது—போலீஸ் பறந்தோடி வந்தது—கம்யூனிஸ்டுகளை அடக்குவதாகக் கூறி 'நரவேட்டை' ஆடினர், ராணுவத்தினர்!

இச்சந்தர்ப்பத்தில்தான் மற்றொரு புதிய புரட்சியும் தெலங்கானாவில் உதயமாகியது. இதுவும் ஒரு நிலப் புரட்சி இயக்கம்தான்! பலாத்கார சூழ்நிலை மிகுந்த தெலங்கானாவில் அஹிம்சை முறையை போதிக்க முற்பட்டார் காந்தி சீடரான வினோபா!

சத்தியாக்கிரக நெறியிலே புடம் போட்டு எடுக்கப்பட்ட சாந்தசீலர் வினோபா—கற்றறிந்த ஞானக்கடல்—கீதையின் தத்துவத்தை அன்றாட வாழ்க்கையில் அனுஷ்டிக்கும் அறிவுச் சுடர்—தீமையைச் சுட்டெரிக்கும் ஞானத்தீ அவர்!

அமைதியை நிலை நாட்ட அஹிம்சா பிரசாரம் செய்யச் சென்றார். அவர் கிராமம் கிராமமாக நடந்தே சென்றார். போகும் வழியிலே போச்சாம்பள்ளி என்று ஒரு சிறு கிராமத்தில் ஏழை விவசாயிகள், "உழுது வாழ நிலம் வாங்கித் தாருங்கள்," என்று கேட்டார்கள் வினோபாவை. "உழவர்களுக்கு நிலம் வேண்டும்; இருப்பவர்கள் தாருங்கள்" என்று கேட்டார். இராமச்சந்திர ரெட்டியார் என்ற மிராசுதார் பூமிதான இயக்கத்தை ஆதரிக்கும் வகையில் 'நூறு ஏக்கர்' நிலங்களை உடனே தந்தார்.

1951-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18-ம் தேதி இம்மகத்தான சம்பவம் நடந்தது.

புதிய முறையில் நிலப்பிரச்னையைத் தீர்க்க வழி ஒன்று பிறந்தது என்று நினைத்தார் வினோபா.

கம்யூனிஸ்டுகளின் பலாத்கார நிகழ்ச்சிகளினால்தான் தெலங்கானாவில் நிலம் கிடைத்ததென்று சொன்னார்கள். தெலங்கானாவிலிருந்து டில்லிக்கு நடந்தே சென்றார் வினோபா—போகும் வழியெல்லாம் மக்கள் நிலம் கொடுத்தார்கள். உத்திரப்பிரதேசம், வங்காளம், பீஹார், ஒரிஸா, ஆந்திரா ராஜ்யங்களில்தொடர்ந்து பூமிதான யாத்திரை நடத்தி வருகிறார் வினோபா.

ஆச்சாரியா வினோபா விதைத்த நிலப்புரட்சிவித்து நாடெங்கும் பரவி, முளைத்து படர ஆரம்பித்து விட்டது. சோஷலிஸ இயக்கத் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாரா யணன் இந்த இயக்கத்தில் சமதர்ம ஆட்சி மலரும் மார்க்கம் இருப்ப தைக் கண்டு, இதன்பொருட்டு சேவைசெய்து இத்திட்டத்தை வெற்றிபெறச்செய்வதையே, வாழ் வின் குறிக்கோளாகக் கொண்டு விட்டார்.

''நிலமிருப்பவர்களிட மிருந்து நிலத்தைப் பெற்று, நிலமில்லாத வர்களுக்கு அளிப்பது மாத்திரம் இப்பூமிதான இயக்கத்தின் நோக்க மல்ல. நிலம் இருப்பவர்களிடம் நான் பிச்சை கேட்கவில்லை. நில மில்லாத விவசாயிகளின் கோரிக் கையைத்தான் எடுத்துக் கூறி வற் புறுத்த, தார்மீக முறை ஒன்றைக் கடைப்பிடிக்கிறேன்'' என்று கூறு கிறார் வினோபா.

நிலங்களை இவ்விதம் வாங்குவ தால் துண்டாடப்படு மென்றும், அதனால் விவசாய விளைச்சல் பாதிக் கப்படுமென்றும் சிலர் சொல்லு கின்றனர். நிலத்தைப் பிரிப்பது இவ்வியக்கத்தின் நோக்கமல்ல. ஒன்றாகச் சேர்த்து கூட்டுறவு முறை யில் விவசாயிகள் இணைந்து விவ சாயம் செய்வதற்கும், வேலையற்ற நேரங்களை உபயோகமாகப் பயன் படுத்துவதற்கு சிறு தொழில்களை கிராமங்களில் ஏற்படுத்துவதற்கும் இவ்வியக்கத்தினர் முயலுவார்கள் என்றும் வினோபா கூறுகிறார்.

பூமிதான இயக்கம் அன்றாடம் வளர்ந்து புதிய புதிய கருத்துகளை தந்து வருவதையும் காண்கிறோம். ஜீவனுள்ள எந்த இயக்கத்திலும் இம்மாதிரியான வளர்ச்சி இருப்பது இயற்கை அன்றோ!

நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம் வாங்கித் தந்துவிட்டால் போதுமா? அவர்களுக்குப் பயிரிடு வதற்கான மற்ற சாதனங்களை வாங்கித்தர வேண்டாமா? இவை களுக்கு நிதிக்கு எங்கே போவது? அதற்காக சம்பத்தானம் - சாதன தானம் என்ற இயக்கங்களும் தோன்றியுள்ளன. நகரப்புறங் களில் வாழ்கின்றவர்கள் இந்த தானங்களை வழங்குகின்றனர். தங் களது வருமானத்தில் மாதம் ஒரு பகுதியை ஒதுக்கி வைத்து, கிரா மப் புனர்நிர்மாணப் பணிகளுக்கு அளிக்கின்றனர். ஒரு சிலர் விவ சாயத்திற்குத் தேவையான சாத னங்களை வாங்கித்தரவும் முன் வரு கின்றனர். மாடு, கலப்பை, உரம், விதை, மண்வெட்டி, கிணறு இவை களை வாங்கித்தருகின்றனர். இந்த இயக்கத்தின் பலனாக பரந்த அள விலே கிராமப் பொதுவுடைமை இயக்கம் பரவி வருகிறது. இதற்கு கிராமதானம் என்று பெயரிட்டிருக் கிறார் வினோபா! இக்கட்டுரை எழு தும் சமயத்தில் இந்தியாவில் 1038 கிராமங்கள் தானமாக வினோபா விற்கு கிடைத்துள்ளன. உத்திர பிரதேசத்தில்தான் முதன் முதலில் 'மாங்ரோத்' என்ற கிராமம் முழு தானமாகக்கிடைத்தது. தனிப்பட்ட ஒருவரின் கிராமம் அல்ல-கிராமத் தில் நிலமுள்ளவர்கள் பலர் இருந்தனர். எல்லோரும் ஏகோ பித்து தங்கள் நிலங்களை எல்லாம் விட்டுக் கொடுக்க சம்மதம் தெரி வித்தனர். அக்கிராமத்தில் நில மில்லாதார் இல்லை என்ற நிலைமை ஏற்பட்டு விட்டது. கிராமப் பொது வுடைமையாக நிலங்கள் ஆகிவிட் டன. இப்பிரதேசத்தில் புதிய தோர் கிராமம் தோன்றி விட்டது. ஒரிஸா ராஜ்யத்தில் இதுவரை 900 கிராமங்களில் பொதுவுடைமை சமுதாயம் நிறுவப்பட்டுள்ளது.

தமிழகத்தில் செங்கற்பட்டைச் சேர்ந்த வயலூர், சென்ற வருட காந்தி ஜெயந்தி முதல் பொது வுடைமை கிராமமாக மாறிவிட்டது.

போராட்டங்களில்லாமல், சட்ட சபை வாக்குவாதங்களில்லாமல் தார்மீக முறையில் இந்தியக் கிரா மங்களில் புதியதோர் புரட்சி மலர்ந்து வருவதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

கருணை வாழ்வின் அருணனை காந்தி சீடர் வினோபா, தமிழகம் நாடி வருகிறார். இப்புனித புரட்சி யின் வெற்றிக்காகத் தமிழ் நாடு தன் கடமையைச் செய்யத் தயங்காது. ★

# தமிழகத்தில் புத்தமதம்

"சத்யம்"

உலகத்தின் சிந்தனையைத் தூண்டி நல்வழி காட்டிய மகான்கள் பலருண்டு. அவர்களில் தலைசிறந்தவர் கௌதம புத்தர். வரும் வைகாசிப்பௌர்ணமியைபுத்தரின் 2500-வது ஜயந்தியாகக் கொண்டாட இந்திய நாட்டில் மட்டுமன்றி உலகின் பல பாகங்களிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. ஒரு காலத்தில் தமிழ் நாட்டில் புத்தமதமானது சிறந்து விளங்கியது என்பதற்கு இலக்கியச் சான்றுகள் பல உள்ளன

தமிழிலுள்ள ஐம்பெருங்காப்பியங்கள் சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்பன. இந்த ஐந்தில் வளையாபதியும் குண்டலகேசியும் முழுநூலாக நமக்குக் கிடைக்கவில்லை.சிந்தாமணி ஜைன சமயக் காவியம். மணிமேகலையும் சிலப்பதிகாரமும் ஏறக்குறையஒரே சமயத்தில் எழுதப்பட்டவை. சிலப்பதிகாரத்தில் தமிழ் நாட்டில் புத்த சமயம் மற்ற சமயங்களோடு சேர்ந்து வாழ்ந்திருந்த நிலையைக் காண்கின்றோம். வேறு சமய நெறியைக் கைக்கொண்டு ஒழுகும் மக்களும் புத்தபீடிகை,விகாரம் இவைகளைக் கண்டால் வணங்கிப் போற்றும் செய்திகளை அதில் காணலாம். ஒரே குடியில் பிறந்தவர்கள் வெவ்வேறு சமய நெறியைப் பின்பற்றுபவர்களாகத் திகழ்வதை உரைலாம். ''மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிட''த் தன் மகனுக்கு மணம் செய்வித்த கோவலன் தந்தை, மதுரையில் தன்மகன் இறந்தான் எனக்கேட்டுத் தன் செல்வத்தை புத்தவிகாரம் ஒன்றிற்கு எழுதி துறவியானதை சிலப்பதிகாரம் கூறும்.கோவலனும் கண்ணகியும் மதுரைமா நகர் செல்லுங்கால் கவுந்தியடிகள் என்ற சமண சந்நியாசினியைத் துணையாகப் பெற்று, அவர் வணங்கும் இடங்களில் தாமும் வணங்கி நிற்பதும் சமய சமரசத்தைக் காட்டும். 'மணிமேகலை' என்னும் காப்பியம் புத்தசமயக் கருத்துக்களைப்பரப்ப என்றே எழுதப்பட்டதாகத் தோன்றுகிறது. சிலப்பதிகாரத்தில் காணும்கதையமைப்பையோ நாடகத்தன்மையையோ 'மணிமேகலை' யில் காணமுடியாது. சிலப்பதிகார கதாநாயகனை கோவலனுக்கும் நாடகக்கணிகையான மாதவிக்கும் பிறந்த மணிமேகலை, பௌத்த சமயத்தைச் சார்ந்து, அதனை உலகில் பரவச்செய்த செய்கையையே 'மணிமேகலை' கூறுகின்றது. நீலகேசி என்ற சிறு காப்பியம் குண்டலகேசியில் கூறப்படும் புத்த சமயக் கருத்துக்களை மறுப்பதாக அமைந்துள்ளது. ஆதலால் குண்டலகேசியும் புத்தமதக் காவியமே என்று நாம் ஏற்றுக் கொள்ளலாம்.

புத்த சரித்திரத்தை இங்கே கூற வேண்டிய அவசியமில்லை. புத்தரை வேதமார்க்க விரோதி என்று கூறுகின்றவர்கள் உண்டு. அவர் வேத மதத்திற்கு விளக்கமானவாழ்க்கை நடத்தினர் என்று சிலர் கூறுவர். அவரை நாஸ்திகர், சூனியவாதி, அநாத்மவாதி என்று கூறுவர். புத்தர் தம்மை கடவுள் என்றோ, கடவுளின் மகன் என்றோ, தீர்க்க தரிசி என்றோ சொல்லிக்கொள்ளவில்லை. துக்கத்தின் மூலத்தை ஆராய்ந்து அதை நீக்க வழிதேட விரும்பிய ஒருவராக தம்மை எண்ணினர். மக்களிடையே காணப்படும் வேற்றுமைகள் நீங்கவும், ஒழுங்கான வாழ்க்கை ஏற்படவும் சில சட்டதிட்டங்களை உபதேசம் செய்தவர். அவர் கொண்டுவந்த சீர்திருத்தக் கருத்துக்கள் வைதிக மார்க்கத்தில் உள்ள சிலருக்கு அச்சத்தை ஊட்டின. அதனல் புத்தர் வைதிகமத விரோதி என்று கூறி அவர் பெருமையைக் குறைக்க முயன்றனர். எத்தனையோ

பிராமணர்கள் புத்தரின் கொள்கையால் கவரப்பட்டு அவருடைய சீடராக ஆனசெய்தியை புத்த சரித்திரத்தால் அறியலாம்.

புத்தர் தாம் வாழ்ந்திருந்த காலத்திலேயே தம் கொள்கைகளை வரையறுத்துக் கூறினர். தன் சீடர்களுக்குள் ஒற்றுமையும் ஒழுங்கும் ஏற்பட புத்த சங்கம் அமைத்து அது நடந்துவர வேண்டிய விதிமுறைகளை வரையிட்டார். துறவுக்குரிய பல்வகையான ஒழுக்கங்கள் இந்து, பௌத்த சமயங்களுக்கு ஒன்ருகவே இருப்பதைக் காணலாம்.

நாளடைவில் புத்தமதத்தில் எத்தனையோ மாறுதல்கள் தோன்றின. மகாயான மார்க்கம், ஈனயான மார்க்கம் என புத்தமதம் இரண்டாகப் பிரியத் தொடங்கியது. திபேத்து, சீன, ஜப்பான், போன்ற நாடுகளில் இன்றும் மகாயான மார்க்கமே உள்ளது. பர்மாவிலும் இலங்கையிலும் ஈனயான மார்க்கம் உள்ளது. பண்டையத் தமிழ் நாட்டில் ஈனயான மார்க்கம் பரவியிருந்தது. நாளடைவில் புத்த சமயம் புத்தரை தெய்வமாக்கியது. 'மணிமேகலை'யில் புத்த பிடிகையைத் தொழுங்கால் புத்தன் புகழ் பாடப்படுகின்றது. புத்தர் பல பிறப்புப் பிறந்த செய்திகள் ஜாதகக் கதைகளாக வளர்ந்தன. எந்த மதமும் கடைப்பிடிப்போரின் ஒழுக்க வாழ்க்கையைப் பொருத்தே வளர முடியும். நாட்கள் செல்லச் செல்ல புத்த சமயத்தில் வேண்டாத கொள்கைகள் எத்தனையோ புகுந்தன. இல்லறத்தார்க்குரிய பஞ்சிலம், இல்லறத்தாரில் துறவு நிலைவிரும்பும் சிரேஷ்டருக்கு அஷ்டசிலம், துறவிகளுக்கு தசசிலம் என்று ஒழுக்க முறைகள் வகுத்திருக்கும் விதம் மிகச் சிறப்பாகவுள்ளது. பௌத்த தரும தத்துவங்கள் பல இந்து தத்துவங்களுக்கு விளக்கமாயும் சில விரோதமாயும் அமைந்தன. ஒருவன் தன் செயலின் பலனை அனுபவித்தே ஆகவேண்டும் என்ற கொள்கை இரண்டிற்கும் பொது. கொல்லாமை, திருடாமை, வியபசரியாமை, பொய்கூருமை, கள்ளுண்ணுமை என்ற பஞ்சசிலத்தை முக்கியமாகக் கொண்டது புத்த தருமம். கடவுளைப்பற்றியோ, ஆன்மா பற்றியோ புத்தமதம் யாதும் கூறவில்லை என்ற காரணத்தால், அதை வேதவாதிகளும் வேதாந்தவாதிகளும்குறைகூறி எதிர்த்தனர். எதுவும் துன்பம், யாவும் தூய்மையில்லாதவை, யாவும் நிலையற்றவை, எல்லாம் உயிரற்றவை, (சர்வம் துக்கம், சர்வம் அசுசி, சர்வம் அநித்தியம், சர்வம் அநாத்மா) என்றகொள்கைசர்ச்சைக்குரியது. மக்களுடைய மனத்தின் சக்திக்கு அப்பாற்பட்டது. அதனல் மெல்ல மெல்ல மக்கள் அவைகளை ஒதுக்கிவிட்டனர்.

தமிழ் நாட்டில் சங்க காலத்தைத் தொடர்ந்து ஒரு மூந்நூறு ஆண்டுகள் புத்தமதமும் ஜைன மதமும் செழித்து வளர்ந்தன, ஒழுக்க நெறியைக் காட்டியதால் தமிழ் மக்கள் அந்த சமயக் கருத்துக்களை

### மகானின் மணிமொழிகள்

★ கண் அருகில் சிறு துரும்பு பறந்து வந்தாலும் இமை எவ்வித ஏவுதலுமின்றி துரும்பைத் தாக்கவேண்டி மூடிக்கொள்ளுகிறது. மண், பெண், பொன் மூவாசைகளையும் நம் மனக்கண் இவ்வாறே விரட்டமுற்பட வேண்டும்.

★ விஷத்தைக் கக்கும் விஷநாகத்திற்கும் இசையின் அருமை தெரிகிறதே! இசையின் இனிமை யறியாத மனிதன் அதைவிடக் கொடியவனு?

★ பழுத்தகனி மரக்கிளையில் எத்தனைநாள் தொங்க முடியும்? மூப்படைந்தவனும் உலகில் எத்தனைநாள் வாழ முடியும்? இயற்கை நிர்ணயித்த விதி, இரண்டிற்கும் ஒருநாள் அழிவு என்பதே!

நன்கு புரிந்துகொண்டு ஏற்றனர். மணிமேகலையில் புத்தபிரானைத் தேவதேவனாகத் தொழுவதோடு, புத்த சமயக் கொள்கைகளை எடுத்துக்கூறும் பகுதிகள் பல உள்ளன. அவை புத்த சமயத் தத்துவங்களை விளக்குவன. சமயக் கணக்கர் தந்திறங்கேட்ட காதை, தவத்திறம் பூண்டு தருமங்கேட்ட காதை முதலியன புத்த தரும தரிசனங்களையும் தர்க்க முறையையும் விளக்குகின்றன. அக்காலத்தில் விளங்கிய தர்க்க முறையை மணிமேகலை மூலம் நாம் அறிய முடியும். சிறந்த ஆராய்ச்சி செய்து மணிமேகலையை வெளியிட்ட டாக்டர் உ.வே. சாமிநாத ஐயரும், மணிமேகலையை ஆராய்ந்து அதிலுள்ள தர்க்க முறையைத் தனியே காட்டும் டாக்டர். எஸ். கிருஷ்ணசாமி ஐயங்காரும் தமிழ் நாட்டிற்குச் சிறந்த சேவை செய்துள்ளனர்.

இன்று தமிழ்நாட்டில் பௌத்தர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் இல்லை. காஞ்சியைச் சுற்றி சில இடங்களிலும் வேறு சில ஊர்களிலும் சமணர்கள் உள்ளனர். நன்றாகச் செழித்து வளர்ந்திருந்த புத்த மதம் தமிழ்நாட்டில் இல்லாமற் போகக் காரணம் என்ன என்று கேட்கலாம். தன் தனித்தன்மையை புத்தமதம் தமிழ்நாட்டில் இழந்து விட்டது உண்மைதான். ஆனால் புத்த சமயக் கருத்துக்கள் இங்கு வேரூன்றி இருக்கின்றன.

புத்த மதத்தைத் தமிழ்நாட்டிலிருந்து விரட்டியவற்றுள் பக்தி மார்க்க சமயமே சிறந்தது. கொல்லாமையை வற்புறுத்தும் புத்த சமயம், புலால் உண்ணாமையை வற்புறுத்தவில்லை. அதனால் இரண்டுக்கும் முரண்பாடு இருப்பது கண்டு மக்கள் தடுமாறினர். புத்தர் குசீநகரத்தில் வாழ்ந்த சந்தன் என்ற தட்டானால் கொடுக்கப்பட்ட பன்றியிறைச்சி கலந்த உணவை உண்டதால் அசௌக்கியமடைந்து உயிர் துறந்தார் என்று சரித்திரம் கூறுகின்றது. இவைகளை எல்லாம் சமணர்கள் சுட்டிக் காட்டி, புத்த மதத்தவரோடு வாதமிடும் செய்திகளை 'நீலகேசியில்' காண்கிறோம். ஞான சம்பந்தர் போன்ற பக்திமான்கள் புத்த வாதத்தை எதிர்த்து அன்புமயமான பக்தியால் செந்தமிழ் இசை பாடி எளிதில் ஆண்டவனை அடையலாம் என்று வழிகாட்டினர். திருவாசகமும், திவ்யப் பிரபந்தமும் பௌத்த சமய கருத்துக்களை மறுத்தன. புத்த சமயத்தின் வலிவு குறைந்து ஒழுக்கக்கேடு ஏற்பட்ட போது மக்கள் அதைக் கைவிட்டு, அன்பு மயமான சைவ வைஷ்ணவ வழிகளைப் பற்றினர். அந்த வழிகள் புத்த, சமண சமயத்து உயர்ந்த கருத்துக்களைத் தமதாக்கிக் கொண்டு, அவைகளில் கூறப்படும் அநுஷ்டிக்க முடியாத ஒழுக்கங்களை ஒழித்துவிட்டு, மக்களைக் கவர முயன்றன. துறவு நெறியன்றி நிர்வாண மார்க்கமில்லை என்றதை மறுத்து, துறவாமலே இல்லறத்தில் ஆண்டவனை துதித்து மோட்சம் பெறலாம் என்ற உண்மையை பக்தி மார்க்கம் காட்டியது, ஆதிசங்கரர் தோன்றி, வேதாந்த அத்வைத நெறியைக் காட்டி, அறிவு நிலையிலும் புத்த சமயத்தைத் தலை

### போரா போதூர்

மலாயா தீபகற்பத்திலுள்ள போராபோதூரில் புத்தராலயம் ஒன்று இருக்கிறது. உலகிலுள்ள புத்த விகாரங்கள் எல்லாவற்றிலும் மிகச் சிறப்பு வாய்ந்ததும் தோற்றத்தில் பெரிதுமாக விளங்குகிறது இக் கோயில்.

'போரா' என்றால் பெரிய என்றும், 'போதூர்' என்னும் சொல் 'போதகர்' என்பதன் மருவி வந்த பதம் என்றும் சொல்லப்பட்டு வருவதால் அறிவின் உருவாய் விளங்கிய புத்தரைச் சிறப்பிக்க 'பெரிய போதகர்' என்னும் பொருள் பட அவ்விடத்திற்கே 'போரா போதூர்' என்ற பெயர் வழங்கி வருகிறது.

யெடுக்க வொட்டாது செய்தார். சைவ சித்தாந்தம் தலையெடுத்த போது கொஞ்சமிருந்த புத்தசமயக் கருத்துக்களும் மறைந்தன.

ஒன்றுமட்டும் நாம் மறக்கலாகாது. புத்த சமயத்தை நாம் நாட்டைவிட்டுத் துரத்தவில்லை. அதை யேற்றவருக்குத் துன்பம் செய்யவில்லை. பிற்காலச் சோழ மன்னர்கள் நாகப்பட்டினத்து சூளாமணி விகாரத்திற்கு மானியங்கள் தந்த செய்தி அதைக் காட்டும். புத்தமதத்தில் கண்ட குறைகளை மகேந்திரவர்ம பல்லவன் எழுதிய 'மத்தவிலாசப் பிரகஸனம்' என்ற நூலில் காணலாம். அவைகளை நீக்கி உயர்ந்த கருத்துக்களை மக்கள் மனதில் இருத்திக் கொண்டு வைதிக மதத்தோடு கலந்து விட்டனர். புத்த சமயத்தினர் தமிழ் மொழிக்கும் செய்த தொண்டை யார் மறுக்க முடியும்?

இந்துமதம் புத்தமதத்தை இந்தியாவை விட்டு விரட்ட வில்லை. அதைத் தன்னோடு கலக்கச் செய்து விட்டது. புத்தபிரான் விஷ்ணுவின் அவதாரம் என்று மக்கள் நம்பும் அளவுக்கு இரண்டும் கலந்து விட்டன.

புத்தர் பிறந்ததும், போதிமரத்தடியில் ஞானம் பெற்றதும், பின்னுல் நிருவாணம் அடைந்ததுமான வைகாசப் பௌர்ணமி பௌத்தருக்கு மிகச் சிறந்த திருநாள்.

"இருதிள வேனிலில் எரிகதிர்
இடபத்து
ஒருபதின் மேலும் ஒருமூன்று
சென்றபின்
மீனத் திடைநிலை மீனத்
தகவையின்
போதித் தலைவனோடு பொருந்தி."

என்றும்

"மதிநாண் முற்றிய மங்கலத்
திருநாட்
பொதுவறி விகழ்ந்து புலமுறு
மாதவன்"

என்றும் 'மணிமேகலை' கூறுகிறது.

புத்தரின் உபதேசம் நம் மக்கட்குப் புது பலன் ஊட்டுவதாக. ★

## தாலதமாளிகை

இலங்கையிலுள்ள கண்டிமாநகரில் 'தாலதமாளிகை' என்னும் சிறப்பு பெற்ற புத்தராலயம் ஒன்று இருக்கிறது. இங்கு புத்தபிரானின் பல் ஒன்றை வைத்துப் பாதுகாத்து வணங்கி வருகின்றனர். புனித தந்தம் இருக்கும் மூலஸ்தானத்து வாயிலில், வெள்ளியும் யானைத்தந்தமும் பதித்த சித்திர வேலைப்பாடமைந்த கதவுண்டு. இதனுள்ளிருக்கும் வெள்ளிமேஜைமீது மணி வடிவமான ஒரு பாத்திரம் உண்டு. அதனுள்ளிருக்கும் ஏழு பெட்டிகளுள், அடியிலிருக்கும் கடைசி பெட்டியினுள் புத்தபிரானின் புனித தந்தத்தை வாசனை திரவியங்களிட்டு கெடாமல் பாதுகாத்துத் தொழுது வருகின்றனர் இலங்கை பௌத்தர்கள்!

★

சிற்பத்தில் காணும் புத்தர் பெரும்பாலும் மோன நிலையிலிருப்பது போலவே செதுக்கப்பட்டிருக்கிறது. ஆனுல் இலங்கைச் சிற்பங்களில் 'சிராவத்தியின் அற்புதச் செயலை,' யும் 'மாயாதேவியின் கனவுகளையும்' விளக்கும் சிற்பங்களைக் காண முடியும்.

அனுராதபுரக் காட்டில் பத்மாஸனமிட்டு, அன்பு ததும்பும் முகப் பொலிவுடன் விளங்கும் பளிங்கு சிற்பம் புத்தரின் தூய கொள்கைகளுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இன்றும் விளங்கி வருகிறது.

இவ்வாறு இலங்கையில் இன்றும் நாம் பார்த்துவரும் போதிசத்துவரின் சிற்பங்கள் யாவும் குப்தர் காலத்தவை என்று கூறப்படுகிறது.

* கண்கவர் அழகிற்கும் சுக வாசத்திற்கும் ஏற்ற இடம்

# நீலமுகில் தவழும் நீலகிரி

## லக்ஷ்மி ஸ்ரீநிவாஸ்

பாரதத்தின் தக்ஷிணப்பகுதியில் தெற்கு வடக்காய் வியாபித்திருக்கும் கிழக்குத் தொடர்மலைகளும், மேற்குத்தொடர்மலைகளும் கலக்கிற இடமே நீலகிரி என்பது. தக்கன் பீடபூமியின் தெற்கு எல்லை இதுவே. இந்த மலை ஜில்லா, கிழக்கு மேற்காய் 38 மைல் நீளமும் 25 மைல் அகலமும் உள்ளது. நிலகிரியின் வடக்கெல்லை மைசூர். கிழக்கிலும் தெற்கிலும் கோயமுத்தூரும், மேற்கில் மலையாளமும் மற்ற எல்லைகளாகும்.

நீலம் எனின் நீல நிறம்; கிரி என்பது மலை. எனவே, இச்சொற்றொடர் நீலமலை எனப்பொருள்படும். நீல மேகங்கள் மலைமேல் கவிந்து இருப்பதாலும், தூரப்பார்வைக்கு ஒரே நீலமாகத்தோன்றுவதாலும் இம்மலை நீலகிரி என்ற அழகிய பெயரைப்பெற்றது. இதன் உயரம் சராசரி 6500 அடி என்பர்.

இந்நீலகிரியானது கி.பி. 1800-ம் வருஷத்தில் சென்னை அரசாங்கத்தில் சேர்க்கப்பட்டது. அதுவரையில் இதன் அருமைபெருமைகளை எவரும் உள்ளபடி அறிந்து கொள்ளவில்லை. கொடைக்கானலை விட இரண்டு பங்கு மேலாகவே இதைக் கருதுகின்றனர் மருத்துவர்கள். நோயாளிகளுக்கு நல்ல சுகத்தைக் கொடுக்கக்கூடிய ஆரோக்கிய ஸ்தலம் இதைப்போன்று தென்னிந்தியாவில் வேறில்லை என்று எளிதில் சொல்லிவிடலாம்.

உயர்ந்த சிகரத்திற்குப் பெரியமலை என்று பொருள்படும் 'தொட்ட-பெட்ட' என்ற பெயர் வழங்கி வருகிறது. இம்மலையில் தான் 'மோயாறு' ஓடுகிறது. இந்த ஆற்றின் நீர்வீழ்ச்சியின் பெயர் 'பைகாரா' என்பது. இங்கிருந்து தான் நமக்கு மின்சார சக்திகிடைக்கிறது. பைகாராவில் தயாரிக்கப்படும் மின்சார சக்திதான் தென்னாட்டின் பல இடங்களுக்கும், விளக்குப் போடுவதற்கும் இயந்திரங்களை இயக்குவதற்கும் உபயோகப்படுத்தப்படுகிறது.

அருகிலிருக்கும் நீலாம்பூரில்தான் அரசாங்கத்தார் யானைகளைப் பிடித்து வளர்க்கிறார்கள். சிறுகுட்டிகளைப்பழக்கி விற்பனை செய்கிறார்கள்; குழந்தைகளின் விருப்பத்திற்கிணங்க பிறநாடுகளுக்கு இனமாகவும் வழங்குவதுண்டு. லாயத்தில் யானைகள் வளர்க்கும் முறைகளை அனுமதியின் பேரில் யாவரும் சென்று பார்க்கலாம். ஆனால், அவைகளுக்குத் துன்பம் செய்யும் வகையில் நடந்து கொள்ளக்கூடாது என்பது, சென்னை அரசாங்கத்தின் கண்டிப்பான கட்டளையாகும்.

முற்காலத்தில் முதன் முதலில் உபகாரச்சம்பளம் பெற்ற சில கலெக்டர்கள், நீதிபதிகள், மகாராஜாக்கள் இந்த நீலகிரிமலையைத் தங்களுக்குவாசஸ்தலமாகக்கொண்டனர். பழமரங்களான பலா, பேரி முதலியவைகள் செழிப்பாய் வளருகின்றன. மேற்புறத்திலுள்ள வைநாட்டில் நெல் விசேஷமாகப் பயிராகிறது. கோதுமை, சாமை, கேழ்வரகு, பார்லி, உருளைக்கிழங்கு, பீட்ருட் முதலியவைகளுக்குப் பெயர் பெற்ற இடம் இந்நீலகிரி தான். 'கோசா', என்னும் ஒரு வகைக் கீரை இங்கு ஏராளமாகக் கிடைக்கிறது. இங்கே விளையும் தேயிலையும் காப்பியும் மிகவும் உயர்ந்தவை. நீங்கள்கூட நீலகிரிக் காப்பிக்கொட்டை என்ற பெயரைக் கேட்டிருக்கலாம். இக்கொட்டையின் மணமும் ருசியும் தனிரகம். இதைப் பயிராக்கும் தோட்டக்காரர்கள் பெரும்பாலும் ஐரோப்பியர்களே!

நீலகிரி மலையின் ஆதிகுடிகள் தோடர்கள், இருளர்கள், படுகர்கள் ஆவார்கள். இவர்களுடைய முக்கிய தொழில் விவசாயமும் எருமைகளை வளர்த்தலுமே. தோடர்கள் எருமைகளை வளர்க்கிறார்கள். படுகர்களும். இருளர்களும் முறையே வேளாண்மையும் தோட்டவேலையும் செய்கிறார்கள். இவர்கள் திராவிட மொழிகளையே பேசுகின்றனர். படுகர் பழங் கன்னட மொழியையும், இருளர்களும் குறும்பர்களும் தமிழ் மொழியையும் கன்னட மொழியையும், தோடர்கள் கன்னடமும் தமிழும் கலந்த மொழியையும் பேசுகின்றனர். இம்மொழிகள் எல்லாம் தமிழோடு நெருங்கிய தொடர்புடைய மொழிகள் என்று கூறுவர், 'கால்டுவெல் பிஷப்' என்னும் பேரறிஞர். தோடர்கள் மொழியில் பெரும்பாலும் தமிழ்ச்சொற்களே காணப்படுகின்றன என்று 'பெர் நார்ட்ஸ்மித்' என்ற ஆராய்ச்சியாளர் கூறுகிறார்.

இந்த மலைநாட்டின் ஆதிகுடிகள் மிக ஒற்றுமையாகவும் சிக்கனமாயும் வாழ்ந்து வருகிறார்கள். நன்றாக உழைத்து ஜீவனம் செய்பவர்கள்; கள்ளங் கபடின்றி யாரிடத்திலும் நன்றாகப் பழகுவார்கள். சென்னை அரசாங்கத்தார் இவர்களுக்கு வேண்டிய படிப்பு, ஊண், உடை முதலிய பல உதவிகளைச் செய்து வருகிறார்கள். இங்கு விளைகிற தானியங்களையும் காய்கறிகளையும் படுகரே கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர்.

முற்காலத்தில் நீலகிரியைப் பார்க்க வேண்டுமானால் கால் நடையாகவே மலைமேல் ஏறி நடக்க வேண்டும். தற்போது வளைந்து வளைந்து செல்லக்கூடிய அழகிய 'காங்கிரீட்' ரஸ்தாக்கள் உள்ளன. 1896-ம் வருஷத்தில் முதன் முதலில் மேட்டுப்பாளையத்திலிருந்து குன்னூர் வரையும் சுமார் 17-மைல் தூரம்வரை இருப்புப்பாதை போட ஆரம்பித்தார்கள். தற்காலத்தில் உதகமண்டலம் வரை இருப்புப்பாதை போகின்றது. புகைவண்டி மலைகளை ஊடுருவிச் செல்வதும் மலையடிவாரங்களைச் சுற்றிச் சுற்றிச் செல்வதும் வியப்பும் அச்சமுமாய் இருக்கும். ஏனெனில், உதகமண்டலம் மலையின் மேல் அமைந்து இருக்கிறது. இக்காட்சி மிகவும் அற்புதமானது. அங்கங்கேயுள்ள குன்றுகளும் பள்ளத்தாக்குகளும், மரங்கள் அடர்ந்த செழித்த காடுகளும், நீர்வீழ்ச்சிகளும் இந்நீலகிரி மலைக்கு ஒருவிதமான காம்பீரியத்தை உண்டாக்குகின்றன. பிரயாணம் செய்யும்போதே இச்சிறப்பு நன்றாய் விளங்கும்.

நீலகிரி அதிகக் குளிர்ச்சியான பிரதேசமாகையால், பல தனவான்களும் உயர்தர அதிகாரிகளும் கோடைகாலத்தில் வெய்யிலின் வெப்பத்தைத் தாங்க முடியாமல் இங்கு வருவது சகஜமாகி விட்டது. பல சுதேச மன்னர்களின் அரண்மனைகளும், வாடகைக்கு வேண்டிய பங்களாக்களும் இவ்விடம் ஏராளமாய் உள்ளன. ஏப்ரல் மாத முதல் அக்டோபர் மாதம் வரையில் கோடையின் வெப்பம் தாங்காமல் ஏராளமான யாத்ரிகர்கள் இங்கு வருகிறார்கள்.

நீலகிரி ஜில்லாவின் தலைநகரம் உதகமண்டலமாகும். இந்நகரம் ஒரு நடனசாலை போல, 'தொட்டபெட்டா', 'சினோடன்', 'எல்கமலை', 'கிளப் மலை' முதலிய சிகரங்களால் சூழப்பட்டு அமைந்திருக்கும் காக்ஷி, கண்டவரைக் களிப்புக்கடலில் மூழ்கச் செய்யும். இதுவும் குளிர்மிகுந்த இடம்; எனினும் சுக வாழ்விற்குச் சிறந்த இடமாகக் கருதப்படுகிறது. பல வகைப்பட்ட மலர்கள் மலர்ந்து இந்நகரத்தை அலங்கரிக்கின்றன. ஆனால், சமவெளிகளில் பூக்கும் பூக்களின் நறுமணம் இங்கு உண்டாகும் பூக்களில் இருப்பதில்லை. இங்கு சுமார் 25,000 ஜனங்கள் வசிக்கிறார்கள். தமிழரின் ஜனத்தொகையே இப்பிரதேசத்தில் அதிகம்.

வெள்ளையர் ஆதிக்கத்தில் சென்னைக் கவர்னரும் அவருடைய மந்திராலோசனைசபையும் கோடைகாலத்தில் இங்கு முகாம் செய்து, அரசாங்க அலுவல்களை நடத்தி

வந்தது. ஆனால் ஆடம்பரத்தை வெறுத்துவரும் ஜனநாயக சர்க்காரில் அவ்வாறு நடைபெறுவதில்லை. சென்னை அரசாங்கத்துக்குச் சொந்தமான பல உன்னதக் கட்டிடங்களும், கவர்னர் மாளிகையும் அதனைச் சூழ்ந்த சோலைகளையும் இப்பொழுதும் அனுமதியின் பேரில் யாவரும் சென்று பார்க்கலாம். யாதொருவிதமான கட்டணமும் செலுத்தவேண்டியதில்லை.

ஏப்ரல், மே மாதங்களில் வெய்யில் கொஞ்சம் கடுமையாக, உறைப்பாக இருந்தாலும் அது வெப்பமாகவே தோன்றாது. தென்மேற்குக்காற்று ஜூன் மாதம் தொடங்கி செப்டம்பர் மாதம் வரையில் வீசுவதால் செடி, பயிர் பச்சைகள் எல்லாம் அதிகச் செழிப்பாக வளர்ந்து உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும். இப்பொழுதுதான் நீலகிரியைப் பார்ப்பதற்கு ஏற்ற காலம். இந்த நீலமலையில் பலத்த மழைபெய்வது வருஷத்தில் இருபது நாட்களுக்கு அதிகமில்லை. ஓரோர் சமயத்தில் பன்னீர் தெளிப்பதைப்போல் தூறல் விழும் நாட்கள் 80 எனக் கணக்கிட்டிருக்கிறார்கள் வானிலைவல்லுநர்கள். சுமார் இருபத்தெட்டு நாட்கள் மப்பும் மந்தாரமுமாக இருக்கும். ஆகவே, இங்கு வருஷத்தில் இருநூற்று நாற்பது நாட்கள் சௌகரியமானவை.

இங்குள்ள சுனைகளிலும் ஏரிகளிலும் இருந்து குழாய் மூலம் ஜலம் வருவதால் குடிதண்ணிருக்குப்பஞ்சமில்லை. தெள்ளுப்பூச்சி என்ற வகை பூச்சிகளின் தொல்லை அதிகமிருப்பதால் அதை ஒழிக்க உதகை முனிஸிபாலிடி முயன்று வருகிறது.

மலைக்காடுகளில் யானை, காட்டெருமை, புலி, சிவிங்கி, கரடி, காட்டுப்பன்றி, பலவகைமான்கள் முதலானவைஎப்பொழுதும்உண்டு. இவைகளை மனம் போனபடி வேட்டையாடி அழிக்கக்கூடாதென்று சென்னை அரசாங்கச்சட்டம் கடுமையாக அமுலில் இருந்து வருகிறது. பனியின் குளிருக்குப் பரிகாரமாக மலைச்சாதியார், மலைப்பாறைகளின் மேல் தினந்தோறும் 'நெகிடி' போட்டிருப்பார்கள்.

வாட்டமடைந்தவருடைய மனத்தைக்கவர்ந்து மகிழ்ச்சியைக் கொடுக்கும் காக்ஷிகள் அளவற்றவை, பார்க்கும் இடமெங்கும் வெகு அழகாய்க் காணப்படும். இவைகளைக் காணும் அவாவினால் ஆடவரும் பெண்டிரும் உதயகாலத்தில் வரிசைவரிசையாய்ச் சென்று சோலைகளிலும் சாலைகளிலும் கூடி நிற்பர்; இக்காட்சி காண விநோதமாய் இருக்கும். உடற்பயிற்சி செய்யாதவரும், உடம்பில் சுறுசுறுப்பு உண்டாகும்படி காலைமாலைகளில் உலவி வருவார்கள்; குதிரைச்சவாரி செய்வோருமுண்டு.

அங்கங்கே சிற்சில இடங்களை நந்தவனங்கள் சூழ்ந்திருக்கும். மேலே மேகங்கள் கவிந்திருப்பதால் செடிகளோ, கொடிகளோ அல்லது புஷ்பங்களோ வாடுவதில்லை.

மலைச்சாரல் எங்கும் சந்தன மரங்கள் நெருங்கியிருக்கும். அவைகளின் மலர்களில் வண்டுகளும், கிளைகளில் குரங்குகளும், கிளையின் உச்சியில் பலவிதமான பறவைகளும், வேரிலும் பொந்துகளிலும் சர்ப்பங்களும் மொய்த்திருக்கும். சிற்சில இடங்களில் கற்பூரமரங்களும், கடுக்காய் மரங்களும் பயிராகின்றன. கற்பூரமரங்களின் இலைகளிலிருந்தும் பட்டைகளிலிருந்தும் கற்பூரத்தைலம் வடிக்கப்படுகின்றது. கொயினா மாத்திரையும், அதன்பொடியும் செய்வதற்கு வேண்டிய 'சின்கோனா' மரங்கள் ஏராளமாகப் பயிர் செய்யப்படுகின்றன. வானளாவிய கிளைகளோடு கூடியமரங்கள் தழைத்திருக்கும். மேலும், அங்கங்கே சில குகைகள் உண்டு; அழகுமிக்க நீர்ச்சுனைகளில் பளிங்கு போல நீர் தேங்கியிருக்கும். பச்சைப்பசேலென விளங்கும் மூங்கில்களின் உச்சியில் மாங்காய்வடிவமான தேன்கூடுகள் தொங்கிக்கொண்டிருக்கும். கண்ணுக்கினிய காட்சிகளும், செவிக்கினிய நாதங்களும், பலவிதமான பரிமளங்களும் கவிவாணர்கள் பாடுதற்கேற்ற கற்பனைகளை உதவுவனவாக இருக்கின்றன. முற்காலத்தில் இதனையே குறிஞ்சி நிலம்என அழைத்தனர்போலும்! ★



# நீலகிரி பிரயாணம்

நிழலின் அருமை வெயிலில்தான் தெரியும். நீலகிரியின் அருமையை உணர்த்துவது கடுங்கோடைதான்.

தென்னுட்டில் பல பிரதேசங்களில் கோடை ஆரம்பமானவுடன் உஷ்ண மானியில் ரஸம் ஏறிக்கொண்டே போகிறது. சிற்சில இடங்களில் 116 டிகிரி உஷ்ணம் மனிதர்களை வாட்டி வதைக்கிறது. இச்சமயத்தில்தான் உஷ்ணம் சகிக்காது பலர் மலை நோக்கி பிரயாணம் செய்கின்றனர். வெள்ளை அரசாங்கம் நடந்த காலத்தில் அரசாங்கமே சென்னையிலிருந்து உதகைக்கு மாறிவிடும். கவர்னர், பிரதானிகள், காரியஸ்தர்கள் அனைவரும் உதகையின் மிதஉஷ்ணத்திலிருந்து கொண்டு நம்மை ஆண்டு மனம் குளிர்வார்கள். இப்பொழுது நம் கவர்னர் மாத்திரம் உதகை சென்று விடுகிருர். ஜனநாயக மந்திரிகள் நம்முடனிருந்து கொண்டு உஷ்ணத்தை சந்தோஷமாக ஏற்றுக் கொள்கிருர்கள்.

மேட்டுப்பாளையத்திலிருந்து கிளம்பும் சிறிய ரயில்வண்டிப் பிரயாணத்தின் போதே சீதோஷ்ண நிலையின் வித்தியாசத்தை அனுபவிக்க ஆரம்பித்து விடுகிருேம்.

போட்டோக்கள் : ஆசிரியர்.

ரயிலில் செல்லும் போது பச்சைப் பசேலென்ற உயர்ந்த மலைகளும் கிடுகிடு பாதாளங்களும் காட்சியளிக்கின்றன.



உதகையை அடைந்து
விட்டோம். உதகை
நகரின் மத்தியில் குதி
ரைப்பந்தயமைதானம்
அமைந்திருக்கிறது.





அலங்காரக்கொடிகள் படர்ந்த கமான் வழியாக உதகமண்டலம் நகரைப் பார்க்கிறோம்.

எங்கு பார்த்தா
லும் பசுமை
நிறமும் அதன்
மத்தியில் பல
வண்ண மலர்
களும் இச்சோ
லையில் மிளிர்
கின்றன.





கண் கவரும் பூக்களும்
காட்டு ரோஜாவின் அழகும்
காண்பவர் மனத்தைக்
கொள்ளை கொள்ளும்.





நீலமுகில் தவழும் நீலகிரிப் பிராந்தியத்தில் பசுமை தவழும் இப்பூஞ்சோலை ஏகாந்தத்தை நாடிச் செல்பவருக்கு ஏற்ற இடம்.



மஞ்சள், சிவப்பு, ஊதா, நீலம் கிச்சிலிப் பழம் முதலான பலவேறு வர்ணங்களை இயற்கையன்னை அள்ளி வீசியிருக்கிறாள் உதகமண்டலத்திலுள்ள பூச் செடிகளின் பேரில்.

# பிறை

'மகரம்'

பிறைச் சந்திரன், சாபத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது போலவே, மன்னிப்புக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறான். தான் குறைந்திருந்தும், அரனாரின் கருணைக்கு என்றும் அழிவில்லை, அது குறையாத பௌர்ணமி என்னும் உண்மையைக் கோபுரத்தின் மீதேறிக் கூறுவது போல இருக்கிறது, சிவனாரின் ஜடாமகுடத்தில் அவன் அமர்ந்திருக்கும் காட்சி!

''சிவன் முடியில் ஏறும் பேறு பெற்றதனால் செங்கதிரோனை விடத் தண்கதிரோனான சந்திரனே பெருமை உள்ளவன்'' என்று சந்திரனுடைய புகழை ஏந்திக்காட்டினார் ஒரு புலவர்! பூரண சந்திரனை விடப்பிறைச் சந்திரனே போற்றுதற்குரியவன் என்பதும் இதே காரணத்தினால் தெளிவாகிறது. ''பித்தா! பிறை சூடி!'' என்று சிவபெருமானை பக்தர்கள் அழைத்தார்களே யல்லாமல், ''முத்தே! பவழமே! முழுமதிசடை வைத்த முதல்வனே!'' என்று அவர்கள் பாடவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

பூரண சந்திரன், அவனைக்கண்டு மயங்குகின்றவர்களுடைய மனத்தில் மாத்திரம் காமத்தை எழுப்பவில்லை; அவனுடைய மனத்திலேயே அவனுடைய பூரண நிலவு காமத்தை எழுப்பிவிட்டிருக்கிறது என்று புராணம் சொல்கிறது! சந்திரனுடைய இந்த இழிவின் – அவமானத்தின் சின்னம்தான் இந்தப்பிறை வடிவு! சந்திரன் ஒரேயடியாகத் தேய்ந்து, நிரந்தரமான அமாவாசையாக அழிந்து போகாமல், அவனைத் தடுத்து ஆட்கொண்ட சிவபெருமானுடைய கருணைக்கு ஒரு எடுத்துக்காட்டு இந்த இளம்பிறை! ''பிழைத்தால் பொறுக்கவேண்டாவோ பிறைசேர் சடையாய்!'' என்பது திருவாசகம். ''சந்திரன் செய்த பிழையைப் பொறுத்து, அவனைத்தலையின் மேல் வைத்துக்கொண்டாடும் நீ, அடியவனான என்னுடைய பிழைகளையும் பொறுப்பது தானே நியாயம்!'' என்று கேட்கிறார் மாணிக்கவாசகர்.

பரமசிவனின் நுதல் பிறைக்கு அடுத்தபடியாக நமக்கு ஞாபகம் வருவது, மகளிரின் பிறை நுதல் தான்! முன்னதைக் கொண்டு நமது முன்னோர்கள் புண்ணிய புராணங்களைப் புனைந்தார்களென்றால், பின்னதைக்கொண்டு காதல் காவியங்கள் பல உருவாக்கியிருக்கிறார்கள். ''பெருந்தடங்கண் பிறை நுதலார்கள்'' எல்லோரும் தாங்கள் அழகிகள் என்பதை எழுதி ஒட்டிக் கொள்வது இதே பிறை நுதலில் தான்!

''மீனினம் பிறையை வந்து கதுவுறுகின்றதென்ன,'' சீதையின் நெற்றியை ஒட்டினாற் போலக் கல்லிழைத்த சுட்டி முதலிய ஆபரணங்களைப்பூட்டி விட்டார்களாம் சீதையின் தோழிகள்! ''எந்நாளும் வளரா,'' ''முழுநாளும் குறைவேயாகி விளங்கும் பிறைமதியைப் பெண்களுடைய நுதலுக்கு உவமை சொல்லும்

தமிழ்க் கவிகளுக்குக் குறைவேயில்லை.

சீதையின் உருவ வர்ணனையை, மூக்கிழந்த தங்கை மொழியக் கேட்ட ராவணன் மதியிழந்து விடுகிறான். விரகதாபம் விஞ்சுகிறது. சூரியனுடைய வெப்பம் தாங்காமல் போகவே, அவனை மறையச் சொல்லி விட்டுச்சந்திரனை வான வீதியில் உதிக்கச்சொல்லுகிறான். அப்படி உதித்த பூரண சந்திரனுடைய ஒளி, அவனைச் சூரியன் போலவே தகிக்கிறதாம்! சூரியனுக்கும் முழுமதிக்கும் வித்தியாசம் தெரியாத நிலையில் ராவணன், பௌர்ணமி சந்திரனைப் போகச் சொல்லிவிட்டுப் பிறைச்சந்திரனை, ''வான வீதியில் வா!'' என்று அழைக்கிறான்! ''மாலைப் பிறைப் பிள்ளையைக் கூவுதிர் வல்லை என்றான்,'' என்கிறார் கம்பர். அப்படி இளம் பிறையாகி முளைத்த சந்திரனைக் கண்டும் ராவணனுடைய உடல் தாபம் குறையவில்லை. குணங்கள் தீயோனான ராவணனுக்கு அந்தப் பிறையானது ''பாம்பின் விடவாள் எயிறு'' போலவே தோன்றியதாம். அமுதம் சொரியும் அழகிய பிறை, விஷம் கக்கும் பாம்பின் பல்லைப்போலத் தோன்றவேண்டுமானால், பார்ப்பவருடைய மனநிலையையே அது பொருத்திருக்கிறது என்றாகிறதல்லவா?

காலநேமி என்னும் அசுரன் மேல் திருமால் ஏவிய சக்ராயுதம் போல, சூரியன், மேற்கு திக்கிலிருந்த மலைகளின் மீது மோதி மறைந்தானும். சக்கரத்தினால் தலையில் தாக்குண்ட அரக்கனுடைய ரத்தத்தைப்போல மேல் வானம் சிவந்து காட்டிற்றாம். இப்படி ரஸமாக வர்ணித்துக் கொண்டு போகும் கம்பர், தமது வர்ணனையை மேலும் பூர்ணமாக்க விரும்பி, ''வெட்டுண்ட அரக்கனுடைய வாயிலிருந்து உதிர்ந்த ஒப்பற்ற அவனது கோரப்பல்லைப் போலப் பிறைச் சந்திரன் காட்சியளித்தான்,'' என்கிறார்.

''சக்கரம் தானவன் தலையில்
தாக்குற
எக்கிய சோரியில் பரந்த
தெங்கணும்
செக்கரத் தீயவன்
வாயிற்றீர்ந்துவே(று)
உக்கவான் தனி எயி(று)
ஒத்த(று) இந்துவே''

பிறையைப் பற்றியதேயானாலும் கவிதையும் கற்பனையும் பூரணமாகப் பொலியும் பாடல் இது என்றும் சொல்லலாமல்லவா?

வியாச மகரிஷி மகாபாரதத்தை அதிவேகமாக 'டிக்டேட்' செய்து வர, விநாயகர் அதை அதி அவசரமாக 'ஷார்ட்ஹாண்ட்' எடுத்து வந்தாராம்! திடீரென்று எழுத்தாணியானது 'மளுக்' என்று முறியவே, வேறு எழுத்தாணியைத் தேடிப்போக அவகாசமில்லாமையால், தனது தந்தங்களில் ஒன்றை ஒடித்து அதைக்கொண்டே பாரதம் முழுவதையும் எழுதினாராம். நமக்கு ஆகவேண்டிய வேலை முடிந்தவுடன் நமக்கு உதவி செய்தவர்களை நாம் மறந்து விடுவது போல, விநாயகரும் ஆபத்தில் உதவி செய்த தமது தந்தத்துண்டை பிறகு மறந்து போய் கை சோர விட்டு விட்டாராம்! ஒரு நாள் - அமாவாசைகழித்து மூன்றாம் நாள் – மேற்கு வான விளிம்பில் முளைத்திருந்த பிறைச்சந்திரனைப் பார்த்ததும், ''இதோ! இதுதான் நான் தொலைத்துவிட்ட என்னுடைய தந்தம்!'' என்று தமது தும்பிக்கையை நீட்டிப் பிறையைத்தொட முயன்றாராம் விநாயகர்!

''இந்து முறியைத்தன்
இற்றொழிந்த—தந்தம்
எனநினைத்துக் கைநீட்டும்
ஏர்சேர் களிற்றைத்
தினம்நினைந்து போற்றுவீர்
சீர்!''

என்றபாடலில் கவிதையின் பூரண நிலவுபொழியா விட்டாலும், பிறையளவுக்காவது அது பளிச்சிடுவதைக் காணலாம்.

ஒட்டக்கூத்தருக்கும் புகழேந்திக்கும் ஔவைப்பிராட்டியார் ஒரு பரிட்சை வைத்தாராம். சந்திரனுடைய பரியாயப்பெயர் ஒன்றைப்பாட்டின் ஈற்றடியில் மூன்று

முறைவைத்துப்பாட வேண்டும் என்பதுதான் பரீட்சை. ''பிள்ளை மதிகண்டுப்பேதை பெரியமதியும் இழந்தாளே!'' என்று ஒட்டக்கூத்தர் பாடினாராம். மூன்றுமுறை மதி வாராமல், இரண்டு முறையே அச்சொல் வந்ததனால், ''ஒட்டா, ஒரு மதிகெட்டாய்!'' என்றாராம் ஔவையார். புகழேந்தியோ,

''வெங்கட்பிறைக்கும், கரும்
பிறைக்கும் மெலிந்தப்பிறைக்கும்
விழிவேலே!''

என்று பிறை என்ற பதச்சேர்க்கை மும்முறை வரும்படி பாடினாராம். ஔவையாரும் குறையில்லாத ஆசியைப் புகழேந்திக்கு வழங்கிச் சென்றார்.

மூன்றாம் பிறையின் வடகோடு உயர்ந்திருந்தால் தேசத்துக்கு சுபிட்சம் என்றும், தென்கோடு உயர்ந்திருந்தால் கெட்ட அறிகுறி என்றும் சிலர் நம்புகிறார்கள்.

பட்டினத்தாரோ முற்றும் துறந்த முனிவர். கோடிக்கணக்கான செல்வத்தை ஒரே விநாடியில் துறந்து வெளிவந்தவர். உலகம் எக்கேடு கெட்டாலும் அவருக்குக் கவலையில்லை! ஏனென்றால் அவர் எக்கேடு கெட்டாலும் உலகம் அவரைப் பற்றிக் கவலைப்படாது என்பதை அவர் அறிந்திருந்தார். அதனால்தான் அவர் மூன்றாம் பிறையைப்பற்றிய ஆராய்ச்சியில் சிரத்தை காட்டவில்லை.

''வடகோடுயர்ந்தென்ன, தென்கோடுயர்ந்தென்ன வான்பிறைக்கே!'' என்று அஸ்வாரஸ்யமாகப் பதில் சொல்லி விட்டார். ''எல்லோரும் இன்புற்றிருக்க நினைக்கும்'' தாயுமானவர், ஒருவேளை இந்தப் பிறையின் நிலையை அறிந்து கொள்ள ஆவல் காட்டியிருக்கலாம்!

நாலாம் பிறைச் சந்திரனைப் பார்க்க நேர்ந்தால், அபவாதம் உண்டாகும் என்றும் நாம் நம்புகிறோம். ஆனால் நமது கண்களில் மாதா மாதம் தவறாது படுவது இந்த நான்காம் பிறைச் சந்திரன் தான்! மனைவியின் மனம் கோணாமல், நாம் நாளொரு சினிமா, வாரம் ஒரு கச்சேரி, மாதம் ஒரு புடவை, அயனம் ஒரு நகை, வருஷம் ஒரு பட்டுப் புடவை என்று அவளைத் திருப்திப்படுத்தி வைத்திருந்தும், அவளுடைய இஷ்டப்படி நாம் நடப்பதில்லை என்னும் அபாண்டம் நம்மீது சுமர்வதன் காரணம் என்ன? நாம் நான்காம் பிறையைப் பார்த்த காரணம் தான்! காரியாலயத்தில் தூங்குகிறவர்களுடைய வேலையையும் இழுத்துப் போட்டுக் கொண்டு நாம் செய்தும், நம்முடைய வேலையைப் பற்றி மேலதிகாரி அதிருப்தி தெரிவித்தால் அதற்கு அவரைக் குறை சொல்லி என்ன பயன்? நாம் பார்த்த நான்காம் பிறையையல்லவா குறை சொல்ல வேண்டும்!

''அதோ! அதோ ஷவ்வால் பிறை!''

தலையில் பிறை வடிவம்

நமது சினிமா டைரக்டர்களுக்கு சந்திரன் தேய்ந்து வளர்பவன் என்பது தெரிவதில்லை! ஊரடங்கின பிறகு — இரவு சுமார் பதினோரு மணிக்கு காதலனும் காதலியும் ஊருக்கு வெளியே பாழ்மண்டபத்திலோ, பார்க்கிலோ சந்திப்பார்கள். அப்பொழுது பார்த்துப் பூரண நிலவு கீழ்வானில் புறப்படும்! இதைவிட ஏழாம் பிறைச் சந்திரன் மேல் வானில் அஸ்தமிக்க இருப்பதாகக் காட்டினால் பொருத்தமாக இருக்குமே! சினிமா வானில் முழு மதிக்கும் வானத் தாரகைகளுக்கும் இடம் உண்டு. நடுவில் உள்ள பிறைக்கு இடமே கிடையாது!

மூன்றாம் பிறை ஊனக் கண்களுக்கு எளிதில் புலப்படாத ஒன்று. மாலையில், மேற்கு மலைச் சிகரங்களுக்கிடையிலும் மேகப்படலங்களுக்கு நடுவிலும் உரித்த நகத்தைப் போன்ற அது கண்ணாமூச்சியாடுவதைக் கண்டு பிடிக்க ஓரளவு பயிற்சி வேண்டும். கார்த்திகை மாதத்து பௌர்ணமியே கார்த்திகை பிறையாகிறது. கார்த்திகை மாதத்தில் வானம் மப்பும்மந்தாரமுமாயிருப்பதால் கார்த்திகைப் பிறையைப் பார்ப்பது கடினம். இதனால் தான் அபூர்வமாக நம்மைத் தேடி வரும் நண்பர்களையும் உறவினர்களையும், ''ஏது! கார்த்திகைப் பிறையைக் காண்பது போலிருக்கிறது!'' என்று நாம் உபசாரம் சொல்லி வரவேற்கிறோம்!

ஓயாத கவலைகளாலும், வாசனை தைலங்களில் மோகங் கொண்டு கேசம் வளர்க்க விரும்பியதாலும் உள்ள கேசத்தையும் பறிகொடுக்க நேரிட்டு நமது தலையில் பல உருவங்களில் வழுக்கை விழுகின்றது. பூஷணி கீற்றைப் போன்றும், அஷ்டமி சந்திரனைப் போன்றும், நான்காம் பிறையைப் போலவும் நம்மில் வழுக்கை விழுந்தவர்கள் அனந்தம்.

## 'ரம்ஸான்' பிறை!

நம்முடைய முகமதிய சகோதரர்கள் இம்மாதம் 'ரம்ஸான்' என்னும் திருநாளை சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். 'ரம்ஸான்' மாதப் பகல் முழுவதும் பசியும் பட்டினியுமாகக் கழித்து வந்த அவர்களுக்கு, மேலைவானில் மினுக்கும் ஷவ்வால் பிறை எத்தகைய ஆனந்தத்தைக் கொடுக்கிறது! மாதம் முழுவதும் உடலை வருத்தி இருந்த நோன்பின் முடிவை அது குறிப்பிடுகிறது. குழந்தைகள் தமது குஞ்சுக்கரங்களால், ''அதோ'' என்று காட்டவும், அக்குழந்தைகளைப் பெற்ற குலமாதும் மஹ்ஜபீன் (பிறைநுதலாள்) என்று அழைக்கத்தக்கவளுமான மனைவி (கள்?) தனது பிஞ்சுக் கரங்களால். ''அதோ அதோ!'' என்று சுட்டிக் காட்டவும் குடும்பத்துடன் பிறை கண்டு களிக்கிறார்கள் அவர்கள்.

பிறையின் மெலிந்த தோற்றத்தைக் கண்டவுடன் அதுவும் அவர்களைப் போலப் பட்டினி கிடந்ததோ என்றும் நினைக்கிறார்களாம்!

''நோன்பொரு திங்கள் இருந்ததுவோ! பிறை நுதல்போல் உடலும் மெலிந்ததுவோ?'' என்று கவிஞர் துறைவனுடன் நாமும் சேர்ந்து ஆச்சர்யப்படுகிறோம்.

பிறை கண்டு இறை வணங்கும் வழக்கமும், பிறைநுதல் கண்டு பேதுறும் வழக்கமும் உலகில் உள்ள வரை பிறையின் புகழ் என்றும் வளர் பிறைதான். ★

# கவி ரவீந்திரர்

''கஜானனன்''

கவிஞர்கள் தாங்கள் வாழும் நிலவுலகைப் பற்றிய சிந்தனையின்றி, எப்போதும் மானஸீகமாக கற்பனையுலகிலேயே சஞ்சரிக்கக் கூடியவர்கள் என்ற எண்ணம் நம்மில் அநேகருக்கு உண்டு. ஆனால், கவிஞர்களில் ஒரு சிலரே அவ்வாறிருந்தனர். பெரும்பாலோர் மானஸீக சிந்தனையைத் துணைகொண்டு, நிலவுலகின் இன்ப துன்பங்களிலும், தன் சுற்றுப்புற வாசிகளின் சுக துக்கங்களில் பங்குகொண்டும் வாழ்ந்திருக்கின்றனர். அதற்கு சிறந்த உதாரணமாக வங்கக்கவி ரவீந்திரரைக் கூறலாம்.

கவியின் வாழ்வில் அவர் கூறிய பொன் மொழிகள் தவிர, சர்வ சாதாரணப் பேச்சில்கூட இன்சுவை நிறைந்தும் கவித்வம் மிகுந்துமிருப்பதைக் காணலாம்.

இம்மாதம் 8-ந்தேதி கவியின் 95-வது ஜன்மதினம் கொண்டாடப்பட்டது. கற்றவர்களைக் காட்டிலும் பாமரருடன் பழகி, அவர்களது அறியாமையைப் போக்க முயற்சிப்பதையே, தன் ஜீவிய லட்சியமாகக் கொண்டிருந்தார்.

''என் கீதாஞ்சலியை உலகம் போற்றுவதைக்கண்டு நான் பெருமை கொள்வதைவிட, என் வீட்டு சமையல்காரனும், தோட்டக்காரன் ஸாஹூவும் என் கீதாஞ்சலியை ஓய்வு நேரத்தில் எழுத்துக்கூட்டிப் படித்து ரஸித்து, ஆனந்திப்பதைக் கண்டு நான் எவ்வளவு பெருமை அடைவேன் தெரியுமா?'' என்கிறார் ரவீந்திரர்.

அஞ்சா நெஞ்சரான கவிஞர், திடமனதைப்பற்றிக்கூறும்போது ''நம்பிக்கை என்னும் விருக்ஷம் வளர்வதன் பொருட்டு நீ திடமாக இரு; இல்லாவிடில் உன் ஆசைகள் துயில் விழித்தவன் கண்ட கனவுபோல் போய்விடும்-மனமே நீ தளராதே!'' என்கிறார்.

வங்கக்கவி தாகூர் இலக்கியம் பற்றி தன் எண்ணத்தை ரத்ன சுருக்கமாக வெளியிடுகிறார்.

''மகாமேதாவிகளிடத்தில் ஓர் அறிகுறியைக் காண்கிறோம். யாருக்கும் இல்லாதபடி இரவல் வாங்கும் சக்தி அபாரமாக அவர்களிடத்தில் இருப்பதைக் காண்கிறோம். கலை உலகம், அளவில்லாதபடி அவர்களுக்குக் கடன் கொடுக்கத் தயாராயிருக்கும்.

''ஷேக்ஸ்பியர் சம்பந்தமாக ஆராய்ச்சியாளர்கள் 'ஷேக்ஸ்பியர் கடனாளிதானே!' என்று குறைகூறமாட்டார்கள். தமக்குச் சொந்தமான ஆங்கிலக் கலைச் செல்வத்துக்குப் புறம்பே போய் வெளிப்படையாக இரவல் வாங்கி இருக்கிறார் ஷேக்ஸ்பியர்'' என்றுதான் ஆராய்ச்சியாளர்கள் தயக்கமின்றி கூறுவார்கள்.

''பேரண்டத்திலுள்ள எல்லா விஷயங்களையும் அறிந்து அனுபவிக்கத் தக்கது மனிதப் பண்பு. உயிர்த் தத்துவத்தோடு விழிப்பாய் இருக்கும்போது எந்தத் துறையிலும் இறங்கத் தனக்குப் பாத்தியத்தை உண்டு என்று வாதாடுகிறது அந்தப் பண்பு'' ★

ஆதாரம்: 'ஸம்ஸாரிரவீந்திரர்,' 'ரவீந்திரரின் திடநெஞ்சம்', 'கலையும் இரவலும்' ஆகிய 'கலைமகள்' கட்டுரைகள்.



# காகம்

○ ஸி. ராஜப்பா ○

பார்த்து ரஸிக்க அதனிடம் எத்தகைய அழகும் இல்லை!

கேட்டு ஆனந்திக்க எவ்விதக் குரலினிமையையும் அது பெற்றிருக்கவில்லை!

கண்ணுக்கழகற்ற கருமை நிறம்; காதிற்கினிமையில்லாமல் கரையும் குரல் பெற்ற இப்பறவைக்கு, இயற்கையிலேயே 'கா கா' என்று குரல் எழுப்பும் சக்தி இருந்து வருவதால் 'காகம்' என்ற பெயர் நிலைத்து விட்டது போலும்!

வடமொழியில் 'சகுந்தம்' என்றால் பறவை என்று பொருள். தமிழில் அதே அர்த்தத்தைக்கொண்ட 'புள்' என்னும் சொல் பழைய தமிழ் நூல்களில் நன்கு கையாளப்பட்டிருக்கிறது.

புள்ளினத்தில் அழகற்ற பறவைகள் பலவற்றுள் காகமும் ஒன்று. ஜோடி சிட்டுக் குருவிகள் 'விர் விர்' ரென்று தலைக்கு மேல் பறந்தபடி 'கிரீச் கிரீச்'சென்று இடைவிடாமல் கத்துவதைக் கூட நாம் ஓய்வு நேரங்களில் கூர்ந்து கவனிக்கிறோம். ஆனால், காகத்தினிடம் மட்டும் எப்போதும் நமக்கு ஒரு அலட்சிய மனோபாவம்தான்?

வெளி அழகு ஒன்றை மட்டுமே ரஸித்து, ஆனந்திக்கப் பழகிவிட்ட நாம், காக்கையிடம் எந்தவித அழகுமில்லாததால், அதை அருவருப்புடனேயே பார்க்கிறோம்.

## கவியும் காகமும்

புதுயுக கவி பாரதி, காகத்தைக் கண்டார். நம்மைப் போல் அவர் வெளி அழகைக் கண்டு மயங்குபவரல்ல. காகத்தின் கருமை நிறம் நம் கண்களைக் கவரவில்லை. ஆனால் கவித்வம் நிறைந்த பாரதியின் கண்களுக்கு, அற்பப் பறவையான காகத்தின் உடல் அழகு, கார்மேக வண்ணனான கண்ணனின் மேனி நிறத்தை நினைவுபடுத்திவிடவே, அப்போதே ஓர் கவிதையை உருவாக்கினார் கவிஞர்.

"காக்கைச் சிறகினிலே—
நந்தலாலா
நின் கரிய நிறம் தோன்றுதடா
—நந்தலாலா"

ஒரு பொருளையோ, ஜீவனையோ கண்டு அதன் அழகை ரஸித்து ஆனந்திக்கவும் மனிதனுக்கு ஒரு விசேஷத் தன்மை வேண்டும்.

கவிஞரின் சிந்தையில் காகத்தின் கருமை நிறம் கண்ணனை நினைவுபடுத்தி விட்டது. நாமும் காகத்தைப் பற்றி ஓரளவு சிந்திக்க முற்படுவோம்.

## குண விசேஷங்கள்

'வைகறைத் துயில் எழு' என்று பள்ளிப் பிராயத்திலிருந்தே படித்து வரும் மனிதன், அதை வாழ்வில் கடைப் பிடிப்பது துர்லபம். ஆனால், காகம் எந்தப் பள்ளியிலும் 'வைகறைத் துயில் எழு'

உள்ளமும் உருவமும் மனித இனத்தில் மட்டும் மாறுபட்டிருக்கவில்லை – புள்ளினத்திலும் அத்தகைய மாறுதலைக் காணலாம். அதற்குச் சிறந்த உதாரணப் பறவையாக காகம் இருந்து வருகிறது.

என்ற நீதியைப் படிக்கவில்லை. பொழுது புலரும் நேரம் நெருங்கி விட்டால், விடிவெள்ளி தோன்றி விட்டால், துயில் நீங்கி எழுகிறது காகம். தான் விழிப்படைந்ததோடு திருப்தி கொள்ளாத இப்பறவை, உலகைவிழிப்புறச் செய்ய வேண்டி, இடைவிடாது கரைந்து பொழுது புலரவிருப்பதைத் தெரிவிக்கிறது. (சேவல் இதன் காரணமாகத் தன்னைப் பற்றிக் கூறவில்லையே என்று வருந்த வேண்டாம்! கட்டுரை காகத்தைப் பற்றியதல்லவா?)

மனிதன் காகத்தினிடமிருந்து கற்றுக் கொள்ளும் முதல் பாடம் ‘வைகறைத் துயில் எழுதல்’ என்று கூறுவதை மறுக்க முடியுமா?

‘பங்கித் தின்றால் பசி தீரும்’என்ற முதுமொழியைப் பறவையினத்தில் காகம் ஒன்றினிடமே நாம் காண முடியும். அலைந்து திரிந்து, ஏதோ ஒரு உணவைக் கண்ட காகம், அதைத் தனித்திருந்து தானே உண்ண ஒரு போதும் விரும்பாது! ‘கா கா’ என்று கரைந்து தன்னைச் சுற்றி நான்கு காகங்களுடன் அமர்ந்து கொண்டே உணவை உட்கொள்ளும் பெருந்தன்மையைக் கண்டு நாம் அதிசயிக்கத் தான் வேண்டும்.

மனிதனிடம் மட்டும் இந்த குண விசேஷம் மருந்திற்காவது இருந்தால், உலகில் பஞ்சமும் பட்டினியும் நீடித்திருக்க வழியேது! ‘ரேஷன்’முறையை மனிதன் காகத்தினிடமிருந்துதான் ‘காப்பி’யடித்திருக்க வேண்டும் என்றுகூட நினைக்கத் தோன்றுகிறது.

மூன்றாவதாகக் காகத்தைப் பற்றிய அதிசய குணம் ‘பகுத்தறிவை புள்ளறிவு மிஞ்சி விட்டதே!’ என்று பாராட்டும்படி அமைந்திருக்கிறது.

மனித நெஞ்சில் துவேஷம் குடி கொண்டு விட்டால், துவேஷம் பாராட்ட முற்பட்ட இருவரும் ஒருவருக்கொருவர் சற்றும் இரக்கமின்றி நடந்து கொள்வது சகஜம். ஒருவர் இறப்பிற்குள்ளாகி விட்டால்கூட மற்றவர் அதைக்குறித்து அனுதாபம் தெரிவிக்காத அளவிற்கு துவேஷம் அவர் மனதைக் கல்லாக்கி விடுகிறது. ஆனால், காகத்தைப் பாருங்கள்!

ஒரு காகம் இறந்து விட்டது—இறக்கும் தறுவாயில் இருக்கிறது—என்பதைக் கண்ட மற்றொரு காகம், ஓயாமல் ‘கா கா’ என்று அனுதாபம் மேலிடக் கரைந்து, சில நிமிஷங்களில் ஒரு காக்கைப் படையை அங்கு திரட்டி விடும். கரும் போர்வை போர்த்தினாற் போல் காக்கை கும்பல், அந்த மரணாவஸ்தையிலுள்ள காகத்தைச் சூழ்ந்து கொண்டு கதறும் காட்சி, நம்மை திகைப்பிலாழ்த்தி விடுகிறது.

தன் இனத்தைச் சேர்ந்த ஒன்றின் பிரிவிற்காக கூவி வருந்தும் இந்த ஐந்தறிவு ஜீவன்களின் அதிசய இன ஒற்றுமையைக் கண்டு, ஆறறிவுப் பிராணிகளான நாம் வெட்கித் தலைகுனிவதைத் தவிர, வேறு என்ன செய்ய முடியும்!

இன ஒற்றுமை உணர்ச்சிக்கு காகம் ஒரு எடுத்துக்காட்டு. வீட்டுக் கூரைகளில் பள்ளி மாணவர்கள் வகுப்பிலுட்காருவதைப் போல் வரிசையாக அவை உட்காருவதை நாம் பார்த்ததில்லையா?

இறந்த காக்கைக்கு அனுதாபம் தெரிவித்த பின், காகங்கள் நீரில் மூழ்கி குளித்த பின்பே உணவு உட்கொள்ளும்! புள்ளினத்திற்கு இத்தகைய குணவிசேஷமா?

## கதைகளில் காகம்

‘கிரீச் கிரீச்’ என்று கத்தும் சிட்டு

சோமசன்மாவின் பஞ்சதந்திரக் கதைகளில் காக்கையைப் பற்றிக் கூறப்பட்டிருப்பதை கவனிப்போம்.

‘மானும் காகமும்’என்ற சின்

னஞ்சிறு நீதிக்கதையில் நரியின் தந்திரத்திற்கு பலியாகி, உயிருக்கு ஆபத்தான நிலையிலிருக்கும் போது, காகம் விரைந்தோடி வந்து; மானை வலையிலிருந்து மீட்டுச் சென்றதை நாம் படித்திருக்கிறோம்.

தன் முட்டைகளைத் திருடித் தின்ற பாம்பைக் கொல்ல, முத்து மாலையைக் கொத்திக் கொண்டு வந்து பாம்புப் புற்றில் போட்டு, அதைத் தேட வந்த அரண்மனை சேவகர்களிடம், அங்கு பாம்பு இருப்பதைச் சொல்லாமற் சொல்லி பாம்பைக் கொல்லும் உபாயத்தைக் கையாண்டதல்லவா இந்தக் காகம்!

ஆனால், நரியிடம் மட்டும், முகஸ்துதிக்கு மயங்கி, ஏமாந்து போய் வடையைப் பறிகொடுத்ததை நினைத்தால், 'நரியைப்போல் முகஸ்துதி செய்து நம்மிடம் காரியம் சாதித்துக் கொள்ள வருபவர்களிடம், நாம் காகத்தைப் போல் ஏமாறக் கூடாது' என்ற நீதியைக் கற்றுக் கொள்கிறோம்.

காகத்தை ஏமாற்றி இப்போதும் காரியம் சாதித்துக்கொள்ளும் பறவை குயில்; இது முட்டையிடும்; ஆனால் அடைகாக்காது. ஆகவே முட்டைகளை சர்வ ஜாக்கிரதையாக காகத்தின் கூட்டில் சேர்ப்பித்து விட்டு, 'ஆயாளை நம்பி குழந்தைகளை ஒப்படைத்துவிட்டு கவலையற்றிருக்கும்' நாரி மணிகளைப் போல் இருந்துவிடும். காக்கைக்கு தன் கூட்டிலிருப்பது குயில் முட்டை என்ற உண்மை தெரியாததால் தன் முட்டைகளுடன் அவற்றையும் அடைகாத்து வரும். முட்டை வெடித்து குயில் குஞ்சு வெளிவந்த பின்பே, இந்த உண்மையை உணர்ந்து கொள்ளும். அழகற்ற தன் குஞ்சைக் காப்பதில் காக்கை மிகுந்த கண்ணும் கருத்துமாயிருக்கும்.

## சரித்திரத்தில் காகம்

சரித்திர ஆசிரியர்கள் சிலர் உண்மை சம்பவங்களுடன் தங்கள் கற்பனை சம்பவங்களையும் சேர்த்துக் கூறுவது இயற்கை. 'மிகைப்படுத்திக் கூறுதலை' அவர்கள் காகத்தின் விஷயத்திலும் கையாண்டுள்ளனர்.

கலிங்கப் போர் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது; எங்கு பார்த்தாலும் ரத்தவெள்ளம்; பிணக்குவியல்; காக்கையும் கழுகும் ஆவல் பொங்க, மனித உடலை ருசி பார்க்கும் போது, பேரரசன் அசோகன் மண்ணாசை வெறியனாய் நிற்கிறான். பிணங்களை ருசி பார்க்க பறக்கும் காக்கைக் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு காகத்தை, வீரன் ஒருவனின் வாள் தாக்கி விட்டது. உடனே காகம் துடி துடித்து விழவே, பல காகங்கள் அதனைச் சூழ்ந்து கொண்டு இரையுண்பதையும் மறந்து புலம்பினவாம்.



'காக்கைச் சிறகி'னிலே நந்தலாலா...'

இக் காட்சியைக் கண்ணுற்ற பேரரசன் அசோகன், ''தன் இனத்தைச் சேர்ந்த ஒன்றின் பிரிவுக்காக இவ்வாறு கதறித் துடிக்கும் புள்ளினத்தின் அறிவைவிட என் பகுத்தறிவு தாழ்வானதே! நான் எவ்வளவு உயிர்களை வதைத்து விட்டேன்!'' என்று வாய்விட்டுப்

புலம்பி, மன மாறுதல் கொண்டு, ஜீவனை ஹிம்ஸிப்பதில்லை என்ற கொள்கையைக் கடைப்பிடித்தானும். கலிங்கப் போரில் இத்தகைய மனமாறுதலை மாமன்னன் அசோகனுக்கு உண்டாக்கியது, அற்பப் பறவையான 'காகம்' என்பதை நாம் கற்பனை நிகழ்ச்சியாகவே எண்ணினாலும், ஓர் உண்மை நிகழ்ச்சியை விளக்க அற்புதமான இந்தக் கற்பனை நிகழ்ச்சி பொருத்தமாகக் கையாளப்பட்டிருப்பதைக் கண்டு பாராட்ட வேண்டும்.

இத்தாலிய சர்வாதிகாரி முஸோலினியை அவர் விரோதிகள் விஷமிட்டுக் கொல்ல நினைத்து, ஆகாரத்தில் விஷம் கலந்து விட்டனர். சந்தேகங் கொண்ட முஸோலினி, ஆகாரத்தை ஒரு காக்கைக்கு அளித்து பரிசோதித்தபோது, விஷம் காரணமாக காகம் இறந்து விட்டது. ஒரு காகம், முஸோலினியை ஆபத்திலிருந்து காப்பாற்றி, தன்னுயிரைத் தியாகம் செய்திருக்கிறது என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

## புள்ளறிவும் பகுத்தறிவும்

டோருதத் என்ற வங்கப் பெண்மணி சிறந்த கவிஞர். அவரது கவிதைகள் பெரும்பாலும் பறவை, மிருகம், தாவர வர்க்கங்கள் இவற்றைக் கருத்தாகக் கொண்டே அமைந்தவை. காகத்தைப்பற்றி அவர் ஒரு கவிதையில் வர்ணிக்கிறார்.

இன ஒற்றுமைக்கு...

பட்டமரத்தில் காகம்......

ஒரு காகம் பசி மிகுதியால் ருசியான உணவருந்தும் ஒரு மனிதனை நெருங்கியது; காகத்தைப்பார்த்துக் கொண்டே அந்த மனிதன் ஆகாரத்தைச் சுவைத்துக் கொண்டிருந்தானும்.

காகம் பொறுமையை இழந்து, "நீ உண்பதில் எனக்குக் கொஞ்சம் தரலாகாதா?" என்று பசிக் கொடுமை தங்காமல் கேட்டதாம்.

மனிதன் கடகடவென்று சிரித்துவிட்டு, "அட மூடக் காகமே! காலையில் எழுந்து, சுறு சுறுப்பாக உணவு தேடும் பழக்கத்தை உன்னிடமிருந்து நான் கற்றேன். ஆனால், உன் பசியைத் தீர்த்துக் கொள்ள உனக்கு வழி தெரியவில்லையே!" என்று ஏளனம் செய்தான்.

காகம் வருந்தியபடி உட்கார்ந்து கொண்டு, "பசி தீர்க்கும் வழியை நீதான் எனக்குக் கற்றுத் தாயேன்!" என்று கேட்டதாம்.

மனிதன் பெருமை தொனிக்கும் குரலில், "இதற்குத்தான் பகுத்தறிவு வேண்டும் என்பது! சாப்பிடுபவர் யாராயிருந்தாலும், அவர் கவனிக்காத சமயம் உணவைப் பறித்துக்கொண்டு பறந்துவிடு! உனக்குத்தான் பறப்பதற்கு உதவியாக இறக்கைகள் இருக்கின்றனவே!" என்றான்.

காகம் மறுவினாடி, அவன் இலையிலிருந்தே ஒரு பதார்த்தத்தைக் கொத்திக்கொண்டு வானில் கிளம்பி விட்டதாம்!

''காகத்தினிடமிருந்து மனிதன் கற்றுக்கொண்ட விஷயங்களின் சிறப்பென்ன? பகுத்தறிவின் துணை கொண்ட மனிதன் அதற்கு போதித்த பாடம் எவ்வளவு கீழ்த் தரமானது!''—என்பதை கற்பனைக் கவிதைமூலம் டோருதத் கூறினாலும், இதன் கருத்தை நினைத்தால் மெய்சிலிர்க்கிறதல்லவா?

காக்கையைச் சிறப்பித்துக் கூறின பாரதி, அதனிடமுள்ள இந்தத் திருட்டுச் செய்கையைக் காணச் சகியாமல்,

''எத்தித் திரியும் அந்தக் காக்கை
அதற்கிடம் கொடுக்கலாகாது
பாப்பா''

என்று எச்சரிக்கிறார்.

## நடுக்கடலில் திசையறிய...

பிரேமதூதன் காகம்

கப்பல்களில் காகங்களைக் கொண்டு திசை கண்டுகொள்ள வேண்டி, கப்பலின் மேல் தளத்தில் ஒரு கூட்டில் காகங்களைப் பிடித்து அடைத்து வைத்திருக்கிறார்கள். கப்பல் திசை தவறிப்போகும் போது, இக் கூட்டிலிருந்து காகங்களை ஒவ்வொன்றாகப் பறக்க விட்டால், அருகிலுள்ள நிலப்பகுதியை நோக்கியே இக் காகங்கள் பறக்க முற்படும்; அதை யுணர்ந்து அத் திசையில் கப்பலைச் செலுத்துவார்கள் மாலுமிகள்.

காக்கை எப்போதும் நேராகவே பறந்துசெல்லும். ஆகவே தான் பிதாகரஸ் என்ற கிரேக்க கணித சாஸ்திரி, 'காக்கை பறக்கும்கோடு ஒரு நேர்கோடு' என்ற தத்துவத்தை க்ஷேத்திர கணிதத்தில் கூறுகிறார்.

## இலக்கியத்தில்...

'நாரைவிடு தூது', 'கிள்ளைவிடு தூது' என்று தூது சென்ற பறவைகளைப் பற்றி நம் தமிழ் இலக்கியம் கூறுகிறதல்லவா? காகமும் தூது சென்றிருக்கிறதை கி. பி. 1513-ம் ஆண்டில் எழுதப்பட்ட 'காக-தூதன்' என்ற நூல் விளக்குகிறது.

ராஜாங்க குற்றத்திற்குள்ளான வாலிபன், தன் வழிமேல் விழியாக இருக்கும் காதலிக்கு சிறையிலிருந்த படியே காதற் கடிதங்கள் எழுதி, ஒரு காகத்தின் மூலம் அனுப்பியதை வர்ணிக்கும் நூல் இந்த 'காக-தூதன்'.

ஹிந்தி மொழி இலக்கியத்தில் காகத்தைப்பற்றிய கவிதையில் பிரிவாற்றாமையால் புலம்பும் ஒருவனின் காதலி, ஒரு காகத்தைப் பார்த்துக் கூறுகிறாள்: ''என் துணைவன் என்னைப்பிரிந்துசென்று வெகு நாட்களாகி விட்டன. அவர் என்னை மீண்டும் சந்திக்கு முன் என் உயிர் பிரிந்தாலும் பிரிந்துவிடும். அவ்வாறே நான் இறந்துவிட்டால் என் உடல் முழுவதையும் நீ கொத்தித்தின்றாலும் எனக்கு நிம்மதியே. ஆனால் என் இரு கண் விழிகளை மட்டும் நீ தின்று விடாதே! அவரது அழகிய உருவை அந்த விழிகள் பார்த்து ரஸிக்கட்டும்''—.

வழிமேல் விழியாக...

காக்கையின் பெயரைக் கொண்டே தமிழ் இலக்கியத்தில் ஒரு பெண் புலவரின் பெயர் வழங்கி வருகிறது. அகஸ்தியரின் பன்னிரு சீடர்களில் ஒருவரான 'காக்கை பாடினியார்' என்னும் புலவர்தான் அவர்.

வடமொழி இலக்கியத்தில் உள்ள 'மிருச்சகடிகை' என்னும் காவியத்தில், சாருதத்தன் கொலைக் குற்றவாளியாகக் கருதப்பட்டு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படுகிறான். அவன் போகும் பாதையில் ஒரு பட்டமரம்; அதன் மீது ஒரு காகம் அமர்ந்துகொண்டு சூரியனையும், சாருதத்தன் முகத்தையும் மாறி மாறிப் பார்த்துக் கரைகிறது.

* ''பட்டமரத்தில் காகம்
தங்கிப் பகலவனை ஒட்டி
எதிர் நோக்கியுற்றதே''

என்று அச்சகுனத்தை தீய சகுனமாகக் கருதி பயந்தபடியே செல்கிறான் சாருதத்தன். இதிலிருந்து காகம், பட்ட மரத்திலுட்கார்ந்து கொண்டு, காரியம் நிமித்தம் செல்பவர் முகத்தைப்பார்த்துக் கரையுமானால், அதை தீய சகுனமாகக் கொள்ளப்படுகிறது என்ற விவரம் தெரியவருகிறது. காகம் இடமிருந்து வலம் சென்றால் நல்ல சகுனம் என்று நம்பப்படுகிறது.

காகம் கரைந்தால், விருந்தாளி வருவார்கள் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு.

இரவு காலங்களில் காகம் கரைவது பஞ்சம், வெள்ளம், எதிரிகள் படையெடுப்பு, கொடிய நோய், அரசாங்கம் க்ஷீணித்தல் போன்றவற்றின் அறிகுறி எனக்கருதப்படுகிறது.

முகஸ்துதி மூலம் காரியத்தை சாதித்துக் கொள்ளும் முறையைச் சுருங்கச் சொல்லும் வார்த்தை 'காக்கை பிடித்தல்' என்பதாகும்.

திபேத்திலுள்ள லாமா என்னும் ஜாதியருக்கு காகமே தெய்வம். அவர்கள் தங்கள் கட்டை விரலில் திருமண காலத்தில் காக்கை போன்ற உருவத்தில் பச்சை குத்திக் கொள்வார்கள்.

காகம் தலையை எப்போதும் ஒரு புறம் சாய்த்தே பார்த்துவருவதற்குக் காரணம், அதன் கண் விழிகளில் ஒன்று மட்டுமே கண் குவளையில் சுற்றிச் சுழலும்படி அமைந்திருப்பதுதான்.

'ஆகாயத்தோட்டி' என்றழைக்கப்படும் காகத்தை சற்று இழிவாக 'முது காட்டில் காக்கை உகக்கும் பிணம்' என்று ஏனோ கூறிவிட்டாள் ஔவை.

## புராணத்தில் காகம்

இனி காகத்தைப் பற்றி புராண ரீதியாகப் பார்ப்போம்.

காக்கை சனி பகவானின் வாகனம் என்பதை நாம் நம்பி வருகிறோம். சனி, மற்ற கிரகங்களை விட துன்பம் தரக்கூடியதென நம்பிவருவதால், அதன் வாகனமான காகம், நம் மேல் படும்படி பறந்தாலோ, எச்சமிட்டு விட்டாலோ அதை ஒரு துர்ச்சகுனமாக எண்ணி கவலைப்படுகிறோம்.

இறந்தவர்களை நினைத்து நாம் கொண்டாடிவரும் நாட்களில், உணவை முதலில் காகத்திற்குப் படைக்கிறோம்.

கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் மத்திய இந்தியாவிலுள்ள பிர்ஹூத் ஸ்தூபியில் காக்கையின் உருவம் செதுக்கப்பட்டிருப்பதிலிருந்து சிற்பத்திலும் காக்கை சிறப்புற்றிருக்கிறது என்பதையறியலாம்.

கிரீஸ் தேசத்தில் காகத்தின் ஹிருதயத்தைக்கொண்டு தயாரிக்கும் லேகியம் 'காயகல்பம்' என்று நம்பப்பட்டு வந்தாக கிரேக்க சரித்திரம் கூறுகிறது.

'காகத்தைப் பற்றிக்கட்டுரை எழுதும் அளவிற்கு விஷயமிருக்கிறதா!' என்று நீங்கள் அலட்சியமாகக் கேட்கலாம். கட்டுரை உங்களுக்குத் திருப்தியை அளிக்காவிடினும், 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு' என்ற கட்சியைச் சேர்ந்தவன் நான். ★

---

* இக்குறிப்பு தே. வீரராகவன் எழுதிய 'சகுனம்' என்னும் கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டது.



# சதுரங்கம்

எஸ். நடராஜன், பி.ஏ.

'சதுரங்க ஆட்டம் இந்தியாவில் பிறந்ததே' என்றும் 'சரித்திர காலத்திற்கு முற்பட்டதே' என்றும் பிரபல சதுரங்க நிபுணர் ஸ்ரீ டி. ஏ. கிருஷ்ணமாச்சாரியார் கூறியிருக்கிறார். பௌத்தமதம் ஓங்கியிருந்த காலத்தில் சதுரங்க ஆட்டம் க்ஷீணதசை அடைய ஆரம்பித்தது. பிரிட்டிஷ் சர்க்கார் இந்த ஆட்டத்தை ஆடும்படி உத்ஸாகப்படுத்தவுமில்லை; ஆட வேண்டாம் என்று தடை விதிக்கவுமில்லை. சென்னையில் மும்முரமாக சதுரங்க ஆட்டம் ஆரம்பமானது சுமார் 25 வருஷங்களுக்கு முன்புதான்.

சதுரங்க (செஸ்) ஆட்டத்திற்கு ஒரு காலத்தில் 'செக்கர்' என்ற பெயர் இருந்து வந்தது. கீழ்நாட்டில் பிறந்து, மேல் நாட்டில் பரவி, இப்போது உலகமெங்கும் ஆடப்படுகிறது இந்தச் சதுரங்கம்.

இந்த ஆட்டத்தை முதன் முதலில் கண்டுபிடித்தது யார் என்பது சரியாகத் தெரியவில்லை.

மூன்றும் நெப்போலியனை நினைவுபடுத்தும் 'செஸ்' காய்கள்

இந்தியர்கள், கிரேக்கர்கள், ரோமர்கள், பாபிலோனியர்கள், எகிப்தியர்கள், பாரசீகர்கள் இம்மாதிரி பல தேசத்தவர்கள் இதைக் கண்டு பிடித்ததாகக் கூறப்படுகிறது.

நமது புராதன காலத்தில் ஆடப்பட்டு வந்த சதுரங்கம் தான் 'செஸ்' என்று சொல்லப்படுகிறது. இப்போது ஆடப்படும் சதுரங்கமும், நம்மவர்கள் ஆடும் பதினைந்தாம் புள்ளியும் ஒரே மாதிரி இருக்கின்றன.

ஸாலமன் என்ற மன்னர் தான் இந்த ஆட்டத்தை முதன் முதலில் கண்டுபிடித்தவர்என்று சொல்கிறார்கள். ராவணன் மனைவி மண்டோதரிதான் இதை 5000 வருஷங்களுக்கு முன் கண்டுபிடித்திருக்க வேண்டும் என்று கர்ணபரம்பரை கதைகள் கூறுகின்றன.

சீனாவில் சதுரங்கம் போன்றதொரு ஆட்டம் கி. மு. 372-ம் ஆண்டிலேயே இருந்ததாகத் தெரியவருகிறது. அக்காலத்தில் இதற்கு 'சோங்கி' என்ற பெயர் இருந்ததாம். ஹான்சுங் என்பவர்தான் இதைக் கண்டுபிடித்தார் என்கிறார்கள்.

சிலர் பாரசீகர்கள்தான் இதைக் கண்டு பிடித்தவர்கள் என்றும் அங்கிருந்துதான் இந்தியாவிற்குவந்ததென்றும், பின்னர் இந்தியா



பிரஷ்ய ராணியை நினைவுறுத்தும் 'செஸ்' காய்கள் - 200 ஆண்டுகளுக்கு முந்தியவை.

விலிருந்து பல இடங்களுக்குப் பரவி இருக்க வேண்டும் என்றும் சில ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். ஆனால் இந்தியர்கள்தான் இந்த ஆட்டத்தைக் கண்டுபிடித்திருக்க வேண்டும் என்பதற்கான ருஜுக்கள் திருப்தியளிக்கும் அளவுக்கு இருக்கின்றன.

'ஆஷியாடிக் ரிஸர்ச்சஸ்' என்கிற தலைப்பில் ஸர்வில்லியம் ஜோன்ஸ் என்பவர் எழுதியுள்ள கட்டுரையில் ஹிந்துஸ்தானத்தில் புராதன காலம் தொட்டே இந்த ஆட்டம் ஆடப்பட்டு வருகிறது என்றும், போர்முனையில் ராணுவத்தை நகர்த்துவதற்கும் இந்த விளையாட்டுக்கும் ஒற்றுமையுண்டு என்றும் இதனால்தான் சதுரங்கக் காய்கள் யானை, குதிரை, ரதம், காலாட்படை என்று கூறப்படுகின்றன என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

பாரசீகர்கள் ஹிந்துக்களிடமிருந்தே இதைக் கற்றார்கள் என்று வாண்டிலண்டே என்பவர் 1774-ல் குறிப்பிட்டிருக்கிறார்.

மிகமிகப் புராதனமான ஹிந்து தஸ்தாவேஜிகளில் சதுரங்கம்பற்றி பிரஸ்தாபம் வருவதாக சம்ஸ்கிருத பண்டிதர்கள் கூறுகின்றனர்.

கி. பி. 1780-ல் சென்னையில் செய்யப்பட்ட சதுரங்கக் காய்கள்

மூன்ருவது நூற்ருண்டு காலத்திலேயே புத்த மதம் இந்தியாவில் தழைத்திருந்தபோது இது ஆடப்பட்டு வந்திருப்பதாக அறியப்படுகிறது. வேறு எந்த நாட்டிலும் இதைப்பற்றி தெரியாமல் இருந்த போது சதுரங்கம் இந்தியாவில் ஆடப்பட்டுள்ளது. அராபிய எழுத்தாளர் ஒருவர் கி.பி.950-ல் சதுரங்கம் அப்போது இரண்டு தலைமுறைகளுக்கு முந்தியே இந்தியாவில் ஆடப்பட்டு வந்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிருர்.



பாபர் காலத்தில்

சதுரங்கத்திற்கு ''ராயல் கேம்'' என்றும் பெயர் உண்டு. ஸாக்ஸனி மன்னர்கள் இந்த விளையாட்டின் விளைவாக போரில்இறங்கி விடுவதுமுண்டாம். அதனுல்தான் ரஷ்யாவிலும் ஜெர்மனியிலும் இதற்கு யுத்த விளையாட்டு என்ற பெயரே இருந்து வந்தது. இந்த விளையாட்டில் தந்திரம், ராஜதந்திரம், ஏமாற்றுதல் எல்லாம் அடங்கியிருக்கிறது.



ட்யூடர் காலத்தில்

முதல் சர்வதேச சதுரங்கப் போட்டி ஸ்பெயினை ஆண்ட இரண்டாவது பிலிப் முன்னிலையில் நடைபெற்றது.

ஐரோப்பாவில் சதுரங்கம் எப்போது நுழைந்தது என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியாவிட்டாலும் 11வது நூற்ருண்டில் வந்திருக்க வேண்டும் என்று நிச்சயமாகக் கூறலாம். அரபுகளிடமிருந்து ஸ்பானிஷ்காரர்கள் இதை அறிந்திருக்கலாம். 'குரூஸேட்ஸ்' என்கிற மதப்போர் நடந்தபோது இந்த ஆட்டம் ஐரோப்பாவில் தலை காட்டியதாக சிலர் எழுதியுள்ளனர். முதலாவது வில்லியம், மூன்ருவது ஹென்ரி, ஜான், முதலாவது எட்வர்ட் ஆகிய மன்னர்கள் சதுரங்கம் ஆடினதாகத் தெரிகிறது.

டெல்லி தர்பார்

மகாபாரதத்தில் யுதிஷ்டிரர், துரியோதனன் இந்த சதுரங்கத்தை ஆடியிருக்கிருர்கள். நளச்சக்கரவர்த்தியும் இந்த ஆட்டத்தை ஆடியிருக்கிருர். இந்த ஆட்டம் பொழுதுபோக்குக்காக மட்டுமின்றி தக்கபடி மூளையை உபயோகித்து பலன்பெறவும் வசதியளிக்கிறது. இதன் தாயகம் இந்தியாவே.

சதுரங்கம் விளையாடும் இரண்டு கட்சியினரில் ஒவ்வொருவருக்கும் 8 சிப்பாய்கள் உண்டு. ஆட்டத்தின் ஆரம்பத்தில் இரண்டாவது வரிசையில் ராஜாவும் மந்திரியும் உள்பட எட்டு அதிகாரிகள் இருப்பார்கள்.

1720-ல் செஸ் காய்

சதுரங்க ஆட்டம் அறிவுத் திறனுக்கு ஒரு பரிசோதனை. எதிர்கட்சி ராஜாவை சரண் அடையச் செய்வதோ அல்லது கைது செய்வதோதான் இதன் நோக்கம்.

மேனுடுகளில் பெண்களின் அந்தஸ்து உயர்ந்ததால் சதுரங்கத்திலும் ராணியைப் புகுத்தி விட்டனர். இந்திய சதுரங்கத்தில் இம்முறை கிடையாது.

சதுரங்க ஆட்டம் குறித்து ஏராளமான புத்தகங்கள் வெளிவந்துள்ளன; வந்து கொண்டுமிருக்கின்றன. இருந்தும், இந்த விளையாட்டு இன்னும் புதுமையாகவே இருந்து வருகிறது. ★

# காவேரியின் பிறப்பிடம்

## கே. எஸ். பாலசுப்பிரமணியம்

பிறப்பிடம் :

குடகு மலை நாட்டில் மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதி யான 'பிரம்மகிரி' என்ற இடம் இருக்கிறது. இதன் உயரம் கடல் மட்டத்திலிருந்து 4,686 அடி. இதை 'பிரம்ம கபாலம்' என்றும் சொல்லுவார்கள். இந்த பிரம்ம கிரியில் சப்த ரிஷிகள் தவம் செய்த தாக சொல்லப்படுகிறது. அவர்கள் ஞாபகார்த்தமாக சப்த நீர் ஊற்றுக் கள் இன்றும் இருக்கின்றன. இங்கு தான் பரமசிவன் சடைமுடியி லிருந்து வெளிவரும் கங்கை நதி யைப் போல், காவேரி அன்னை உற் பத்தியாகிருள். உற்பத்தியாகும் அந்த இடத்தை 'தலைக் காவேரி' என்றும் 'உகமஸ்தலம்' என்றும் அழைக்கிருர்கள். காவேரிக்கு மறுபெயர்கள் 'தக்ஷிண கங்கா,' 'பொன்னி' என்பன.

காவேரிநதி உற்பத்தியாகும் இந்த இடத்திலிருந்து புறப்பட்டு தன் காதலனுகிய கடலரசனைத் தேடி, காடு மலை (அணை)களெல்லாம் கடந்து, சுமார் 450 மைலுக்கு மேல் தவழ்ந்து கடலை அடை கிருள்.

காவேரி நதி உற்பத்தியாகும் இடம் பார்க்க ஆச்சரியமாக இருக் கும். இந்த இடம் $21\frac{1}{4}$ சதுர அடி யுள்ள சிறிய குளத்தைப்போல் காணப்படுகிறது. (காவேரி அன்னை ஜலரூபமாக காட்சி தரு கிருள்). அதை அடுத்து முப்பதடி சதுரத்தில் ஒரு குளம்; அதில் 3 அடி ஆழத்துக்கு மட்டும் ஜலத்தை வைத்துக் கொண்டு மீதியை ஒரு சிறிய மடை வழியாக வெளியே விட்டிருக்கிருர்கள். பெரிய குளம் 'ஸ்நான கட்டம்' என்று அழைக்கப்படுகிறது. இக்குளங் களுக்கு மேலே இரு கோவில்கள் கட்டியிருக்கிருர்கள். ஒன்று அகஸ் தியர் கோவில். மற்ருென்று வினய கர் கோவில். இங்கு தினந்தோ றும் பூஜை நடைபெறுகிறது. இந்த இடத்தைச் சுற்றி மலைகள் காவலாகநிற்கின்றன. இங்கு தினந் தோறும் யாத்ரீகர்களும், உல்லாசப் பிரயாணிகளும் வந்து போகிருர் கள்.

சங்கரமண :

காவேரி உற்பத்தியில் வருஷந் தோறும் ஐப்பசி மாதம் முதல் தேதி "காவேரி சங்கரமண" என்ருெரு திருவிழா கொண்டாடுகிருர்கள் இங்குள்ள குடகு மக்கள். அன்று பல இடங்களிலிருந்தும் யாத்ரீ கர்கள் வந்து கூடுகிருர்கள். அன்று காவேரியைக்காண வரும் யாத்ரீ கர்கள், காதோலை, கருகமணி, மஞ்சள், குங்குமம் முதலிய சீர் களெல்லாம் செய்யப்பட்டு புது மணப்பெண்ணை வழியனுப்புவது போல் கடலரசனிடம் அனுப்புகிருர் கள். இந்த புனிததினத்தில் இங்கு வந்து ஸ்நானம் செய்வதை மிகவும் புண்ணியமாகக் கருதுகிருர்கள். இந்த தினத்தை தான் "துலா ஸ்நான தினம்" என்று சொல் கிருேம் நாம். இங்கு அது "காவேரி சங்கரமண" என்று சொல்லப்படுகிறது. அன்று காவேரி நதியுடன் கங்கை கலக் கிருள் என்பது அநாதி காலந் தொட்டு வந்த ஐதிகம்.

வழி எப்படி ?

காவேரி நதி உற்பத்தியாகும் தலைக்காவேரிக்குப் போக பல வழி கள் இருக்கின்றன. மைசூர் வழி யாக குடகு நாட்டின் தலை நகர மான மர்க்காரா சென்று, அங்கி ருந்து 23 மைல் தூரத்தில் உள்ள பாகமண்டலம் என்னும் இடம் செல்லவேண்டும். மங்களூர் வழி யாகவும் இங்கு வரலாம். இது வரை கார், பஸ் முதலியன செல் லும். இனி நான்கு மைல் கால் நடையாக தலைக்காவேரிக்குசெல்ல வேண்டும். போகும் வழி காடு, மலைகள் சூழ்ந்தபகுதி. பாகமண் டலம் ஒரு புண்ணிய ஸ்தலம். இங்கு தான் முதல் முதலாக காவேரி தன் பிறந்த இடத்திலிருந்து புறப்பட்டு வந்து 'கனகக்காவேரி' என்னும் ஒரு நதியுடன் கலந்து காவேரி நதியாக மாறுகிருள். ★



# தலைக்காவேரி

மேற்கு மலைத்தொடரில் இருக்கும் 'பிரம்மகிரி' சிகரத்தின் உயரம் 4,686 அடி. இந்த இடத்தில்தான் ஜீவநதியான காவேரி உற்பத்தியாகிறது. காவேரியின் உற்பத்தி ஸ்தானத்தை நாம் 'தலைக்காவேரி' என்றழைக்கிறோம்.

தலைக்காவேரி அமைந்துள்ள இடத்திற்குச் செல்லும் பாதைகள் காடுகளும் மலைகளும் சூழ்ந்த பகுதி. எனினும் இதைக் காண தினமும் ஏராளமான யாத்ரீகர்கள் சிரமத்தைப் பாராமல் சென்று வருகின்றனர். இங்குள்ள விநாயகர், அகஸ்தியர் கோவில்களில் நடைபெறும் பூஜை சிறப்பானது.

மைசூர் வழியாக குடகு நாட்டின் தலைநகரான மர்க்காரா சென்று, அங்கிருந்து 23 மைல் தூரம் பஸ்ஸில் பிரயாணம் செய்தால் பாகமண்டலம் என்னும் புனித ஸ்தலத்தை அடையலாம். பாகமண்டலத்திலிருந்து மலைப் பாதை வழியே நான்கு மைல் தூரம் கால்நடையாகச் சென்றால் காவேரியின் பிறப்பிடத்தை அடைவோம்.

போட்டோக்கள் : கே. எஸ். பி. மணியம்



மலைகள் சூழ்ந்து காணப்படும் 'தலைக்காவேரி' என்னுமிடத்தில் தான் காவேரி நதி உற்பத்தியாகிறது. உற்பத்தி ஸ்தலத்தின் மேலுள்ள விநாயகர், அகஸ்தியர் கோவில்கள்.





காவேரி நதியின் உற்பத்தி ஸ்தலத்தின் முன் தோற்றம்.

உற்பத்தி ஸ்தலத்திலுள்ள ஆலயங்களில் பூஜை நடைபெறுகிறது.



காவேரி முதன் முதலாக 'கனகக் காவேரி' யுடன் கலக்கும் திரிவேணி சங்கமம்.

பாகமண்டலேஸ்வரி கோவிலின் முன் வாசல்.

குடகு நாட்டில் பாய்ந்தோடும் காவேரியின் தோற்றம்.

மைசூர் பிருந்தாவனத்தில் காவேரி ஜலத்தினுல் உண்டாக்கிய நீரூற்றுகள்.



குடகு ராஜ்யத்தை ஆண்ட மன்னர்களின் சமாதிகள் உள்ள 'மர்க்காரா'

குடகு மன்னரின் பழங்கால அரண்மனை—தற்போது அரசாங்க அலுவலகமாக இருக்கிறது.

மர்க்காராவிலுள்ள ஓங்காரேஸ்வரர் கோவில் — 1820-ல் லிங்கராஜன் இதைக் கட்டினன்.

குடகர்கள் ஹுத்ரி பண்டிகையன்று மரத்தைச்சுற்றி வலம் வந்து கொண்டாடும் காட்சி.



தலைக்காவேரிக்குச் செல்லும் மலையும் காடுகளும் சூழ்ந்த மலைப்பாதை.

குடகர்கள் விசேஷ உடையில் ஹூத்ரி பண்டிகை கொண்டாடுகிறார்கள்.

# மூவேந்தரின் யானைகள்

கி. இலக்குமிகாந்தன்

யானையைப் பற்றிஒரு சிறு கட்டுரையில் விளக்குவது சிரிப்புக்கு இடமான விஷயமாகும். ஆகவே தமிழ் இலக்கியத்தில் யானையின் சிறப்பைப்பற்றி புறத்திரட்டைச் சேர்ந்த முத்தொள்ளாயிரத்தில் வர்ணிக்கப் பட்டுள்ளதை கவனிப்போம்.

முத்தொள்ளாயிரம் மூன்று பகுப்பான தொள்ளாயிரம் பாட்டுக்களைக் கொண்ட நூல் ஆகும். மூன்று பகுதிகளிலும் முறையே சேரன், சோழன், பாண்டியன் இவர்களது யானைகளின் சிறப்பு விவரிக்கப்பட்டுள்ளது.

முதலாவதாக சேரனின் யானையைப் பற்றிய வர்ணனை இதுதான்:

''வீறுசால் மன்னர் விரிதாம
வெண்குடையைப்
பாற எறித்தபரிசயத்தால்–தேருது
செங்கண் மாக்கோதை சின
வெங்களியானை
திங்கள் மேல் நீட்டுந் தன் கை''

அதாவது சேரமன்னனது யானை போருக்குச் சென்றபோதெல்லாம் எதிரி மன்னர்களது வெண் கொற்றக்குடைகளைப் பறித்து, சிதறும்படி எறியுமாம். வானத்திலுள்ள பூர்ண வெண்மதியைக் கண்டது யானை. உடனே அதற்கு ''வெண் கொற்றக் குடை'' நினைவிற்கு வந்தது. மன்னர்களின் வெண் கொற்றக்குடைகளைப் பற்றிச் சின்னா பின்னப் படுத்திய வழக்கத்தால், சந்திரனை, வெண்கொற்றக் குடையோ என்று எண்ணி, ஆத்திரத்தில் பற்றி இழுக்க தன்னுடைய துதிக்கையை நீட்டியதாம்!

சந்திரனை, மன்னவனின் குடையோ என்று நினைத்து சேரனது யானை மயங்கியதை, மேலேயுள்ள செய்யுள் நமக்கு விவரிக்கிறது.

அடுத்தபடியாக நாம் சோழனது யானையிடம் செல்வோம்.

''அயிற்கதவம் பாய்ந்துழக்கி
யாற்றல்சால் மன்னர்
எயிற்கதவங் கோத்தெடுத்த
கோட்டாற் – பனிக்கடலுள்
பாய்ந்தோய்ந்த நாவாய்
போற்றோன்றுமே யெங்கோமான்
காய்சினவேற் கிள்ளி களிறு''

போர் முரசம் முழங்க, யானைப் படையை அழைத்துச் செல்வான் சோழ மன்னன். சோழனது யானை பகைவனது கோட்டை மதிலைத் தாக்கி, தவிடு பொடியாக்க விரும்பி பூமி அதிர ஓடுமாம். அச்சமயம் எதிரி வீரர்கள் பார்த்துக் கொண்டா நிற்பார்கள்? சோழ



★ முத்தொள்ளாயிரத்தில் மூன்று வேந்தரின் யானைகளைப் பற்றி நூலாசிரியர் எவ்வளவு அழகாக வர்ணித்திருக்கிறார் என்பதை இச்சிறு கட்டுரையில் விவரிக்கிறார் கட்டுரையாசிரியர்.



வேந்தனது யானையைத் தங்கள் அம்புக்கு இரையாக்க விரும்பி, அதன்மேல் அம்புமாரி பொழிவார்கள். ஆனால், சோழனது யானை அந்த அம்புகளை சற்றும் பொருட்படுத்தாது பாய்ந்து சென்று, அடைபட்ட கோட்டைக் கதவுகளை தன் வலிமை வாய்ந்த கொம்புகளினால் தாக்கித் தகர்க்குமாம். பின்பு எக்காளமிட்டுக் கொண்டு அது திரும்பி வரும் அழகைப் பார்க்கும் போது, கடல் நடுவே பாய் கட்டிய மரக்கலம் வருவது போன்று இருக்கும்.

மூன்றாவதாக பாண்டியனுடைய யானையைப் பற்றி கவனிப்போம்.

''மருப்பூசியாக மறங்கனல்
வேல் மன்னர்
திருத்தகுமார் போலையாகத்
—திருத்தக்க
வையக மெல்லாம் எமதென்
றெழுதுமே
மொய்ப்பாலை வேல் மாறன்
களிறு''

பாண்டிய மன்னன், யானைப் படையில் வல்லவன். அவனது யானை போருக்குக் கிளம்பி விட்டால், எதிரிகளைத் தாக்கும் எண்ணத்தில் சிறந்த ஒரு லட்சியவாதியாக விளங்குமாம். இதன் குறியெல்லாம் எதிரி வீரர்களின் மார்புகளின் மீதே இருக்கும். ஏனெனில், தனது கொம்பை எழுத்தாணியாகவும், எதிரி மன்னர்களின் மார்புகளை எழுத்து ஓலைகளாகவும் நினைத்துக் கொண்டு, அம்மார்புகளில், ''இந்த வையம் எல்லாம் எம் மன்னருடையது'' என்று எழுதுமாம். யானைக்குரிய எஜமான விசுவாசத்தை என்னவென்பது?

போருக்குச் சென்று திரும்பும் வீரர்கள் தன் குடும்பத்தாரிடம் போர் முனையில் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தை விவரித்து கூறுவது இயற்கை. அதே போல் மூவேந்தர்களது யானைகளிடமும் போர் முடிந்து திரும்புகையில் காணும் அதிசயத் தன்மைகளை முத்தொள்ளாயிரப் பாட்டுகளில் காணலாம்.

போரில் எதிரியின் மதில்களை யானைகள் தங்களது கொம்புகளாலும், நகங்களாலும் தாக்கியதால் அவை கூர்மை இழந்து விட்டதை, தங்கள் மனைவிகளான பெண் யானைகள் பார்த்து, தங்கள் அழகு குறைந்து விட்டதாக மதிப்பிட்டு விடுமோ என்று தங்களுக்குள் வருந்துமாம்.

சோழனது யானை போருக்குக் கிளம்பி விட்டதோ, அதைத் தொடர்ந்து கழுகுக் கூட்டம் ஆரவாரித்துக் கொண்டு செல்லும். நாயும், நரியும் பிணக்குவியல்களை ருசி பார்க்க விரும்பி நாவில் நீர் ஊற ஓடுமாம்.

இறுதிக் கட்டத்தில் யானையைப் பற்றி முத்தொள்ளாயிரத்தில் கூறியிருப்பது, கரையாத நெஞ்சையும்



கரையச் செய்யும் சக்தி வாய்ந்த செய்யுட்களாகும்.

''ஏனைய பெண்டிர் எரிமூழ்கக்
கண்டுதன்
தானையால் கண் புதைத்தான்
தார் வழுதி—யானையும்
புல்லார் பிடி புலம்பத் தன்கண்
புதைத்ததே
பல் யானை பட்ட களத்து''.

இந்தச் செய்யுள் யானையைக் கொன்ற போர்களில், பாண்டியனது நிலையை விவரிக்கிறது. போரில் தன் துணைவர்கள் அம்புக்கிரையானதால், பிரிவாற்ருமை தாங்காது தத்தம் துணைவர்க்கு மூட்டிய தீயில் குதித்து உடன் கட்டை ஏறினர் பெண்கள். இக்காட்சி மண்ணுசை கொண்டு எண்ணற்ற பெண்களை அபலைகளாக்கி, அவர்களது துணைவர்களை தம் அம்புக்கு இரையாக்கிய பாண்டியனின் நெஞ்சை நெகிழச் செய்தது. இந்த சஹகமன காட்சியைக் காணும்போது கண்களைக் கையால் பொத்திக்கொண்டான்.

அதே விநாடி அவனுடைய யானைப் படையை கவனிப்போம். எதிரி மன்னர்களின் யானைகளை எதிர்த்து நின்று, அவற்றைத் தாக்கிக் கொன்றதால் அவைகளின் மனைவிமார்களான பெண் யானைகள், தம் கணவரின் பிரிவாற்ருமை தாங்காமல் வீறிட்டுக் கதறுவதைக் கண்ட பாண்டியனது யானைகள் தம் மன்னரைப் போலவே, சோகம் தாங்காது தங்கள் துதிக்கையால் கண்களைப் பொத்திக்கொண்டு, நீர் வடித்தபடி பச்சாதாபப் பட்டனவாம்.

யானையின் சிறப்புத் தன்மையை இச் செய்யுள் எவ்வளவு இனிமையுடனும், கற்பனைச் செறிவுடனும் விளக்குகின்றது!

'யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன்', என்னும் பழமொழி தமிழ்ப் பொன்மொழியாக வழங்கி வருவதன் மூலகாரணம், முத்தொள்ளாயிரத்தில் மூவேந்தரின் யானைகளின் வர்ணனையாகத்தான் இருக்கவேண்டும். ★

## கோழி

சோழன் போர் முடிந்து யானைமீது திரும்பும்போது, வழியில் அவனை உபசரிக்கவேண்டி பல சிற்றரசர்கள் அவன் பிரயாணத்தை நிறுத்தினர். அவன் ஒவ்வொரு சிற்றரசனையும் திருப்தி செய்ய வேண்டி, ஆங்காங்கு தங்கிச் சென்ருன். அவ்வாறு செல்லுகையில் அவனது யானையின் பாதையிலிருந்த ஒரு கோழி, திடீரென்று பறந்து வந்து யானையின் நடையைத் தடைப்படுத்தவே, சோழன் ஆச்சர்யமுற்று கீழிறங்கினுன். ஒரு 'சிறு கோழி மாபெரும் யானையை அவ்விடத்தில் நிறுத்தியதால், ஆச்சர்யங்கொண்ட சோழவேந்தன் 'கோழி' என்ற பெயரில் ஒரு ஊரை அங்கு நிர்மாணித்தான்.

கோழியின் பெயரால் உண்டான ஊர்தான் உறையூர். சோழமன்னன் அதையே தன் தலைநகராகக் கொண்டு அரசாண்டு வந்தான். ஆகவே 'கோழி' ஒரு பறவையின் பெயர் மட்டுமல்ல; உறையூரின் பழம் பெயர் என்பதும் தெரியவருகிறது.

# கோடைகால பானங்கள்

'ஜனககுமாரி'

> வெயிலின் கடுமை தாங்காமல் உலர்ந்த நாவிற்கு ருசி மிக்க பானங்கள் இன்றியமையாதவை. அவைகளைத் தயாரிக்கும் முறைகளை இக் கட்டுரை விவரிக்கிறது.

"அப்பப்பா! என்ன வெய்யில்! என்ன தாகம்! என்ன தாபம்! நாக்கு உலர்ந்து போய் விட்டது. கோடையின் கொடுமை தாளவில்லை. ஏதாவது குளிர்ந்த பானம் பருகினால் தேவலை!'' என்று ஒவ்வொருவரும் கூறுவது சகஜமாகிவிட்டது. தாக சாந்திக்கு ஏற்றதும், தேகத்திற்கு நன்மை தரக்கூடியதும் பல நாட்கள் கெடாமலிருக்கக் கூடியதுமான 'சர்பத்' செய்து கையிருப்பில் வைத்துக் கொண்டு தேவையான பொழுது அதை குளிர்ந்த ஜலத்தில் கலந்து குஷியாக குடிக்கலாமே! 'கூல் டிரிங்க்' (குளிர்ந்த பானங்கள்) என்று கடைகளில் வாங்கிப் பருகுவதைவிட, வீட்டிலே தயாரித்து எல்லோரும் உல்லாசமாக சேர்ந்து பருகுவது மிகவும் நல்லது. இங்கே சில பானங்களைத் தயாரிப்பது பற்றி விவரமாகக் குறிப்பிட்டிருக்கிறேன். செய்வது மிகவும் சுலபமே!

## எலுமிச்சம் பழ சர்பத்

ஒரு வீசை அஸ்கா சர்க்கரையை ஈயம் பூசின பாத்திரத்தில் கொட்டி, கொஞ்சம் ஜலம் சேர்த்து பாகு வைக்கவும். சர்க்கரை கரைந்து கொதிவரும் பொழுது கொஞ்சம் பாலை அதில் தெளித்தால், சர்க்கரையிலிருந்த அழுக்கெல்லாம் நுரைத்துக் கொண்டு ஒரு பக்கமாக ஒதுங்கி விடும். அதை எடுத்து விடவும். குங்குமப்பூவை கொஞ்சம் எடுத்து பாலில் நனைத்து வைத்து, அதை கலுவத்தில் இழைத்து பிறகு பாகில் போடவும். நல்ல பழுத்த எலுமிச்சம் பழங்களை எடுத்து ரஸம் பிழிந்து ஒரு பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும். ஒரு வீசை சர்க்கரைக்கு ஒன்றரை ஆழாக்கு ரஸம் என்ற கணக்கு. விதைகளை மாத்திரம் ஒன்று விடாமல் எடுத்தெறிந்து விடவும். 'பல்ப்' என சொல்லப்படும், பழத்தின் சதைப்பற்றுள்ள பாகங்கள் ரசத்தில் கலந்திருக்கும். அவைகளை அப்புறப்படுத்த வேண்டாம். அவைஉடம்புக்கு மிகவும் நல்லது. சர்க்கரைப் பாகு கம்பி பதம் வந்ததும் (அதாவது துளி பாகை எடுத்து இரண்டு விரல்களினால் அமுக்கி விரல்களைப் பிரிக்கும் பொழுது பாகு விரல்களிடையே கம்பிபோல வரவேண்டும்) கீழே இறக்கி வைத்து உடனே தயாராக இருக்கும் எலுமிச்சம் பழரசம் (ஒன்றரை ஆழாக்கு அளவு) பாகில் கொட்டி கலக்க வேண்டும். பிறகு இது நன்றாக ஆறிய பிறகு ஒரு கண்ணாடி ஜாடியிலோ, சீசாவிலே போட்டு வைத்து காற்றுப் போகாமல் மூடி குளிர்ச்சியான இடத்தில் வைக்கவும். தேவையான போது ஒரு அவுன்சு பாகிற்கு ஒரு டம்ளர் தண்ணீர் வீதம் கலந்து உபயோகிக்கவும். பாகு சரியான கம்பி பதம் வந்திருந்தால் இந்த சர்பத் இரண்டு மாதம் வரை கெடாமலிருக்கும்.

## நன்னாரிவேர் சர்பத்

சுத்தமான நன்னாரி வேரை தண்ணீரில் அலசி அலம்பி உலர்த்திவிடவும். நன்றாக உலர்ந்த பிறகு அதை இடித்து தூள் செய்யவும். நயமாக பொடி செய்ய முடியாது சற்று சக்கை சக்கையாகத் தானிருக்கும். இந்த தூளில் இரண்டு ஆழாக்கு அளந்து கொண்டு முக்கால்படி சுத்த ஜலத்தில் இந்தத் தூளைப் போட்டு

அடுப்பில் வைத்து கியாழம் செய்ய வும். முக்கால்படி ஜலம் இரண்டு ஆழாக்காக வற்றியதும் இறக்கி தூய்மையான வெள்ளைத் துணி யில் வடிகட்டி, கியாழத்தை எடுத்து ஒரு பக்கம் வைத்துக் கொள்ளவும்.

ஒரு வீசை சர்க்கரையை பாகு வைத்து, குங்குமப்பூ, ஏலப்பொடி எல்லாம் சேர்த்து கம்பிப்பதம் வந்ததும், இறக்கி நன்னாரி கியாழத்தை அதில் ஊற்றிக் கலந்து, ஆறிய பிறகு சீசாவில் விட்டு நன்ருக மூடி வைக்கவும். பிரியப்படுகிறவர்கள் நன்னாரி கியாழத்தை பாகில் கலக்கும் போது ஒரு ஆழாக்கு எலுமிச்சம் பழரசத்தையும் இதில் சேர்த்துக் கொள்ளலாம். சிறு புளிப்புடன் நன்னாரி வேர் வாசனையும் கலந்து ருசியாகயிருக்கும்.

நன்னாரிவேர் ரத்தத்தை சுத்திப் படுத்தி ஆரோக்கியத்தை அளிக் கிறது. சரீரத்திற்கு குளிர்ச்சியைத் தருகிறது. வெய்யிற் காலத்தில் அனைவரும் பருகவேண்டிய பானம் நன்னாரியே!

## தேவ பானம்

உடம்புக்கு இதத்தை உண்டு பண்ணும் பானங்களில் தேவ பானமும் ஒன்று. இதை தயாரிப் பதற்கு பால் ஒரு ஆழாக்கு, தேன் எட்டு ஸ்பூன், எலுமிச்சம் பழரசம் ஒரு ஸ்பூன் போதுமானது. இவற்றை ஒன்ருகச் சேர்த்து நன்ருகக் கலந்து பனிக்கட்டி யவ்வளவு குளிர்ச்சியாக குடியுங் கள்.

பாலில் ஐஸ் கட்டியைப் போடக் கூடாது. பால் பாத்திரத்தைச் சுற்றி பனிக்கட்டியை வைத்துக் குளிர்ச்சியாக்கலாம். வசதியுள்ள வர்கள் ரிப்ரிஜரேட்டரில் வைத்துக் குளிர்ச்சியாக்கலாம்!

## அன்னசி பானம்!

சாறுள்ளதும் பெரிதானதுமான பழுத்த அன்னசிப் பழத்தைத் தோலைச் சீவி, சிறு துண்டுகளாக நறுக்கி ஆட்டுக்கல்லிலிட்டு தண் ணீர் விடாமல் அரைத்துச் சாற றைப் பிழிந்து துணியில் வடி கட்டிக் கொள்ளவும். கால்படி சாற்றுக்கு ஒரு படி தண்ணீர் விட்டு, ஒரு வீசை அஸ்கா சர்க் கரையும் போட்டு அடுப்பில் வைத்து கிளறவும். சிறு தீயிட்டு எரிக்கவும். சற்று தேன் பதம் வந்தவுடன் கலர் பவுடர் போட்டு இறக்கவும், நன்ருக ஆறின பிறகு சீசாவில் பத்திரப் படுத்திக் கொள் ளவும். ஒரு டம்ளர் தண்ணீர் அல்லது பாலில் ஒரு அவுன்சு சர்பத் விட்டு பருகவேண்டியது தான்! வாய்க்கு ருசிகரமாக இருக் கும். குளிர்ச்சி தரும். உஷ்ணத் தைத்தணிக்கும். வயிற்றுவலியை உடனே நிறுத்தும். எத்தனை மாதங்கள் வைத்திருந்தாலும் கெடாது.

## நூதன பாயசம்!

புதிதாகச்செய்யப்பட்ட ஆரஞ்சு ரசம் ஒரு கோப்பை, பால் ஒரு கோப்பை, சர்க்கரை நான்கு தேக் கரண்டி, ஆரஞ்சுப் பழத்தோல் மெல்லியதாக சீவப்பட்டது ஒரு தேக்கரண்டி. எல்லாவற்றையும் ஒன்ருகச் சேர்த்து கரண்டியால் நன்ருகக் கலக்கிவிடவும். மேலே மெல்லிய ஆரஞ்சுத்தோல் பொடி யைத் தூவி பனிக்கட்டியில் குளிரச் செய்து சாப்பிடவும். மிகவும் நன்ருக இருக்கும். (விரும் புகிறவர்கள் இதில் ஒரு முட்டை யையும் சேர்த்துக்கொள்ளலாம்).

## வாழை சர்பத் பால்

நன்ருகப் பழுத்த வாழைப் பழங் கள் 3; பால் இரண்டு ஆழாக்கு (விரும்புகிறவர்கள் முட்டை 2) வெலா எஸன்ஸ் ஒரு கரண்டி. பழங்களை நன்ருகப் பிசைந்து ஒரு சல்லடையில் வடிகட்டவும். பாலை யும் எஸன்ஸையும் சேர்த்து நுரை கிளம்பக் கடையவும். சர்க்கரை இரண்டு தேக்கரண்டி சேர்த்து உடனே சாப்பிடலாம். தித்திப்பு வேண்டாமென்ருல் இஞ்சி ஊறு காயோடு சாப்பிடலாம். நல்ல புஷ்டியுள்ள ஆகாரம். குழந்தை கள் நிறையச் சாப்பிடலாம். ஒன்றும் செய்யாது. ★

* எமனை வெல்வதற்கு வழி உண்டா? ஏன் இல்லை? படித்துப் பாருங்கள்.

# எமனை வென்றவர்கள்

"பிரதிபா"

"அந்தப் பொல்லாத எமனுக்குப் பொறுக்கவில்லை. கொண்டு போய்விட்டான்'' என்று ஒருவர் காலமானதைக் குறித்து சகஜமாக சொல்லப்படுவதைக் கேட்டிருக்கிறோம். இந்த எமனை தமிழ்நாட்டில் யாவரும் வைத்து திட்டுகிறார்களே ஒழிய, எமதர்மராஜனை வழிபடுவது என்கிற வழக்கம் இங்கு கிடையாது. ஆனால் வடநாட்டினர்கள் தீபாவளியின் போது யமனுக்கு பூஜை செய்து அவனைத் திருப்தி செய்கிறார்கள்.

வடநாட்டில் தீபாவளிப் பண்டிகை 5 நாட்கள் கொண்டாடப்படுகின்றன. தன்தோஸ் என்று சொல்லப்படும் முதல் நாள் பண்டிகையில் லக்ஷ்மி பூஜைதான் முக்யம் என்றாலும் யமபூஜையும் அன்றே ஆரம்பிக்கப்படுகிறது. அகால மரணம், பஞ்சம், வெள்ளம் முதலிய ஆபத்துகள் ஏற்படாமல் இருக்க, இந்த எமபூஜை செய்ய வேண்டியது முக்கியமென்று கருதப்படுகிறது.

இரண்டாம் நாள் தீபாவளி எமசதுர்தசி என்று அழைக்கப்படுகிறது. மந்திரவாதிகள் சித்தி பெறக்கூடிய தினம் அன்றுதான் என்று கருதப்படுகிறது.

எமனுக்கு திருப்தி ஏற்படச் செய்ய அவனுடைய 14 நாமங்களையும் கூறி தர்ப்பணம் செய்கிறார்கள். 'எமாயா தர்மராஜாய' என்ற ஸ்தோத்திரத்தில் இந்த 14 நாமங்களும் இருக்கின்றன.

அவை: எமன், தர்மராஜன், மிருத்யு, அந்தகன், வைவிஸ்வதன், காலன், சர்வபூதக்ஷயன். ஒளதும்பரன், நீலன், பரமேஷ்டி, விருசோதரன், சித்ரன். சித்ரகுப்தன்.

வடநாட்டிலும் வங்காளம், பீகார் முதலிய இடங்களில் எமபூஜை அவ்வளவு சிறப்பாகக் கொண்டாடப் படுவதில்லை.

கடைசி தினமான பையராதுஜ் என்ற நாளுடன் எமபூஜையும் முடிவடைந்து விடுகிறது. இத்தினத்தில்தான் யமுனாநதி தன் சகோதரனை எமதர்மராஜனை வரவேற்று, திலகமிட்டு, அன்னமளிப்பதாக ஒரு கதை சொல்லப்படுகிறது.

எமனை வென்றவர்களைக் குறித்தும் இங்கு குறிப்பிடுவது பொருந்தும். சாவித்திரி, எமனுடைய தர்மோபதேசத்தாலேயே எமனை வென்றாள். மார்க்கண்டேயன் சிவனுடைய உதவி கொண்டு எமனை வென்றான்.

இவ்விருவர்கள் தவிர, எமனை வென்றவர்கள் யாருமில்லை. அதாவது மரணத்தை வெல்ல இரண்டே மார்க்கமுண்டு. ஒன்று சாவித்திரி வழி; இதை காலவந்தனம் என்று சொல்கிறார்கள். மற்றொன்று மார்க்கண்டேயன்

வழி. இதை காலவஞ்சனம் என்று கூறுகிறார்கள்.

காலத்துக்குட்பட்டு காலனை வெல்வது காலவந்தனம். காலத்தைக் கடந்து, கடவுளை வழிபட்டு, காலனை வெல்வது காலவஞ்சனம்.

சாவித்திரி, மார்க்கண்டேயன் இருவர் விஷயத்திலும் எமன் தன் விதிக்கு விலக்காக நடந்து கொண்டான். சாவித்திரி விஷயத்தில், தன் வாக்கை காக்க வேண்டி அவள் கணவனுக்கு உயிர்ப் பிச்சை அளித்தான்.

மார்க்கண்டேயனே, காலனை சிந்தியாமல் சிவத்தையே சிந்தித்து வந்தான். கால நியமப்படி அவன் முடிவு காலம் வந்தபோது தன் கடமையைசெலுத்த வந்தான் எமன். ஆனால் மார்கண்டேயன் ஆதியந்தமில்லாத சிவதரிசனத்தில் ஈடுபட்டிருந்து காலத்தைக் கடந்த காலதீதனாக விளங்கினான். எமன் காலத்திற்குள் மட்டும் அதிகாரியாதலால் காலவரையறைப்படி நடந்து கொள்வானானான். காலாதீதமானவர்களைப் பிடிக்க காலனுக்கு அதிகாரமில்லை. அதனால்தான் காலனை பரமசிவன் தண்டித்தார். இந்த சம்பவம் நடைபெற்ற திருக்கடையூர் க்ஷேத்திரம் தமிழ்நாட்டில் உள்ளது.

எமனை வென்றவர்கள் இன்னும் பலர் உண்டு. அவர்கள் பூதவுடலை நீக்கியபோதிலும் அமரராகிவிட்டவர்கள். பாரதியார், காந்திஜி போன்றவர்களைத்தான் குறிப்பிடுகிறேன். 'எங்கேடா அந்த எமன்? அவன் என்னை என்ன செய்யமுடியும்?' என்று பாரதியார் ஒருசமயத்தில் கேட்டிருக்கிறார்.

எமனை வென்றவர்கள் ஒரு புறமிருக்க எமனையே குருவாகக் கொண்டு அவரிடமிருந்து சகல சாஸ்திரங்களையும் கற்றுவந்தவர் நசிகேதஸ். இவர்பெயரினையே தான் நசிகேதோ பாக்கியானம் என்கிறநூல் விளக்குகிறது. தன் தகப்பனார் கோதானம் செய்து கொண்டிருக்கையில், அங்கிருந்த பசுக்களில் மிகமோசமாக இருந்த ஒன்றைப் பார்த்து, அம்மாதிரி பசுவைதானம் செய்யலாகாது என்று நசிகேதஸ் கேலி செய்து வந்தான். அத்துடன் நில்லாமல், தன்னையாருக்கு தானம் செய்யப்போவதாக, தகப்பனரை நச்சரித்தான். கோபம் கொண்டதந்தை, ''உன்னை மிருத்யுவுக்கே தானம் செய்கிறேன்'' என்று சொன்னார். உடனே நசிகேதஸ் எமலோகம் கிளம்பினான். எமன் அங்கு இல்லை. அவன் அரண்மனையில் நசிகேதஸ் இரண்டு இரவுகள் பட்டினியுடன் காத்திருந்தான். உறக்கமில்லாமல், எமன் வருகைக்காகக் காத்திருந்தான். அரண்மனையில் அவனை எவ்வளவோ உபசரித்தும், ஏற்க மறுத்துவிட்டான். எமன் வந்து விஷயமறிந்ததும், ஓடோடியும் வந்து நசிகேதஸை உபசரித்தான்; பலவரங்கள், தன் அரச பதவிகூட தருவதாகவும், உடனே உபசரணைகளை ஏற்றுக் கொள்ளும் படியும் கோரினான். நசிகேதஸ் தனக்கு வேண்டியது ஒன்றே ஒன்றுதான் என்றும் அது ஜீவ ஆத்மா தத்துவம் பற்றிய உபதேசம் என்றும் சொன்னான். எமன் இதை தவிர, வேறு எது வேண்டுமானாலும் தருகிறேன் என்றான். நசிகேதஸ் உபதேசமில்லையேல் பட்டினியால் பிரயாணத்தியாகம் தவிர, வேறு வழியில்லை என்று பிடிவாதம் செய்யவே, எமன் அவனுடைய மனே உறுதியைக் கண்டு சந்தோஷித்து உபதேசம் செய்து அருளினான்.

எமனுக்காக விசேஷ பண்டிகை எதையும் தமிழர்கள் ஏற்படுத்திக் கொள்ளாவிட்டாலும், எமனை அடியோடு மறந்து விடவில்லை. சித்ரா பௌர்ணமியன்று சித்ரகுப்தனை வழிபடுவது எமபூஜைதான். ★

★ ஊமத்தையின் விஷத்தன்மை நமக்கு நன்கு தெரியும். அரசாங்கமே அதன் விஷத்தன்மை கண்டு நடுங்கி சட்டங்கள் இயற்றி யிருக்கிறதென்றால்...?

# உயிர் வாங்கும் ஊமத்தை

'நீலா'

ஊர்ப்புறத்திலும், பெரிய சாலை ஓரங்களிலும், புதர்கள் முட்கள் நிறைந்த இடங்களிலும் சர்வ சாதாரணமாக வளர்வது தான் ஊமத்தஞ் செடி. இந்த வகைச் செடியை இந்தியா முழுவதிலும்—அநேகமாக எல்லா இடங்களிலுமே—காணலாம். ஊமத்தஞ் செடியில் காணப்படும் அழகிய பூக்களைச் சுட்டிக் காட்டி, அவற்றைத் தொட்டாலோ அல்லது தின்றாலோ, அப்படித் தொட்டவர்கள் அல்லது தின்றவர்கள் ஊமையாகி விடுவார்கள் என்று சொல்வதுண்டு. ஆனால், அபாயம் ஊமத்தஞ் செடியிலோ அல்லது அதன் பூவிலோ இல்லை; அதன் விதைகளில்தான் இருக்கிறது. ஆம்! பேரபாயம்தான்; உயிருக்கே அபாயம்!

ஊமத்தையில் இரண்டு வகை உண்டு. ஒன்று, கருஞ்செந்நிறம் கொண்ட பூக்களை உடையது; இதைக் கரு ஊமத்தை என்பார்கள்; சில இடங்களில் நீல ஊமத்தை என்றும் கூறுவதுண்டு. இன்னொன்று, வெள்ளை வெளேரென்ற மலர்கள் பூக்கின்ற வகை; இதற்கு வெள்ளூமத்தை என்று பெயர். இரத இரண்டு விதங்களிலும் கரு ஊமத்தையை அதிகமாகக் காண முடியாது. வெள்ளூமத்தைதான் இந்தியாவின் பல பகுதிகளிலும் காணப்படுகிறது.

நமது சென்னை ராஜ்யத்திலும் வெள்ளூமத்தைதான் அதிகம். அதன் தோற்ற அழகைப் பற்றி டாக்டர் ஷ்ராட் என்பவர் வர்ணிக்கிறார்;

''ஊமத்தை வகையில் வெள்ளூமத்தை பருவக்காற்று மழைக்குப் பிறகே காணப்படுகின்றது. தன்னுடைய பெரிய மிக முக்கியமான, பொன்னிறங் கொண்ட, குழல் போன்ற மலர்களை முன்னிருத்தி, மிகச் செழிப்பாக வளர்கின்றது அது. அப்படி வளருங் காலத்து, குப்பையும் கூளமும் நிறைந்த தன் சுற்றுப் புறத்திற்கும் அழகூட்டி விடுகின்றது.''

இனி, ஊமத்தை விதை எவ்வாறு விஷயம் விளைவிக்கிறது என்று பார்க்கலாம். விஷமிடுவதையே தொழிலாகக் கொண்ட சில குற்ற இனத்தார் இருக்கிறார்கள். இவர்கள் பரம்பரை பரம்பரையாக இதே 'கலை'யைப் பயின்று வருபவர்கள். நஞ்சிட்டுக் கொல்வதற்கு இவர்கள் பெரிதும் பயன்படுத்துவது ஊமத்தை விதைகளைத் தான்.

விஷம் வைப்பதற்கு முன்னால், ஊமத்தை விதை அல்லது மலர்களைத் தயார் செய்து 'ரெடி'யாக வைப்பது வழக்கம். இதற்கு எத்தனையோ வகையான முறைகளைக் கையாள்வது உண்டு. உணவில் கலந்து கொடுப்பதற்கும், வேறு விதமாக உட்செலுத்துவதற்கும் எவ்வளவு அளவு தேவை, அந்த அளவை எந்த விதமாக உபயோகிக்க வேண்டும் என்பதை யெல்லாம் மிக நுணுக்கமாக விளக்கலாம். ஆனால், இதைப் பற்றிப் பொதுமக்கள் அதிகம் தெரிந்து கொள்ளாமல் இருப்பதே நல்லது.

குடி வகைகளில் போதையை அதிகரிப்பதற்காகவும் ஊமத்தை கலக்கப்பட்டது என்று தெரிய வருகிறது. இந்த வகையில் மதுபானங்கள் மிக அதிகமாக விற்பனையாக இடமுண்டு. ஆனால், இவ்வகைக் கலப்படத்தைக் கண்டு பிடிப்பது மிகவும் கடினம்.

ஏதுமறியாத அப்பாவி வழிப்போக்கனை ஊமத்தையைக் கொண்டு மயக்கமடையச் செய்து, அவர்களிடமிருந்து பொருள்களைக் களவாடிச் செல்லும் வழக்கம் வெகு காலமாக (பல நூற்றாண்டுகளாக) நடைபெற்று வருகிறது. இப்படி விஷமிடுபவர்கள் பல வகையில் மாறுவேஷம் போட்டுக் கொண்டு, கூட்டத்தோடு கூட்டமாகக் கலந்து வந்து பிரயாணம் செய்வார்கள். 'உறவாடிக் கெடுப்பது' மிகவும் சுலபம் அல்லவா? தங்கள் காரியசித்திக்காக இந்தக் கொள்ளைக் கூட்டத்தார் புனைந்து கொள்ளும் மாறு வேஷங்களை, திரு. எம். பாபாராவ் நாயுடு என்ற சென்னைப் போலீஸ் அதிகாரி இப்படி வகைப்படுத்தி விளக்குகிறார்.

(அ) கௌரவமான உடையணிந்து, பூணூலையும் தரித்து, பிராமணர்கள் அல்லது வைசியர்கள் போலக்காணப்படுபவர்கள்.

(ஆ) குடும்பத்துடன்—அல்லது, 'குடும்பம்' என்று சொல்லிக் கொள்ளும் ஒரு சிறு துணைக்கூட்டத்துடன் பெரிய மனித தோரணையில் வந்து, வண்டி ஒன்றையும் வாடகைக்கு அமர்த்திக்கொண்டு, வண்டிக்காரனுக்கு ஊமத்தையைக் கொடுத்து அவனை வழியில் தள்ளி விட்டு, வண்டியோடு காளைகளையும் ஓட்டிச் சென்று அடுத்த ஊரில் விற்பவர்கள்.

(இ) சிஷ்யகோடிகள் போலக் கூட்டாளிகள் பின்தொடர்ந்து வர, பைராகி கோலத்தில் காட்சி தரும் பக்திமான்கள்.

(ஈ) 'வெங்கடேசப் பெருமாளின் பக்தன்' என்று சொல்லிக் கொண்டு, வேங்கடரமணரின் நிதியிலிருந்து கடன் வாங்கித் தருவதாக வாக்களித்து, அப்பாவிகளைக் கண்காணாத இடத்துக்கு அழைத்துச் சென்று தஞ்சூட்டுபவர்கள்.

(உ) சாதாரண வழிப்போக்கர்கள் போல, யாத்ரீகர்கள் கூடவே நடந்து வருபவர்கள்.

(ஊ) நடனமாடும் பெண்களுடனும், விலைமாதர் கூட்டத்துடனும் பிரயாணம் செய்யும் உல்லாசிகள்.

(எ) பெரிய குடும்பங்களில் சமையல் வேலை செய்ய வரும் பிராமணப் பரிசாரகர்கள்.

(ஏ) தின்பண்டங்கள், ஹூக்கா முதலியவற்றைப் புகைவண்டிகளில் தன்னுடன் பிரயாணம் செய்பவர்களுக்கு மிக்க அன்போடு கொடுக்கும் சாதுக்கள்.

மேலே சொன்ன பலதிறப்பட்ட 'தொழிலாளி'களும், சாதாரணமாக, சத்திரஞ் சாவடிகளிலோ, மசூதிகளிலோ, பெரிய ஆலமரம் ஒன்றின் கீழே தங்கியிருப்பார்கள். இவர்கள் தங்களுடன் கண்ணுக்கு அழகாக இருக்கின்ற சில பெண்களையும் அழைத்து வந்திருப்பார்கள். யாராவது வழிப்போக்கர்கள் இளைப்பாறவோ, தங்கவோ அந்த இடங்களுக்கு வந்தால், அவர்களை இவர்கள்தான் முதன் முதலில் அன்போடு வரவேற்பார்கள். வரவேற்று, முன்பே ஊமத்தை விதைப் பொடி கலந்து வைத்த ரொட்டி, மற்ற உணவுப் பொருள்கள், ஹூக்கா, வெற்றிலை-பாக்கு-புகையிலை, தண்ணீர் முதலியவற்றைக் கொடுத்து உபசரிப்பார்கள்.

ஊமத்தை சேர்ந்த உணவை உட்கொண்டவர்களுக்கு லேசான மயக்கம் உண்டாகும்—பல சந்தர்ப்பங்களில் முற்றுமே உணர்விழந்து போவதும் உண்டு. அதன் பின்னர், கொள்ளைக்கூட்டம் தன் வேலையை ஆரம்பிக்கும். இடையில் வேறு யாராவது பிரயாணிகள் வந்தால், உணர்வற்றுக் கிடக்கும் பழைய வழிப்போக்கர் மீது போர்வையைப் போட்டு மூடி அவர்கள் தூங்குவது போலத் தோன்றச் செய்வார்கள்; அல்

லது, அவர்கள் இருப்பதே வெளிக்குத் தெரியாதபடி முழுவதும் மறைத்து விடுவார்கள்.

சைன்யத்திலிருந்து ஓய்வு பெற்ரோ அல்லது விடுமுறையிலோ சொந்த ஊருக்குப் போகும் போர் வீரர்களை மத்திய இந்தியாவிலிருந்த ஒரு கொள்ளைக் கூட்டம் ஊமத்தை விஷத்தைக் கொண்டு கொள்ளையடித்து வந்ததாகத் தெரிகிறது. அந்தத் துரதிர்ஷ்டம் பிடித்த சிப்பாய்களிடம் அவ்வளவு நாட்களாகச் சேர்ந்து வைத்த பணமும் மற்றப் பொருள்களும் இருக்கும்; அல்லாமலும் அவர்கள் ஆயுதம் எதுவும் இல்லாமல் தன்னந் தனியாகப் போவார்கள். இந்த மாதிரி 'அஞ்சாமல் தனி வழியே போகும்' சிப்பாய்களின் 'மடியிலே கன'மும் இருந்து, அவர்களைக் கொள்ளையடிப்பதற்கென்றே ஒரு திருட்டுக் கூட்டமும் இருந்ததால், விடுமுறைக்காகத் தங்கள் சொந்த ஊர் சென்ற சிப்பாய்கள் பலரைப் பற்றிய விவரமே தெரிவில்லையாம்!

சிப்பாய்களைக் கொள்ளையடிக்க எண்ணுபவர்கள், உணவுப் பொருள்களிலோ வேறு ஏதாவதொன்றிலோ விஷப் பொடியை வைத்துக் கொடுத்து விடுவார்கள். லேசாக மயக்கம் வர ஆரம்பித்ததும், சிப்பாய்கள் கலவரமடைந்து சத்தம் போட்டுக் காரியத்தைக் கெடுத்து விடாமல் இருப்பதற்காக அவர்கள் கழுத்தை நெரித்து, அவர்களிடமிருந்த பொருள்களையெல்லாம் எடுத்துக்கொண்ட பிறகு, பாழுங்கிணறு ஒன்றுக்கு இழுத்துச் சென்று, வயிற்றில் கத்தியால் குத்தி, 'சட்'டென்று கிணற்றில் தள்ளி விடுவார்கள். இந்த முறையில், சொட்டு ரத்தம் கூடத் தரையில் சிந்தாமலும் குத்துபவன் உடைகளில் தெறிக்காமலும் வேலை செய்யக்கூடிய திறமைசாலிகளும் உண்டு.

மேற்படி துர்ச்சம்பவங்கள் நேராதிருப்பதற்காக அந்த நாளைய அரசாங்கம் கூடுமான வரை நடவடிக்கை எடுத்து வந்தது. குறிப்பாக, கான்பூரில் இருந்த மேஜர் ஜெனரல் லீகர் என்ற ராணுவ அதிகாரி 1810-இல் வெளியிட்ட அறிக்கையைச் சுட்டிக் காட்டலாம். அதில் அவர், சிப்பாய்கள் பின்பற்ற வேண்டிய சில முக்கிய விதிகளைக் குறிப்பிடுகிருர்.

(க) (விடுமுறையில் செல்லும் சிப்பாய்கள்—முக்கியமாக, ஆயுதம் இல்லாதவர்கள்) வழியில் தாங்கள் சந்திக்க நேரும் புதிய ஆட்கள் யாராயிருந்தாலும்—அதிலும் அவர்கள் சிப்பாய்கள் போகும் வழியாகவே தாங்களும் போவதாகக்கூறி அவர்களோடு தொடர்ந்து வரும்போது—சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

(1) தங்கும் விடுதிகளிலிருந்து மற்றப் பிரயாணிகளுக்கு முன்னர், அதிகாலையில் எழுந்து வெளியே போகக்கூடாது.

(2) பிறரிடமிருந்து வெற்றிலை-பாக்கு-புகையிலை, ஹூக்கா, தின்பண்டங்கள் முதலியவற்றை முக்கியமாக, அவை ஒதுப்புறமான இடங்களில் கொடுக்கப்பட்டால்—வாங்கிக் கொள்ளக்கூடாது.

(4) குதிரைப் படைகள் இருக்கும்போது அவற்றுடனே, அல்லது பெரிய பிரயாணிகள் கூட்டத்துடனேதான் இயன்ற வரையில் சேர்ந்து செல்ல வேண்டும்.

கடைசியாக, ஊமத்தை விஷத்தைப்பற்றிய வைத்தியக் குறிப்புகள் சில சொல்ல வேண்டியது அவசியம். ஊமத்தை விதைப் பொடி ஒரு போதைப்பொருள், ஓர் அளவுக்குமேல் உபயோகித்தால், அது உயிருக்கே உலை வைக்கக்கூடும். ஊமத்தை அப்படி ஒன்றும் சக்திவாய்ந்த நஞ்சுப் பொருள் அல்ல என்ற ஒரு கருத்தும் நிலவி வருகிறது. ஆனுல், அது உடனே வேலை செய்யக்கூடிய மயக்க மருந்து என்பதை மறுக்க முடியாது. கஞ்சாவைப் போலவே ஊமத்தையும் கொடியதுதான் என்பதில் சந்தேகமே இல்லை.

ஊமத்தையை உபயோகிக்கும் குற்றவாளிக்கு அதனல் பல நன்

மைகள் உண்டு. அவன் காரிய சித்தி அடைவதோடு, சட்டத்தின் பிடியினின்றும்கூட வெகு சாமர்த்தியமாகத் தப்பிச் செல்ல முடிகிறது.

மத்திய மாகாணப் போலீஸைச் சேர்ந்த ஜீ. டபிள்யூ. கேயர் என்பவர் சொல்வது போல, ஊமத்தை சுவையோ, மணமோ இல்லாதது; உடனே போதைதரக் கூடியது; எங்கும் எளிதாகக் கிடைக்கக் கூடிய ஒரு மயக்க மருந்து. இந்த நஞ்சை உட்கொண்டவன் வாந்தி பண்ணுவதில்லை. ஊமத்தை தன் சக்தியை இழந்த பிறகும், அவன் கொடிய மயக்க நிலையிலிருந்து மீள்வதில்லை. அவன் சித்தமும் அதன் பின்னர் சரியான நிலைக்கு திரும்ப வருவதில்லை. இதன் காரணமாக, அப்பாவி மனிதர்கள் பலரை, கிராம மக்கள் 'பைத்தியக்காரர்கள்' என்று நினைத்து, அடித்துத் துரத்தியதும் உண்டு.

இந்தக் காரணங்களால் எல்லாம் நஞ்சுண்டவன் மற்றவர் உதவியை நாட முடியாது போய் விடுகிறது. ஆகவே போலீஸாருக்கும் சரியான விவரங்கள் கிடைப்பதில்லை. எப்படியோ, கஷ்டப்பட்டுக் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து விட்டாலும், அவர்கள் மீது கொலைக் குற்றம் சுமத்தித் தண்டிக்க முடியாது. ஏனென்றால், கொள்ளையடிப்பதுதான் தங்கள் நோக்கம் என்று சொல்லி. அவர்கள் சாதாரண தண்டனையுடன் பிழைத்துப் போக வழியிருக்கிறது.

ஊமத்தை விஷம் கொடுக்கப்பட்டதன் அறிகுறிகள் என்ன? அதற்கு மாற்று மருந்து உண்டா? இந்தக் கேள்விகளுக்குப் பதில் தெரிந்து கொள்ள வேண்டியது முக்கியமானது.

விஷம் உள்ளே போனதும், தலைவலி, தொண்டை வறட்சி, தாங்க முடியாத தாகம், மயக்கம், நடக்க முடியாதபடி தள்ளாடுதல், தெளிவற்ற மங்கலான பார்வை முதலியவை முதல் அறிகுறியாகக் காணப்படும். அடுத்த படியாக, முகம் சிவந்து, கண் விழிகள் பிதுங்கி, வேகமாகச் சுழலும். காய்ச்சல் இராது; ஆனால், அடக்க முடியாத தாகம் உண்டாகும், வேர்வை ஆறாக வழியும். நாடி மெதுவாகத் துடிக்கும். கடைசியாக, நஞ்சுண்டவன் நிற்க முடியாமல், தள்ளாடி, விழுந்து, உணர்விழந்து, பெரும்பாலும் இறந்தே போய்விடக் கூடும்.

ஈக்கு விஷம் தலையிலிருப்பதாகவும், தேளுக்கு விஷம் அதன் கொடுக்கில் இருப்பதாகவும், பாம்பிற்கு விஷம் பல் வரையில் இருப்பதாகவும், கூறும் நீதி நூலில் தீயவர்களின் உடல் முழுதுமே விஷம் என்று கூறப்பட்டிருக்கிறதை நாம் படித்திருக்கிறோம்.

அதே வகையில் பார்த்தால் ஊமத்தஞ் செடியின் பாகங்களில் அதன் விஷத்தன்மை, அதன் விதைகளில்தான் மிகுந்திருக்கிறது என்பதை தயக்கமின்றிக் கூறலாம்.

ஊமத்தை விஷத்தை எதிர்ப்பதற்கு ஏற்ற விஷ முறிவு, வாந்தி எடுக்கச் செய்யும் பொருள்களைக் கொடுப்பதுதான்.

ஊமத்தையின் விஷத்தைவிட, அதை உபயோகிக்க முற்பட்ட மனிதர்களின் நெஞ்சின் விஷத்தன்மையை நினைத்துப் பார்த்தால் இத்தகைய கொடிய எண்ணம் உள்ளவர்களும் மனித சமூகத்தில் வாழ்ந்து வருகிறார்களா என்று ஆச்சர்யப்பட வேண்டியிருக்கிறது.

உயிர்வாங்கும் ஊமத்தையைக் கண்டு பெரியோர் முதல் குழந்தைகள் வரை நடுங்குவதன் மர்மம் தாவரவர்க்கத்தில் விஷம்மிகுந்து காணப்படும் அதன் கொடிய தன்மையால்தான். 'உன்மத்தம் பிடித்தவன்' என்னும் சொல், ஊமத்தையின் விஷத்தாக்குதலால் உண்டாகும் போதை நிலைதானோ என்று எண்ணத் தோன்றுகிறது.

நல்லகாலமாக, இப்பொழுதெல்லாம் ஊமத்தை விஷங் கொடுத்துக் குற்றங்கள் புரிவது அதிகமாக நடைபெறுவதில்லை. இது குறித்து, நாம் மகிழ்ச்சி அடைவதுடன், அரும் பாடுபட்டு ஓரளவு அதை ஒழித்த அன்றைய அரசாங்கத்துக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். ★

# தாலியும் பூணூலும்

"சிரஞ்சீவி"

அதோ ஒரு யுவதி!

ஆண்துணை எவருமின்றி, அவசியம் காரணமாக, தனியே சென்று கொண்டிருக்கிறாள் தெருவழியே!

மனக் குதூகலம், பணப் பவிஷு, போதிய வசதி, இத்யாதிகள் இருப்பதால், அந்த யுவதி ஒய்யாரமாக, தன்னந்தனியாக நடந்து போகிறாள் தெருவிலே. 'யாரோ ஒரு பெண்; எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறாள்; நமக்கென்ன?' என்று எல்லோருமா ஏனோதானோ என்று இருந்து விடுகிறார்கள்! இல்லை. யுவதியின் பொலிவுமுகம், வாளிப்பான உடற்கட்டு, தனிமை நடை, இத்தியாதிகளைக் கண்டு அந்த யுவதியிடம் துர் எண்ணம் வைத்து பின் தொடர்ந்து செல்கிறான் ஒரு வாலிபன். பின்னுக்கிருந்து துரத்தி வருகிற அவன், அவளை நெருங்கி, தாண்டிச்சென்று முன்னால் விரைந்து சென்று முகத்தைப் பார்க்க ஆவல் கொள்கிறான். அந்த உந்தலில் விரைந்து நடக்கிறான்; நெருங்கி, தாண்டி, முந்திச் சென்று கழுத்துச் சுளுக்கத் திரும்பிப்பார்க்கிறான். முகத்தைப்பார்த்தாகி விட்டது. மோகம் முற்றுகிறது. அவன் மனதிலே என்னவோ ஒரு ஆசை. உச்சி முதல் உள்ளங்கால் வரை பார்க்கிறான்.

இவ்வளவு ஆர்வத்தோடு பார்த்தவனுக்கு என்ன நேரிட்டு விட்டது? திகைக்கிறான்! அவளது பார்வை விம்மும் ஹிருதயத்தின் மீது படவில்லை. உடுக்கைபோன்ற இடையையும் ஊடுருவவில்லை. வாழைத் தண்டுபோல இருக்கும் இரு கால்களையும் ஆராயவில்லை. அவளைப் பார்க்கவே அஞ்சி விட்டான். மீண்டும் ஒரே ஒரு தரம் பார்த்து விடுகிறேனே என்று அவனது கண்கள் அவனைக் கெஞ்சியும் திரும்பிப் பார்க்கவே பயப்படுகிறான்!

அப்படி அவனைப் பயமுறுத்தியது எது? ஓடும் பாம்பைக் கையில் பிடிக்கக் கூடிய துணிச்சலுடைய அந்த வாலிபனுக்கு அத்தகைய கிலியைத் தந்தது எது?

அவள் கழுத்திலே இருந்த ஒரு விலை மதிப்பற்ற ஆபரணம்!...... காலணா மதிப்புள்ள ஒரே ஒரு நூல்! பொன்னான வர்ணத்திலுள்ள மஞ்சள் கயிறு!

அவள் நிஜமாகவே ஒருவனுக்கு மணமுடிக்கப்பட்டு, ஆனால் அந்தக் காசு பெறாத கயிறு மட்டும் அவள் கழுத்தை அலங்கரித்தபடி வெளிப் பார்வைக்குப் படாதிருந்தால், அந்த வாலிபன் தனித்துச்செல்லும் அந்த யுவதியை சும்மா விட்டிருப்பானோ? காலரைத்தூக்கி விட்டுக் கொள்வான்; கண் அசைப்பான்; புன் முறுவல் பூப்பான்; கனைத்து லேசாக இருமுவான்; துணிச்சல் துளிர்த்தால் அவளோடு பேசிப் பார்க்கக் கூட முற்பட்டு விடுவான்! இதற்கெல்லாம் தெம்பூட்ட வழியின்றி குறுக்கே நின்று விடுகிறது அந்த மெல்லிய மஞ்சள் கயிறு. பெண்களைச் சுற்றி இறுக்கமாக முள்வேலியிட்டால் கூட, அவ்வளவு பிரமாதமான தற்பாதுகாப்பாக அது இராது. அதையும் மிஞ்சிய பந்தோபஸ்தாக பெண் குலத்திற்கு பாதுகாப்பளிக்கிறது அந்த மஞ்சள் கயிறு!

காசுபெறாத கயிறாக இருந்தாலும் கதிகலங்க வைக்கும் இந்த மஞ்சள் கயிறு – தாலி - மணமான மங்கை

---

பெண்களின் தற்பாது காப்புக்காக முன்னோர்கள் இருஆயுதங்களைக் கண்டு பிடித்தனர். அவைகளே தற்பாதுகாப்புக்கு ஒரு தாலி. தாரதம்யம் தெரிந்து கொள்ள பூணூல்.

---

களுக்கு அவசியமா என்று கேட்கப் படுகிறது இப்போது! நாகரீக யுகத்தில் ஒரு அநாகரீக மூடப் பழக்கத்தை ஏன் பின்பற்ற வேண்டும் என்ற கேள்வி கிளப்பப் படுகிறது!

பகுத்தறிவுக்கு நாகரீக வளர்ச்சி எவ்வளவு தூரம் பரமசத்ருவாகி விட்டது! ஒரு சிறு சின்னம் பேதைப் பெண்களுக்கு எத்தகைய தொரு தற்பாதுகாப்பு சாதனமா யிருக்கிறது என்பதைக் கண் கூடாகப் பார்த்துமல்லவா முன் னேர்களையெல்லாம் மூடர்கள் என்று சொல்லும் துணிச்சலை இந்த நாகரீகம் பகுத்தறிவுக்குக் கொடுத்து விட்டது!

இன்று எவனுவது பூணூல் தரித் திருப்பதைக் கண்டால் தீயை மிதித்து விட்டது போல பகுத்தறிவு நெருப்புப் பறக்க விழித்துப்பார்க் கிறது! பிற் காலத்தில் இப்படி பகுத்தறிவு பார்த்துக் கொதித்தெழ வேண்டு மென்பதற்காக முன்னேர் கள் இந்தப் பழக்க வழக்கத்தை ஏற்படுத்தி வைத்தார்களா?

எதை தமிழன் விலைமதிப்பற்ற ஒரு பொக்கிஷமாகமதித்து பரமாத மாகப் பெருமை கொள்கிருனே, அந்தக்கற்பை—பெண்ணின் தூய் மையை—தமக்குத் தாமே காப் பாற்றிக்கொள்ள உதவியாகவே ஆண்கள் மீது பூணூல் ஏற்றப் பட்டிருக்கிறது என்று சொல்லப் போனுல் விதண்டா வாதமாகாது!

எந்த வகுப்பாரையும் பிரித்துக் காட்டுவதற்கோ, அல்லது பாகு படுத்திக்காட்டுவதற்கோ முன்னேர் கள் பூணூல் தரிப்பதை ஏற்படுத்த வில்லை. மேலும் சொல்லப்போனுல், இந்த வழக்கத்தை ஏற்படுத்தி வைத்தவர்கள் ஆரிய வம்சாவழி யினர் அல்ல என்பதைப் பல ஆராய்ச்சி நூல்கள் அலசி ஆராய்ந்து சொல்லுகின்றன. இதற்குச் சான்று இன்றும் காண லாம். பிராமண குலத்தவர்கள் மட்டும் பூணூல் தரிக்கும் வழக் கத்தை ஏகபோக உரிமையாக்கிக் கொள்ளவில்லை. க்ஷத்திரியர்களும், வைசியர்களும் கூட தரித்து வந்திருக்கிருர்கள்; வருகிருர்கள்!

ஆண்கள் பூணூல் தரிப்பதன் மூலம் பெண்களுக்கு எந்த வழியில் பாதுகாப்பளிக்கிறது என்று கேட் கலாம். ஒரு வழியிலல்ல, எத் தனையோ விதங்களில் பூணூல் பெண்களுக்கு வழிகாட்டுகிறது. பெண்கள் அணிந்திருக்கும் தாலி ஆண்களுக்கு எந்த ரீதியில் எச் சரிக்கை தருகிறதோ, அதே ரீதியில் ஆண்கள் தரித்திருக்கும் பூணூல் பெண்கள் எப்படியெப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதற்கும் அபாய அறிவிப்பாக விளங்கு கிறது.

நம் மூதாதையர் நாட்களில் விருந்தோம்பலும் பரோபகார மும் பெருமை தரும் சிறந்த பண் படாத இருந்துவந்தது. அந்த அற்புதமான காலத்தில், வாணிபம் கருதியும், நாட்டுப் பாதுகாப்பு மேற்கொண்டும், க்ஷேத்ராடனத் திற்காகவும் ஊர் விட்டு ஊர் செல் லும் அவசியம் அந்தக் காலத்தில் இருந்து வந்தாலும் கூட, அந்த நாளில் ஓட்டல் கிடையாது; தங்குமிடம் என்று தனியிடமும் இல்லை. பசி தீர்ந்து துயில இடந்தருவதை பெருமைக் குரிய ஒரு பண்பாடாகக்கருதி ஒவ்வொரு குடும்பமும் பின் பற்றி வந்தது. தெரிந்தவர்களுக்கும் உறவினர் களுக்கும் மட்டுமே இந்த உபசரிப்பு அளிக்கப்பட்டு வரவில்லை; முன் பின் தெரியாதவர்களுக்குக் கூட இந்த சௌகரியம் அளிக்கப்பட்டு வந்தது.

எந்த நகராமாயினும் சரி, எந்தக் குக்கிராமமாயினும் சரி, சாப்பாட்டு வேளைகளில் குடும்பத்தலைவன் வெளியே வந்து கண்ணேட்டம் செலுத்தாமல் போஜனம் செய்ய உட்காருவதில்லை. திண்ணையிலே யாராவது உட்கார்ந்திருந்தால் சாப்பிட அழைப்பார்கள். இது அந்தக் காலத்திய சிறந்த பழக்க மாக இருந்து வந்தது. இதை ஒரு வட்டியில்லாக் கடன் போல் கருதி, வந்தார்களே ஒழிய, கடமையாகக் கருதவில்லை. ஏனெனில் இப்படி தன் வீட்டில் உபசரிக்கும் குடும்பத் தலைவன் என்ருவது வெளியூர் செல்லும்போது அங்கே அவனுக்கு

போஜனம் கிடைத்து விடுகிறதல்லவா!

சாப்பாட்டு வேளைகளில் திண்ணையில் வந்து உட்கார்ந்திருக்கும் வழிப் போக்கர்களை உபசரிக்கும் பொறுப்பை குடும்பத் தலைவன் மட்டும் வகிக்கவில்லை அத்தலைவன் வெளியூர் சென்றிருந்தால் 'வீட்டிலே புருஷன் இல்லையே!' என்று பெண்கள் விருந்தாளிகளைப் புறக்கணித்து விடமாட்டார்கள். வந்தவர்களை உபசரிப்பது அவர்களது பொறுப்பாகிவிடும்.

தலைவனில்லாத சமயங்களில் தனித்திருக்கும் ஒரு பெண் யாரோ ஒரு அன்னியனை உள்ளே வைத்துப் போஜனமளிப்பதில் எவ்வளவோ சங்கடங்கள் இருந்தன. இதை முன்னோர்கள் உணராமலில்லை. முன்பின்னறியாத வழிப் போக்கர்களிடம் பெண்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்த ஒரு வழி கண்டு பிடித்தார்கள். அதுவே பூணூல்.

தலைவனில்லாத சமயம் வாசலிலே உட்கார்ந்திருக்கும் விருந்தாளியை சட்டெனவந்து சாப்பிட அழைக்க மாட்டாள் பெண். ஒருக்களித்திருக்கும் கதவு இடுக்கின் வழியாக வந்திருக்கும் வழிப்போக்கனை மறைந்து நின்று பார்ப்பாள். அவளது பார்வை அவனது உடம்பின் மீது படும்.

வந்திருக்கும் விருந்தாளியின் உடம்பிலே பூணூல் எதுவும் இல்லாதிருந்தால் அவன் வாலிபத்தின் தலைவாசலை இன்னும் மிதிக்கவில்லை என்று புரிந்து கொள்வாள். அத்தகையோனை தன் தம்பிக்குச் சமானமாகக் கருதுவாள். கதவைத் திறந்து கொண்டு வெளியே வருவாள். தப்பியிடம் காட்டும் பரிவைத் தருவாள். உள்ளே அழைத்துப் போய் இலைபோட்டு அருகிலே நின்றபடி ''என்ன வேண்டும்? ஏது வேண்டும்?'' என்று கேட்டு உபசரிப்பாள். உபசரிப்பில் இது ஒரு ரகம்.

விருந்தாளி ஒற்றை வடத்தில் நூல் அணிந்திருந்தால் அவன் வாலிபதிசையை அடைந்துவிட்ட, ஆனுல் மணமாகாத நிலையிலுள்ளவன் என்பதாகும். பருவக்கோளாறுகள் பொல்லாதவையல்லவா? அன்னமிடும் கையை அரவணைக்க அவன் முற்பட்டுவிடக் கூடாதே என்று பக்குவமாக நடந்து கொள்வாள். ஒரு பெண்ணுக்கும் பருவ வயதினனுக்கு மிடையே நிலவும் தனிமை இனக் கவர்ச்சிக்கு தூபமிட்டு விடுமாதலால், நேருக்கு நின்று உபசரிக்காமல், சிரிப்புக்கும் களிப்புக்கும் இடம் தந்துவிடாமல் எச்சரிக்கை கொண்டு விடுவாள் தலைவி. இப்படிப்பட்ட ஒற்றைப் பூணூல்காரனை அவள் நேர் நின்று உண்டிக் கழைக்கமாட்டாள். உள்ளே போய் இலையைப்போட்டு, அதில் படைக்க வேண்டியவைகளைப் படைத்தபின், வெளியே வந்து கதவோரத்தில் நின்று, ''இலைபோட்டிருக்கிறது! சாப்பிடுங்கள்!'' என்று அழைப்பாள். பிரமச்சாரி உள்ளே போவான். இலைமுன் அமர்வான். விருந்தளிக்கும் பெண் அவன் முன்னே நிற்கமாட்டாள். அதனுல் சிரிப்புக்கும், களிப்புக்கும், கண் குளுமைக்கும் அங்கே இடமில்லை. விபரீதம் தலைகாட்டாவோ, பருவக்கோளாறுகள் சேஷ்டை புரியவோ இடம் தராத நிலையில் விருந்தோம்பல் வெற்றிகரமாக நடைபெற்று விடும்!

விருந்தாளியின் உடம்பிலே இரட்டை வடம் நூல் காணப்பட்டால் அவன் மணம் ஆனவன் என்பது அர்த்தம். அதாவது குடும்ப சுகத்தைச் சுவைத்து விட்டான் என்ற சூசக அறிவிப்பு. தங்கைக்கும் தாரத்திற்கும் வித்யாசம் பார்க்கும் பண்புடையவன் என்பதைச் சுட்டிக்காட்டும். அப்படிப்பட்டவனை உபசரிக்கும்போது தீயவை தலைதூக்காது என்ற நம்பிக்கை கொள்ளலாம். அதனுல் தனக்கு மூத்த சகோதரனுக அவனைப் பாவித்து, ஒரு பெண் தன் சகோதரனுக்கு எப்படி ஒரு உபசரிப்பைத் தருவாளோ, அதே போன்று நடந்து கொள்வாள் வந்த விருந்தாளியிடம்.

அதிதியின் உடம்பிலே காணப்படும் மூன்று வடம் நூல் அவன் மணமாகி மனைவியை இழந்து, மறுமண விருப்பமற்று விட்ட ஒரு முதியோன் என்பதைக் காட்டி விடுகிறது. அத்தகையவனை தனக்குத் தந்தையென பாவித்து பெண்கள் நடந்து கொள்ள ஒரு வரம்பைக் காட்டி வந்தது.

இவ்வளவு நுண்ணறிவோடு பூணூல் தரிக்கும் ஒரு வழக்கத்தை ஏற்படுத்தி வைத்திருக்கும் நம் முன்னோர்கள் எந்த விதத்தில் இக்காலத்தவர்களுக்கு இளைத்தவர்களாக இருக்க முடியும்?

முன்னோர்கள் அனுஷ்டித்துவந்த ஒரு மூடப்பழக்கத்திற்கு இது ஒரு சப்பைக் கட்டான சமாதானம் என்று முணுமுணுப்பவர்கள் இல்லாமல் இல்லை. பூணூல் தரிப்பது பெண்களின் நலம் கருதி ஏற்படுத்தி வைக்கப்பட்ட ஒரு கைங்கர்யமானல், அதை ஆரிய குலத்தவர் மட்டும் அனுஷ்டித்து வருவானேன் என்று குறுக்குக் கேள்வி முளைக்கும்.

பூணூல் தரிக்கும் வழக்கம் ஆரிய இனத்தவரிடையே மட்டும் நிலவியிருக்கவில்லை. செய்தொழிலை அனுசரித்து நான்காகப் பிரிக்கப்பட்ட மனித குழாத்தில்—மூன்று வகுப்பினர் மட்டுமே ஊர் விட்டு ஊர் செல்லும் அவசியத்தோடு இருந்தார்கள். பிராமணர்கள் க்ஷேத்ராடானத்திலும், வைசியர்கள் வியாபார காரணமாகவும், க்ஷத்திரியர்கள் நாட்டுப் பாதுகாப்பு அலுவல்களிலும் அடிக்கடி வெளியூர் பிரயாணத்தில் ஈடுபட்டிருந்ததால், அந்த மூன்று குலத்தவர்களுமே பூணூல் தரித்து வந்தனர். நான்காவது பிரிவினரான சூத்திரர்கள் பயிர்த்தொழிலில் ஈடுபட்டு சொந்த ஊரைவிட்டு வெளியூர் செல்லாமலே இருந்தால் பூணூல் தரிக்கும் அவசியம் அவர்களிடையே இல்லாமல் போய்விட்டது.

"பூணூல் தரிப்பது அந்த நாளைப் பண்புகளுக்கு தேவையாயிருந்தது. அதை இந்த நாளில் கடைப்பிடிக்க வேண்டிய அவசியமென்ன இருக்கிறது?" என்ற பிரச்னை இதைப் படித்த பிறகு கிளம்பலாம். இன்று அவசியமில்லாதது நாளை அவசியமாக இருக்கலாம்! அதையாரால் அனுமானிக்க முடியும்? ★

## இனமாக....!

பெர்னட்ஷா வெறும் நாவலாசிரியர் மட்டுமல்ல. சின்னஞ்சிறு வாக்கியத்திலும் கற்பனை கலக்காத உண்மையை விளக்குவதில் வல்லவர்.

ஒரு சமயம் அவர் நண்பர் ஒருவர், அவரிடம் ஒரு கேள்வி கேட்டார்.

"கணவன்மார் வீட்டுக்கு வேண்டிய சாமான்களைக் கடையில் வாங்கி வந்தால் என்ன?" இக்கேள்விக்கு பெர்னட்ஷா கொடுத்த பதில் இதுதான்.

"வீட்டில் சண்டையையும் விலை கொடுக்காமல் வாங்கிக் கொள்ளலாம்."

# செயற்கை மழை

செ. ரஷீத்

தீபத்தின் உதவி கொண்டு திருக் குறளும் படிக்கலாம், திருட்டு வேலைகளும் நடத்தலாம். அது போல விஞ்ஞானத்தின் துணை கொண்டு மக்கள் சமூகத்திற்கு தேவையான நன்மைகளும் செய்ய லாம், தீமைகளையும் விளைவிக்க லாம். விஞ்ஞானத்தினல் உலகை அழித்துவிட கங்கணம் கட்டிக் கொண்டவர்களின் முன்பு, விஞ் ஞானத்தை ஆக்கவேலைகளுக்குப் பயன் படுத்த முன் வந்தனர் சில அறிவியல் மேதைகள். அவர்களுள் செயற்கை மழை பெய்விக்கும் முறைகளைக் கண்டு பிடித்த டாக்டர் லாங்மூர், வின் சென்ட்ஷேபர், டாக்டர் வன்னிகட் ஆகியோரும் குறிப்பிடத் தக்கவர் கள். டாக்டர் மூரும், ஷேபரும் உலோகத்தகடுகள் மூடுபனியாலும் மழையாலும் பாதிக்கப்படுவதால் மின் சக்தியும், புயல் வீசும் வெளி யில் சென்று வரும் விமானங்களின் இறக்கைகளில் மின் சக்தியும் ஏன், எப்படி? உண்டாகின்றது என்பதை மின்சார நிலையமொன் றில் ஆராய்ந்து வந்தனர். அதற் கான சோதனைகளிலும் ஈடுபட்ட னர்.

ஒரு நாள் மாலை அவ்விருவரும் பொழுது போக்கிற்காக ஒரு மலை யில் ஏறிக்கொண்டிருக்கும் போது, ஆகாயத்திலிருந்து சிறு, சிறு பனிக் கட்டிகள் விழுவதைக் கண்டனர். நம் நாட்டில் கூட மழை நேரங் களில் இது போன்ற சிறு கட்டிகள் விழுவதைக் காணலாம். இதை ஆலங்கட்டி மழை என்று கூறுவார் கள். இவைகள் மேகங்களிலுள்ள சிறு பனிக்கட்டிகளாகும். வெறுங் காற்றிலுள்ள நீரணுக்கள் பனிக் கட்டிகளாய் மாறிவிழும் போது மேகத்திலே நிறைந்திருக்கும் நீரணுக்களை நாம் பனிக்கட்டி களாக உருவடையச் செய்து விட் டால், அவைகள் வளர்ந்து பெருகி கீழே இறங்கும் போது இங்கிருந்து அடிக்கும் வெப்பக் காற்றால் உருகி ஏன் மழையாகப் பெய்யக்கூடாது என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். ஆராய்ச்சி சாலையில் பலவித சோதனைகளும் செய்து பார்த்தனர்.

1949-ல் தாங்கள் செய்த ஆராய்ச்சிகளையும்சோதனைகளையும் வைத்து டாக்டர் வன்னிகட்டின் துணை கொண்டு, புகைபரப்பி ஒன் றையும் செய்து கொண்டு ஓரிடத் தில் பகிரங்கமாக சோதனை செய் தனர். ஸில்வர் அயோடைட் என்ற ரசாயனப் பொருளை எரித்து அப் புகையை, புகை பரப்பியின் வாயி லாக மேகங்களை அடையச் செய் தனர். அப்புகை மேகங்களில் படிந்து மேகங்களிலுள்ள நீரணுக் களைப் பனிப்படிகங்களாக மாற்றி யது. சில மணி நேரங்கள் சென் றதுதான் தாமதம்! மின் வெட்டு பிரமாதமாய் இருந்தது. மழையோ மழை என மக்கள் கூற, பெரு மளவில் செயற்கை மழையும் பெய்தது! இதனுல் அவ்விடத்தி லுள்ள ஒரு நதியில் மட்டும் சுமார் 3,000,000,000, காலன் தண்ணீர் ஓடியது என்றால் மழையின் தன் மையைப்பற்றி கூறவா வேண்டும்! சோதனையில் வெற்றி கண்டனர். எனினும் இம்முறை அவர்களுக்கு சரியானதாகத் தென்படவில்லை.

சமீபத்தில் சென்னை அரசாங்கம் செயற்கை மழையை உண்டாக்க ஆராய்ந்து வந்ததை நாம் அறி வோம்.

எளிய முறையில், குறைந்த செலவில் சிறந்த பலனை அடைய வேண்டி இடைவிடாது முயற்சித்து வரும் லாங்மூர் குழுவினரின் இந்த ஆராய்ச்சி வெற்றிபெற்றால், இன்றைய பாலைகளும் விரைவில் சோலைகளாகமாறக் கூடும் என் றெதிர் பார்க்கலாம். ★

# மாங்கனி

★ மாங்கனியின் ருசி எத்தகைய இனிமை பொருந்தியதோ, அவ்வளவு சுவை பொருந்தியிருக்கிறது அதனைப்பற்றிய விவரங்களும்.

கே. எஸ். மணியம்

'முக்கனிகள் எவை?' என்று ஒரு சிறுவனிடம் கேளுங்கள். ''மா, பலா, வாழை'' என்று தயங்காமல் பதில் தருவான். இந்த முக்கனிகளில் முதலில் நிற்கக் கூடியது மாங்கனிதான்.

'முப்பழமொடு பாலன்னம்' என்று ஔவை சிறப்பித்துக் கூறும் அளவிற்குப் பெருமை வாய்ந்த மாங்கனி, உலகில் தோன்றி 5000 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டன. ஏழையென்றோ, பணக்காரன் என்றோ பாரபட்சமின்றி எல்லோரும் எளிதில் வாங்கி, ருசிக்கும் கனியாக இருந்து வருகிறது மாங்கனி.

கடுங்கோடை ஆரம்பமாகி விட்டது. உடல் உஷ்ணத்தால் வெந்து போகிறது. இந்தக் கோடையைச் சற்றும் பொருட்படுத்தாமல் கூடை கூடையாகப் பழங்களைச் சுமந்து செல்லும் மாம்பழ வியாபாரிகளை இந்த 'ஸீஸனி'ல்தான் பார்க்க முடியும்.

'மாம்பழம் இயற்கையிலேயே உஷ்ணம் வாய்ந்தது. அளவுமீறி சாப்பிட்டால் உடல் உஷ்ணத்தை அதிகமாக்கி விடும்' என்று நாம் நம்பி வருகிறோம். உண்மையில் அதன் தன்மை மாறாக அமைந்திருக்கிறது. சூரிய ஒளிக்கதிரால் சம்பவிக்கும் 'ஸன் ஸ்ட்ரோக்' என்னும் திடீர் மரணத்திற்கு, மாங்கனி சிறந்த மருந்தாகக் கருதப்படுகிறது.

மயங்கி விழுந்தவன் வாயில் கொஞ்சம் மாம்பழ ரஸத்தைப் பிழிந்தால் இத்தகைய மயக்கம் தீர்ந்து விடுமாம்!

இந்தியப் பழவர்க்கங்களில் மாம்பழம் தனிச் சிறப்பு வாய்ந்தது. சித்திரை பிறந்தவுடனேயே மாம்பழ வியாபாரம் தொடங்கி விடுகிறது. புது வருஷம் ஆரம்பமாகும் போதே மாம்பழ மணம் வீச ஆரம்பித்தால், குறைந்தது ஆறு மாத காலங்களுக்குக் குறைவின்றி இந்திய நகரங்களில் இதன் மணம் கமழ்ந்து கொண்டே இருக்கும். இமாலயச் சரிவிலும் மாங்கனி விளைகிறது!

'நீலம்' எனப்படும் வகை மாம்பழம் நிறத்தில் மஞ்சளாகத்தானிருக்கும். ஆனால், அதன் பெயர் நீலம். இதன் விலை சரசம்தான்; சுவையும் மிக இனிமையாயிருக்கும். மாம்பழ வகையில் நூறுக்கும் மேற்பட்ட வர்க்கங்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். சிந்தூரி, அல்போன்ஸா, தோட்புரி, நடிச்சேலை, பங்கனபல்லி, மல்கோவா, கோலா, குண்டுமாம்பழம் இவை நமக்கு நன்கு அறிமுகமானவை. இவை ஒவ்வொன்றும் ருசியில் ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக் கொண்டு நிற்பவை.

மாமரம் பூக்க ஆரம்பித்து, காய் காய்த்து, பழம் பழுக்கும் வரை அதன் சொந்தக்காரரைக் காட்டிலும் அதனிடம் பூர்ண வாஞ்சையுள்ள ஜீவன் கருங்குயில்! மாமரத்துக் குயிலைப் பற்றி நாம் அதிகமாக ஒன்றும் தெரிந்து கொள்ள முடியாது. ஒரு கவிஞன் கண்ணில் இந்தக் குயில் பட்டுவிட்டால் 'மாமரத்துக் குயிலை'ப் பற்றி வாய் கொள்ளாமல் வர்ணிக்க ஆரம்பித்து விடுவான்! தென்னிந்திய மலைச்சாரல்களிலும், உத்தரப்பிரதேஷ் பிராந்தியத்திலும் மாமரம் ஏராளமாக வளர்கின்றது.

பழங்களில் சிறந்த மாங்கனிக்கு ராஜயோகம் பிறந்தது என்பதை அவசியம் குறிப்பிட வேண்டும். இந்தியாவை ஆண்ட மொகலாய மன்னர்கள் மாங்கனியின் மீது கொண்ட மோகத்திற்கு அளவில்லை. அக்கனி வர்க்கத்தை விருத்தி செய்ய அவர்கள் அரசாங்க ஏற்பாடுகளைச் செய்தனர். ஒரு வேளை வனமஹோத்ஸவம் கொண்டாடி சிறப்பித்திருக்கலாம்!

மொகலாய மன்னர்களின் ஆதரவைப் பெற்ற மாங்கனிகளுக்கு அம்மன்னர்களின் பெயரும், பேகங்களின் பெயரும் வழங்கி வருவதை இன்றும் நாம் கேட்டு வருகிறோம். அவைகளில் ஜஹங்கீர், நூர்ஜஹான், அஸருபஸாவர் போன்றவை சிறப்பு வாய்ந்தவை. மாங்கனி கிடைக்காத ஆப்கானிஸ்தானம், இராக், இரான் தேசங்களில் வசிக்கும் செல்வந்தர்கள், பனிக்கட்டியில் வைத்து கெடாத வகையில் பாதுகாத்து, இந்த அற்புதக் கனியை ருசித்து வருகிறார்கள் என்றால் இதன் சிறப்பை இன்னும் எவ்வாறு வர்ணிப்பது?

மாங்கனியின் ரஸம் ருசிமிக்க பானம். இக்கனி பழுக்குமுன் காயாக உள்ள நிலையில் ஊறுகாய்க்குப்பயன்படுகிறது. மாவிலை, விசேஷ காலங்களில் தோரணங்களாகப் பயன்படுகிறது. மாமரப் பலகை உறுதித்தன்மை வாய்ந்ததால் மரச்சாமான்களுக்கு ஏற்றது.

மாமரம் பலன் தருவதற்கு நாளானாலும், பயிர் செய்து விட்டால் பலன் நிச்சயம். தெனாலிராமன், மொகலாய மன்னர் பாபரிடம் நடத்திய சம்பாஷணை இங்கு நம் நினைவுக்கு வருகிறதல்லவா?

''...நம் தலைமுறையில் மாங்கனி கிடைக்குமா?''

''கிழவா...நீ மாங்கன்று நட்டால் அது பலன் தருவதற்குள் இறந்து விடுவாயே!'' என்று மாறுவேடத்திலிருந்த ராமனிடம் கேட்டார் மொகலாய மன்னர் பாபர். ''ஜஹன்பானா...நம் முன்னோர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் நட்டதை தங்களால் அனுபவிக்க இயலாதே என்று சுயநலங்கொண்டு, மாங்கன்றுகள் பயிர் செய்யாமல் இருந்தால், நம் தலைமுறையில் நாம் மாங்கனியைச் சுவைக்க முடியுமா?'' என்று சாதுர்யமாகக் கேட்டு, பரிசு பெற்றான் தெனாலிராமன்.

கடும் வெயிலில் அலைந்து செல்லும் வழிப் போக்கனுக்குத்தான் மாமர நிழலின் அருமை இன்னதென்று தெரியும்.

மாங்கனியை நறுக்கி உண்பதையே நாசூக்கென நம்புகிறோம் நாம். முழுப்பழத்தையும் கடித்து ருசிக்கும் தன்மையை சின்னஞ் சிறு குழந்தைகள் கூட ரஸிக்கிறார்கள் என்பதை நாம் மறுப்பதில் அர்த்தமில்லை.

ருசிமிக்கஒட்டுமாங்கனி, மாம்பழ வர்க்கத்தில் மிக ருசியானது. புளிப்பானவகையைச் சேர்ந்த மாஞ்செடியின் ஒரு கொழு கொம்பை, சுவைமிகுந்த கனி வளரும் செடியின் கொம்புடன் வளர்ச்சிகெடாதபடி வெட்டி, ஒட்டி பயிர் செய்தால், 'பூவுடன் சேர்ந்து நாறும் மணம் பெற்றது' என்பதைப்போல் புளிப்புத் தன்மையுள்ள கொம்பு தழைக்க ஆரம்பித்து, இனிமையான சுவையுடைய பழங்களை உண்டாக்கும் தன்மை பெற்றுவிடும்.

மாம்பழம் எவ்வாறு இந்தியாவில் தோன்றிற்று என்பதற்கு

இதிகாசத்திலிருந்து ஓர் உதாரணம்.

இலங்கையில் விருந்து உண்ட அநுமன், மாங்கனியின் ருசியைக் கண்டு பாரத கண்டத்தில் இக்கனி வளரவேண்டும் என்ற விருப்பத்தில், அதன் கொட்டையை வீசி எறிந்தாராம். இலங்கையிலிருந்து இங்கு வந்து விழுந்த கொட்டை பாரதத்தின் செழுமையால் ஏராளமாகவளர ஆரம்பித்ததாம்!

சரித்திர ஆராய்ச்சியாளர்கள், மாம்பழம் இந்தோ—பர்மா பிராந்தியத்திலிருந்து முதன் முதலாக வந்ததாகக் கூறுகின்றனர்.

தென் கிழக்கு ஆசியா, தென் கிழக்கு ஆப்பிரிக்கா, மத்திய தென் அமெரிக்காவிலும் ஹவாய்த்தீவிலும் இக்கனி சிறந்த வியாபாரப் பொருளாக இருந்துவருகிறது.

மாங்கனியின் தோல், சத்து நிறைந்தது. 80 சதவிகித சத்து மாங்கனியின் சதையை விட,த் தோலில்தான் இருக்கிறது. வைடமின் A, B, C மூன்றும் நிறைந்த உணவுப் பொருள் மாங்கனி.

மலையாளப் பிரதேசம் கனி வர்க்கங்களுக்குச் சிறப்புவாய்ந்ததால், மாங்கனிக்கும் சிறப்பு பெற்ற பிரதேசமாகும்.

இந்தியாவின் பிரதான பழச் செல்வம் மாங்கனிதான். பழங்கள் பயிரிடப்படும் மொத்த நிலங்களில் 2/3 பாகத்தில் மாமரமே பயிரிடப்படுகிறது.

தமிழ்ப்புது வருஷப் பிறப்பன்று சித்திரைக் கனி கொண்டாடுபவர்கள், மாங்கனிக்குவிசேஷ ஸ்தானம் கொடுத்திருக்கின்றனர்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த கனியைக்கண்டு, பாரதியார் கூறுகிறார்:

''மாம்பழ வாயினிலே-குழலிசை
வன்மை புகுத்திடுவோம்''

மாம்பழவாய்; உருவில் மட்டுமல்ல; பேச்சிலும் இனிமை பொருந்தியது என்பதையே பாரதி வர்ணித்துள்ளார். ★

## இன்சுவைச் சொற்கள்

அழகிய எதிலும் ஆசை கொள்வது உயிர்களுக்கெல்லாம் பிறப்பின் உரிமை.
—நாமக்கல் கவிஞர்.

வாழ்க்கையிலிருந்து மரணம்வரை, மனோதிடத்தோடு வாழப்பிறந்த மகோன்னத சித்திரம் இந்தப் பெண் வடிவம்.
—வேர்ட்ஸ்வொர்த்.

மனிதனின் பாவச்செயல்களை வெங்கலத்தில் செதுக்குகிறோம்; புண்ணியத்தை தண்ணீரில் கரைக்கிறோம்.
—ஷேக்ஸ்பியர்.

உயர்ந்த உண்மை மலர்வது ஆழ்ந்த அன்பிலேயே.
—ஹீன்.

அந்தி வானத்தைவிட அழகானதும், அழியக்கூடியதும் உலகில் ஒன்று உண்டானால் அது பெண்ணின் இனிய முகம் தான்.
—யாரோ.

சன்மார்க்கத்தின் முதல் கொள்கை என்ன என்பது தெரியுமா? உண்மையைப் பேசுவதும், உண்மையைச் சிந்திப்பதும், உண்மையை செயலில் காட்டுவதுமேயாகும். உண்மையினாலும், அன்பினாலும் உலகத்தையே நாம் வென்று விடலாம் என்பது என் திடமான நம்பிக்கை.
—மகாத்மா காந்தி.

அனுப்பியவர்: பி. சுப்புரேயலு

# பழமொழிகள்

"புதுமைவாணன்"

மனிதனுடைய நீண்ட அனுபவத்தின் சுருங்கிய வார்த்தைகள் பழமொழிகள். உலக வாழ்க்கையில் மனிதன் பலவிதத்திலும் கண்டறிந்த உண்மைகளே பழமொழிகள்.

அவை உண்மை மொழிகளாக இருப்பதால்தான், நீண்ட காலம் நிலைத்திருக்கின்றன. அப்படி நெடுங்காலம் நிலைத்து வந்ததால் தான், அவை பழமொழிகள் என்று அழைக்கப்படுகின்றன.

ஒருவன் தான் கண்ட உண்மைகளைப் புத்தகத்தில் எழுதுவது போல, மனித சமூகம் தனது அனுபவ உண்மைகளைப் பழமொழி வாயிலாக வெளியிடுகின்றது.

புத்தக அறிவு படித்தவரிடம் மட்டும் பரவியிருக்கும்; பழமொழியோ படித்தவர், படியாதவர் என்ற வேறுபாடில்லாமல் சமூகம் முழுவதும் பரவியிருக்கும். புத்தகத்தை விடப் பழமொழி சமூகத்தில் அதிகச் செல்வாக்குடன் நிலைத்து நிற்பதன் காரணம் இதுவே.

ஒரு சமூகத்தின் அனுபவம், கலை, நாகரிகம், மனப்பான்மை, புத்திகூர்மை இவற்றையறிந்து கொள்வதற்குள்ள முக்கியமான சாதனங்களில், பழமொழியும் ஒன்று.

> 'மனிதன் வாழ்ந்த காலத்தையும், வாழும் காலத்தையும் விளக்கிக் காட்டும் கண்ணுடி, பழமொழிகள்' என்கிருர் ஆங்கில மேதை ஷா. அந்தஉண்மையை இக் கட்டுரையும் விளக்குகிறது.

உலகத்தின் இயற்கை நிகழ்ச்சிகளைப் பொருத்தவரையில் எங்கும் மனிதனுடைய அனுபவம் ஒரே மாதிரிதான். ஆனுல், அந்த தேசத்துப் பழக்க வழக்கம், சரித்திரம், மொழி, கலை இவற்றைப் பொருத்து மனிதனுடைய அனுபவம் இடத்துக்கு இடம் கொஞ்சம் வித்தியாசப் படுகிறது. மனிதனுடைய அனுபவம் ஒரே மாதிரியாயுள்ள விஷயங்களில் பலதேசத்துப் பழமொழிகளும் உணர்த்துகிற உண்மைகள் ஒரே மாதிரி இருந்து வருகின்றன. பழக்கவழக்கத்தைப் பொருத்து அனுபவம் வித்தியாசப்படும் போதுதான், பழமொழியும் தேசத்துக்குத் தேசம் வித்தியாசப் படுகிறது. இப்படி வித்தியாசப்படும் இடங்கள் மிகவும் குறைவு.

நாகரிக மடைந்த எல்லாச் சமூகத்திலும் பழமொழிகள் நெடுங்காலமாகத் தோன்றி வளர்ந்திருக்கின்றன. மனிதன் புத்தகம் எழுதக் கற்றுக் கொள்வதற்கு முன்பே பழமொழிகள் தோன்றி விட்டன.

மனிதனுடைய மனேசக்தி படிப்படியாக வளர்ந்து வந்திருக்கிறது. ஒன்றைக் கூர்ந்து கவனிப்பதும், அனுபவத்தை அறிவாக மாற்றுவதும், சிந்தனு சக்தியும், ஞாபக சக்தியும் அதிகப்பட்ட காலத்தில் தான் சமூகத்தில் பழமொழிகள் உண்டாயின. சுருக்கமாகச் சொன்னுல் சரித்திர காலத்துக்கு முன்னுலேயே பழமொழிகள் தோன்றிவிட்டன.

பழமொழியின் லட்சணங்கள் சில உண்டு. அது அனுபவ உண்மையை உணர்த்த வேண்டும்; சொன்னுல் சட்டென்று மனதில் பதியும்படி இருக்க வேண்டும்.

எல்லோருக்கும் எளிதாகவும் இருக்க வேண்டும். பழமொழிகள் எல்லாம் பெரும்பாலும் இப்படித் தான் இருக்கின்றன.

மேலை நாடுகளிலே, அந்தந்த நாட்டுப் பழமொழிகள் எல்லாவற்றையும் சேர்த்துத் தொகுத்துப் புத்தகங்கள் ஏராளமாக வந்திருக்கின்றன. எல்லாப் பழமொழிகளையும் தொகுத்து, திருத்தி, வகைப்படுத்தி, விளங்காத பழமொழிக்கு விளக்கம் எழுதச் சாதாரணமாகவும், அகராதி வரிசையிலும் பல புத்தகங்கள் வெளியாகியிருக்கின்றன. அது மட்டுமல்லாமல் வேறு நாடுகளில் வழங்கும் பழமொழிகளையும் மொழி பெயர்த்தும் வெளியீடுகள் வந்திருக்கின்றன. ஒரு தேசத்துப் பழமொழியோடு இன்னொரு தேசத்துப் பழமொழியை ஒப்பிட்டுப் பார்க்க இது சிறந்த சாதனம்.

தமிழில் அப்படிப் பழமொழிகள் புத்தகமாக வெளி வந்திருக்கிறதா, இல்லையா என்றால் தமிழ்ப் படித்தவர்களுக்கே பலபேருக்கு இது தடுமாற்றமான கேள்வியாகிவிடும். தமிழ் சிற்சில துறைகளில் பிற்பட்டு நிற்பது போல, இதிலும் பிற்பட்டுத்தான் நிற்கிறது. புத்தகங்கள் அதிகமாக வெளிவரும் இக்காலத்தில், இக்குறை விரைவில் தீக்கப்பட வேண்டும். தமிழில் பழமொழிகள் சம்பந்தமான புத்தகங்கள் ஒரேயடியாக இல்லையென்று ஆகிவிடவில்லை. இரண்டொரு சிறந்த புத்தகங்களும் இருக்கத்தான் செய்கின்றன. காலஞ்சென்ற டி. அனவரத விநாயகம் பிள்ளையவர்கள் நாற்றுக்கணக்கான தமிழ்ப் பழமொழிகளை ஒன்றாகத் திரட்டி, அகராதி வரிசையில் பல ஆண்டுகளுக்கு முன்பு வெளியிட்டார். இப்பொழுது அப்புத்தகம் கிடைப்பது அரிது. இன்னும் இரண்டொரு பழமொழித் தொகுப்பு நூல்கள் வெளி வந்திருக்கின்றன. இதற்குப் பின் வேறு நூல்கள் எதுவுமே இத்துறை சம்பந்தமாக எழுதப்படவில்லை. ஆனால், அச்சு இயந்திரம் வருவதற்கு முன்பு தோன்றிய தமிழ்ப் பழ

பனைமரத்தடியில்...
பால் குடித்தாலும்...

மொழி நூல்களைப் பற்றிக் கொஞ்சம் கவனிப்போம்.

பழமொழி என்பதன் இலக்கணம் இன்னது என்று தொல் காப்பியத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. ‘நுட்பமும், சுருக்கமும், எளிமையுமுடையதாய் ஒரு சிறந்த உண்மையை விளக்க வருவது பழமொழி’ என்று தொல்காப்பிய இலக்கணம் கூறுகின்றது. தமிழ்ப் பழமொழிகளின் பழமையை அறிவதற்குத் தொல்காப்பியத்தில் விரிவாகக் காணப்படும் நுட்பமான பழமொழி இலக்கணமே ஒரு பெரிய சான்று.

“பல்லோர் கூறிய பழமொழி யெல்லாம் தோழி! இன்றைக்கு உண்மையாகி விட்டதே!” என்று சில பழமொழிகளைக் காதலி ஒருத்தி, தன் தோழிக்கு எடுத்துரைப்பதாக அகநானூற்றில் அழகாக ஒரு பாட்டு அமைந்திருக்கிறது. அந்தக் காலத்துக்கு முன்பு வழங்கிய முக்கியமான நானூறு பழமொழிகளை எடுத்து, அவற்றின் நீதிகளையும், உண்மைகளையும் விளக்கி, நானூறு

செய்யுட்கள் எழுதினார் ஒருகடைச் சங்கப் புலவர். அந்த நூலுக்குப் 'பழமொழி நானூறு' என்பது பெயர்.

காவியங்களிலும் கவிதைகளிலும் பழமொழிகளை ஆங்காங்கு காணலாம். சென்ற 400 ஆண்டுகளுக்குள் உலக நீதிகளையும், தருமங்களையும் விளக்கிச் 'சதகம்' என்ற பெயரால் பல சிறு நூல்களைப் புலவர்கள் எழுதினார்கள். அவைகளில் 'கோவிந்த சதகம்', 'தண்டலையார் சதகம்' என்பவை முக்கியமானவை. 'தண்டலையார் சதக'த் திலிருந்து உதாரணமாக ஒரு அடியைப் படிப்போம்.

''அரைக் காசுக்குப் போனதொரு
மானம்—பின் ஆயிரம் பொன்
கொடுத்திடினும் திரும்பிடாதே''

இன்னொன்று,
''பனையின் கீழ்
ஆவின் பால்
பருகிடினும் பள்
ளென்பார்
தள்ளென்பார்
கள்ளென்பாரே''

'பனை மரத்தின் அடியிலிருந்து, நீ குடிப்பது உண்மையில் பசும் பாலேயானாலும், கண்டதும் உடனே யாரும் கள்ளென்றுதான் சொல்வார்கள். இடத்தைப் பொருத்து நல்லதும் கெட்டதாகவே நினைக்கப்படும். இது உலகத்தின் விபரீதம்' என்பது இதன் கருத்து.

'குருவி தலையில் பனம்பழம்'

ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வெற்றி வேற்கை முதலான சின்னஞ் சிறு நூல்களில், 'அறஞ் செய விரும்பு,' 'இளமையிற் கல்,' 'ஊக்கமது கைவிடேல்,' 'ஊருடன் கூடிவாழ்,' 'பாலோடாயினும் காலமறிந்துண்,' ''சூதும்வாதும்வேதனை செய்யும்' என்றெல்லாம் வரும் நீதிகள் பழமொழிகளைப்போலவே அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு வரியிலும் சிறந்த நீதிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. நீதிக்கும் பழமொழிக்கும் வேறுபாடு உண்டு. சில இடங்களில் இரண்டும் ஒரே மாதிரி அமைந்திருப்பதுமுண்டு.

இனி பழமொழியின் சில இயல்புகளைப் பார்ப்போம்.

''நாயைக் கண்டால் கல்லைக் காணோம், கல்லைக் கண்டால் நாயைக் காணோம்'' என்று ஒரு பழமொழி சர்வ சாதாரணமாய் வழங்கி வருகிறது. இந்தப் பழமொழி இப்பொழுது உண்டானது போலவும் பேச்சு வழக்கில் இருப்பதாகவும் காணப்படுகிறது. ஆனால் இது உண்மையில் 1800 ஆண்டுகளுக்கு முன்பே வழக்கத்தில் இருந்திருக்கிறது என்றால் பலருக்கு வியப்பாக இருக்கும். '' கற் கண்டால் நாய் காணா வாறு '' என்று பழைய 'பழமொழி நானூறு' என்ற அந்தக் காலத்து நூலில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. இம்மாதிரியில் பல பழமொழிகள் உள்ளன.

சில பழமொழிகள் அக்காலத்து நாகரிகங்களை விளக்க உதவுகின்றன. ''தனக்கில்லாத அழகு தண்ணீர்ப் பானையைப் பார்த்தால் தீருமா?''—என்பது ஒரு பழமொழி. கண்ணாடி அதிகமாகப் பரவாத காலத்தில் பொதுமக்கள் தண்ணீர் நிழலிலே தமது உருவத்தைப் பார்ப்பதுண்டு. இந்த வழக்கம் இந்தப் பழமொழியில் வெளிப்படுகிறது.

''கடன்காரனை வதைத்த கழுவுண்டா?''—என்ற பழமொழி கடன் வாங்கி, அதைக் கொடுக்கத் தவறியவனையே கழுவிலேற்றும் பழைய வழக்கத்தைக் காட்டுகிறது.

'சிம்ம சொப்பனங் கண்டது போல; ஓடினவருக்கு ஒன்பதாம் இடத்தில் குரு'—என்ற பழமொழிகள் சகுனத்தையும், சோதிடத்தை

யும் அடிப்படையாகக் கொண்டு பிறந்தவை.

'காக்கை உட்காரப் பனம் பழம் விழுந்தது போல', 'புகையிருந்தால் நெருப்பிருக்கும்'—என்பவை சில தர்க்க நியாயங்களை விளக்குவதற்காக வந்த பழமொழிகள்.

'ஆதாய மில்லாத செட்டி ஆற்றோடு போவானா?', 'சோழியன் குடுமி சும்மா ஆடுமா?' என்ற பழமொழிகள் சிலவகுப்பாருடைய மனோபாவத்தை அடிப்படையாகக் கொண்டு தோன்றியவை.

'திரை கடலோடியும் திரவியம் தேடு', 'ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு', 'பலதுளி பெரு வெள்ளம்', 'சிறு துரும்பும் கலந்தேக்கும்', 'கப்பல் கவிழ்ந்தாலும் கன்னத்தில் கை வைக்காதே' 'பூ விற்ற காசு மணக்குமா? புலால் விற்ற காசு நாறுமா?' என்ற பழமொழிகள் எல்லாம் தமிழருடைய வியாபார குணத்தையும், சிக்கனத்தையும் காட்டுகின்றன.

இவ்வாறு வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தைப் பற்றியும் ஏராளமான பழமொழிகள் தமிழில் இருக்கின்றன. ஒவ்வொன்றைப் பற்றியும் விளக்கஞ் சொல்லிக் கொண்டே போனால் ஒரு பெரிய நூலாகிவிடும். ஆகையால், பொதுவாகச் சில பழமொழிகளைப் பார்ப்போம். அவையெல்லாம் எவ்வளவு நுட்பமாகவும், பழக்கத்தோடும் அனுபவத்தோடு ஒட்டியனவையாகவும் இருக்கின்றன என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

''உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?''
''கோழி மிதித்துக் குஞ்சு முடமாகுமா?''
''சொல்லிக் கொடுத்த சொல்லும் கட்டிக் கொடுத்த சோறும் எவ்வளவிற்கு நிற்கும்?''
''மின்னுவ தெல்லாம் பொன்னல்ல!''
''மோகம் முப்பது நாள் ஆசை அறுபது நாள்''
''குறையச்சொல்லி நிறைய அள''
''கப்பலோட்டிய வாழ்வு காற்றடித்தால் போச்சு''
''முள்ளை முள்கொண்டே எடு''
''ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?''
''தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்''
''இல்லாது பிறவாது, அள்ளாது குறையாது''
''குருவி தலையில் பனம்பழம் வைத்தது போல''
''ஆயிரங் காக்கைக்கு ஒரே கல்''
''வருந்தாதார் வாழ்க்கை திருந்துவதில்லை''
''கற்றலில் கேட்டலே நன்று''
''எலும்பில்லாத நாக்கு எப்படி வேண்டுமானாலும் பேசும்''
''கரும்பு கட்டுடனிருந்தால் எறும்புதானே வரும்''
''கூழுக்கும ஆசை, மீசைக்கும் ஆசை''

இவ்வாறு தமிழில் ஏராளமான பழமொழிகள் இருக்கின்றன. இவையெல்லாம் நெடுங்காலமாக வழங்கிவரும் பழமொழிகள். சில பழமொழிகள் நாளடைவில் வழக்கத்திலிருந்து மறைந்துவிட்டன. அவை மிக மிகச் சொற்பமானவைதான். ஆனால், புதிது புதிதாக உண்டான பழமொழிகள் ஏராளம்; காலத்துக்குக் காலம், அவ்வக் காலத்துப் பழக்கவழக்கங்களையொட்டிப் புதுப் பழமொழிகள் மேலும் மேலும் வளரக் கூடியவை. அவை இன்னும் நாளடைவில் பெருகிக் கொண்டே போகும்.

பழமொழிகளைக் கிராமத்தார் பேச்சில் தான் அதிகமாகக் காணலாம். அதிலும் பெண்களிடத்தில், இன்னும் வயதானவரிடத்தில் அவை அதிகமாகவழங்குகின்றன. ஒரு பெரிய செய்தியை ஒருவருக்கொருவர் பழமொழி மூலமாகவே பேசித்தீர்த்து விடுவார்கள். ஒருவருக்கொருவர் குத்தலாகப் பேசும் சண்டை, தகராறுகள் கூடப் பழமொழிகள் மூலமாக நடந்து விடுவதும் உண்டு. நீதி, நியாயம், சம்பிரதாயம் ஆகியவற்றை அதிகம் பேசும் ஒருவனை, ''அவன் பழமொழிபடித்தவன், அவன் அப்படித்தான் பேசுவான்'' என்று சொல்வதைப் பலர் கேட்டிருக்கலாம். பழமொழிப்படிப்பு சிந்தனைக்கு விருந்து என்று இதிலிருந்து தெரிகிறதல்லவா? ★

# உப்புச் செல்வம்

அப்துல் வஹ்ஹாப்

அமுதுக்கினிமை செய்வது தகுதியாகக் கலந்து கூட்டிய தித்திப்பு, புளிப்பு, உவர்ப்பு, கசப்பு துவர்ப்பு, உறைப்பு எனப்படும் அறுசுவைகளாகும். இதில் எந்தச் சுவையை விட்டுக் கொடுத்தாலும், உவர்ப்பென்னும், உப்புச் சுவையைத் தள்ளி விட்டு உணவு படைக்க முடியுமா? உப்பைச் சில நாட்கள் தள்ளவேண்டியது என்று வந்து விட்டால், ''மனுஷனுக்குக் கடுமையான நோய், உப்பில்லாப் பத்தியம்'' என்ருகி விடுகிறது.

இந்த உப்பு நம் உணவில் கலப்பதோடு மட்டுமல்லாமல், நம் வாழ்விலும் ஒன்றறக் கலந்துவிடுகிறது. முதலில் நன்றியுணர்வை எடுத்துக் கொள்வோம். அதற்கும் உப்புக்கும் எவ்வளவு நெருங்கிய தொடர்பிருக்கிறது தெரியுமா? 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்று ஒரே வரியில் நன்றியுணர்வு சிறப்பிக்கப்படுகிறது.

நெடுநாள் நம்மிடம் ஊழியம் செய்யும் வேலையாளை சந்தேகப்பட்டு அதட்டினல் போதும்; உடனே, ''நான் உங்க உப்பைத் திங்கல்லியா? உங்களுக்கு மோசம் பண்ணுவேனு?'' என்று அழுது கண்ணீரை (அதுவும் உப்புக் கரிப்பது தான்!) உகுத்து விடுகிருன். இங்கு மனிதனின் நாணயத்தை நிலை நிறுத்த உப்புத்தான் வரவேண்டியிருக்கிறது.

நன்மான உணர்ச்சியை வலியுறுத்தவும் உப்பு உபயோகப்படுகிறது என்று சொல்லலாம். ஏன் தெரியுமா? கடன் வாங்கிக் கொண்டு அதைத் திருப்பித்தராமல் வெகுநாள் 'டிமிக்கி' கொடுப்பவனைக் கண்டதும், ''நீ சோத்திலே உப்புப் போட்டுத் திங்கிறீயா இல்லையா?'' என்று தானே கேட்கிருேம்.

இப்படி நல்லுணர்வுகளுக்கெல்லாம் உரம் தரும் உப்பின் உயர்வு சரிவர உணரப்படவில்லை என்றுதான் சொல்லவேண்டும். இவ்வுயர்வை உணர்ந்திருந்தால், ''ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும்'' என்று செஞ்ஞாயிறின் சிறப்பைப் பாடிய இளங்கோவடிகள் எங்காவது, ''உப்பை உயர்த்துதும், உப்பை உயர்த்துதும்'' என்று ஒரு தடவையாவது உவந்து கூறியிருக்கமாட்டாரா?

ஆனல், கூழுக்குப்பாடிய ஒளவை மட்டும் உப்பை மறக்கவில்லை:

''ஒப்புடன் முகமலர்ந்து
உபசரித்துண்மை பேசி
உப்பில்லாக் கூழிட்டாலும்
உண்பதே அமிர்தமாகும்.........''

என்று விருந்தோம்பலை சாதாரண உப்பைக் கொண்டே சிறப்பித்து விட்டாள் ஒளவைப் பாட்டி.

''மோப்பக் குழையும் அனிச்சம்
முகந்திரிந்து நோக்கக் குழையும்
விருந்து''

'மோந்துபார்த்தாலே வாடிவிடும் அனிச்ச மலரைப் போல, சிறிது முகம் கடுத்து நோக்கிவிட்டால் விருந்தினர் வதங்கி விடுவர்' என்று வள்ளுவரைப் போன்று நாம் காணுத அனிச்ச மலரை ஒளவை கவிதைக்குப் பயன் படுத்தவில்லை அல்லவா?

உப்புச் செல்வம் – யாவருக்கும் பொதுச்செல்வம் அன்ருே? உப்பில்லாப் பண்டத்தை ஏழையின் நாக்கும் வெறுக்கிறது - செல்வந்தரின் நாக்கும் சுவைக்க மறுக்கிறது.

ஔவையைப் போலவே சாதாரண மனிதனும் தான் பேசுவதை சூசகமாகவோ, மறைமுகமாகவோ, சுற்றி வளைத்தோ சொல்ல மாட்டான். ஆகவே தான் உப்பின் சிறப்பை ஒரே அடியில், ஒரே வரியில், ''உப்பில்லாப் பண்டம் குப்பையிலே'' என்று உறுதிப் படுத்தி விட்டான்.

சமுதாயப் பிரிவினையையும் உப்பைவைத்தே பாகுபாடு செய்து விட்டார் ஒரு கவிஞர். செல்வன், ஏழை; முதலாளி, பாட்டாளி; இருப்பவன்; இல்லாதவன் என்ற பொருளாதார அடிப்படையில் சமுதாயத்தைப் பார்க்கும் நிபுணர்களைவிட, சாதாரண மக்கள் அதே பாகுபாட்டை, ''பசி ஏப்பக்காரன்; புளிச்சேப் பக்காரன்'' என்று தெளிவுபடுத்துகிறார்கள். அதையே கவிதையில், ''கூழுக்கு உப்பில்லை என்பாரும், பாலுக்குச் சர்க்கரை இல்லை என்பாரும்'' என்று மக்களை இரு கூறாகப் பிரித்து விட்டார் அக் கவிஞர். இப்படி உப்பு, புளி, மிளகாய்ப் பிரச்னையை பொருளாதார அடிப்படையாக்கிய கவிஞர், தூர நோக்குப் படைத்தவராகத்தானே இருக்கவேண்டும்! அவர் புகழ் உப்புள்ள காலமெல்லாம் வாழ்க!

நம் வாழ்வில் கலந்து நிற்கும் உப்பு பெண்மையைத் தொடாமல் நிற்குமா? பெண்களின் உள்ளம் கடலைப் போல ஆழமானது என்று சொல்வதுண்டு. கடல் நீரை நினைத்தாலே உப்புக் கரிக்கும். உப்பு, புளி, மிளகாய்ப் பிரச்னையே சதா நம்மிடையே எழுப்பிக் கொண்டிருக்கும்—கடலைப்போன்ற ஆழமான இதயத்தைப் படைத்த—நம் இல்லரசிகள் நம்மை மிரட்டவோ, இளக்கவோ விரும்பும் போது முதலில் பிரயோகிக்கும் ஆயுதம் கண்ணீர். சட்டவிரோதமான கூட்டங்களைக் கலைக்க

'உப்பு போட்டு உண்கிறீரா?'

போலீஸார் உபயோகப் படுத்தும் கண்ணீர்ப் புகையைப் போல நம் வீட்டரசிகளின் கண்ணீர்த் துளியும் நம் கோபத்தையோ, அடத்தையோ கலைக்கிறது. கடல் போன்ற ஆழமான இதயத்தின் திறமையால் வெளிப்படுவதாலோ என்னவோ கண்ணீரும், கடல் நீரைப் போல உப்புக் கரிக்கிறது.

''கூட்டத்திற் கூடி நின்று கூவிப் பிதற்றலன்றி நாட்டத்தில்''—சொன்னதைக் கடைப் பிடிக்காத கூட்டத்தை வன்மையாகக் கண்டிக்கும் பாரதி, நாம் உப்புச் செய்வதற்குக் கூட இயலாமல், வாய்ச் சொல்லில் வீரராக வாழ்கிறோம் என்பதை,

''உப்பென்றும் சீனியென்றும்,
உள் நாட்டுச் சேலையென்றும்,
செப்பித் திரிவாரடீ—கிளியே
செய்வதறியாரடீ.''

என்று துயர்படக் கூறுகிறார். ஆனால், சுதந்திரமாகக் கடலிலிருந்து இந்த உப்பெடுக்கும் உரிமைக்காக உயிர் நீத்த உத்தமத் தியாகிகளை மட்டும் பாரதி விதிவிலக்காக வைத்துக் கொள்கிறார்.

ஔவையிலிருந்து பாரதிவரை கவிதையிலே கையாண்டிருக்கும் இந்த உப்பைப் பற்றி இன்னும் எவ்வளவோ சொல்லலாம், ஆனால், ''என்ன! விஷயம் உப்புச் சப்பில்லாமல் வளர்ந்து கொண்டே போகிறது!'' என்று ஆசிரியர் எண்ணிவிட்டால்............? ★

அஸ்கா சர்க்கரையைவிட, 300 மடங்கு இனிப்பானது 'ஸாக்ரீன்' என்ற சுவைப்பொருள். இதை நிலக்கரியிலிருந்து தயாரிக்கிறார்கள் என்பதை அறிய ஆச்சரியமாயில்லையா?

கே. பாலசுந்தரம்

உலகமெங்கும் சுற்ற வேண்டும், இயற்கை அதிசயங்களைக் கண்டு இன்புற வேண்டும், வெவ்வேறு தேச மக்களின் வாழ்க்கை முறைகளை அறிய வேண்டும் என நம்மில் பலர் ரொம்ப ஆவலாக இருக்கிறோம். வசதி படைத்தவர்கள் சிலருக்குத்தான், இந்த ஆவல் நிறைவேறுகிறது. மற்றவர்களோ, புத்தகங்களைப் படிப்பதன் மூலமே திருப்தி கொள்ள முடியும். தற்காலத்திய நவீன விஞ்ஞான சாதனங்களான டெலிபோன், டெலிவிஷன், ரேடியோ, விமானம், கப்பல் போன்றவைகள் எங்கேயோ இருந்த தேசத்தையும், மக்களையும், நெருங்கி வரச்செய்து விட்டன. நாம் இப்பொழுது அணுயுகத்தில் வாழ்கிறோம் அல்லவா? எங்கேயோ நிகழும் சிறு விஷயங்களால் உண்டாகும் பெரும் எதிரொலிகளை நாம் இங்கே அனுபவிக்கிறோம். பிகினி தீவில் போட்ட அணுகுண்டிற்கு துருக்கியிலும், ரஷ்யாவிலும், கிரீன்லாந்திலும், கனடாவிலும், ஜப்பானிலும்கூட ஏகப்பட்ட கண்டனங்களும், விமர்சனங்களும் பீதியும் கிளம்பி விட்டன. என்ன சௌகர்யத்தோடு, சமாதானமாக நாம் வாழ்ந்தாலும் கூட, நாம் வாழும் உலகத்தில் எங்கேயோ ஏற்படும் ஒரு மாறுதல், நம்மையும் மாற்றி விடுகிறது! இவ்வாறாக தேசங்களுக்கும், அவற்றில் வாழ்ந்துவரும் மக்களுக்கும் இடையே பிரிக்க முடியாத ஒரு பிணைப்பு ஏற்பட்டு விட்டது. நாம் வாழ்வதைப்போல்தான், அயலானும் வாழ்கிறானா? அவனது சூழ்நிலை, இயற்கையமைப்பு, சமூகம், மதம், பண்பாடு இவை யெல்லாம் எப்படி இருக்கின்றன என அறிய வேண்டிய ஆசையும் நமக்கு வளர்ந்து விட்டது. ஆகவேதான் தினந்தோறும் பத்திரிகைகளைப் படிப்பதன் மூலமும் ரேடியோ கேட்பதன் மூலமும் வெளியுலகத்துடன் நமக்குள்ள தொடர்பை நாம் நீடித்துக் கொள்கிறோம்.

மனிதன் க்ஷேமமாக வாழ வேண்டுமானால், அயலானிடம் நல்லெண்ணத்துடனும், மரியாதையுடனும், அன்புடனும் பழகக் கற்றுக் கொள்ள வேண்டும். அதன் குறைவால்தான், நம்மிடையே இந்நாளில் ஏகப்பட்ட பிணக்குகளும், பொறாமையும், பகை உணர்ச்சிகளும் மேலோங்கி நிற்கின்றன. அயலானைப்பற்றி சரிவர உண்மையானவற்றை அறிந்து, மதிப்பதன் மூலம், சமூகத்தையும், தேசத்தையும், உலகத்தையும் ஒற்றுமைப் படுத்தலாம். மக்கள் எல்லோரும் ஒன்று; நமக்குள் ஒரு சில மேலெழுந்தவாரியான வேற்றுமைகள் காணப்பட்டாலும், நமக்குள் ஆழ்ந்த ஒற்றுமை உண்டு என அறிந்து கொண்டால், ஐ. நா. சபையின் சாசனமும், அது போன்று சர்வதேச சகோதரத்வத்திற்காக உழைக்கும் பற்பல ஸ்தாபனங்களும், பெரும் வெற்றியடைந்து விடும். சண்டையின்றி, சமாதானமாக வாழ வேண்டும் என்பதற்கு முதல் படியாக ஒருவரைப்பற்றி சரிவர அறிந்து கொள்ள நமக்கு பல சாதனங்கள் நம்மெதிரிலேயே இருக்கின்றன. ரோட்டரி கிளப், ஒய். எம். சி. ஏ., பிரிமசான், தார்மீக மறுமலர்ச்சி இயக்கம், உலக சகோதரத்வ இயக்கம், பிரம்மஞான இயக்கம், சாரண இயக்கம் மற்றும் இவை போன்ற அநேக இயக்கங்கள்

ஆங்காங்கே செயல் பட்டு வருகின்றன. இதுபற்றி யெல்லாம் நாம் அறிந்து கொள்வதன் மூலம் உலக நட்புறவுக்கு நாம் நமது கடமையைச் செய்தவர்களாகிறோம்.

உலக சகோரத்வத்தை நிலை பெறச்செய்வதில், 'பேனாநட்புறவு' ஆற்றும் பணி மகத்தானது என்றே சொல்வேன். நம் தேசத்திலிருக்கும் அயல் தேசத்து ராஜதூதுவர்கள் எது பேசினாலும், அவர்கள் ஒரு சில வரம்புகளுக்குட்பட்டே, கூட்டியோ, குறைத்தோதான் பேசுவார்கள். ஆகவே, தனிப்பட்ட பிரஜைகளேதான் உண்மையான விஷயங்களின் பரிவர்த்தனைக்கு துணை புரிய முடியும். எங்கோ தொலைவிலுள்ள நண்பரின், விலாசத்தைக் கண்ட மாத்திரத்தில், அவருக்கு கடிதமெழுதி நண்பராகி, அவரது தேசத்தைப் பற்றி அவர் மூலமே அறிவதே. மிக்க மேலானது. நம்மைப் போன்றே, மற்றவர்களும் பிறத்தியாரைப் பற்றி அறிந்து கொள்வதில் மிக்க நாட்டம் உள்ளவர்களாகவே இருக்கின்றனர். பேனா நட்புறவில், முகமோ அல்லது ஒருவரின் உடல் லட்சணமோ ஒருவரை ஒருவருக்கு அறிமுகப் படுத்துவதில்லை. பரஸ்பர நல்லெண்ணத்துடனும் பரந்த மனப்பான்மையோடும் நடந்து கொள்வதே, பேனா நட்புறவை நீடித்து நிற்கச் செய்கின்றன.

ஒருவரின் வயதுக்கேற்ப, தொழிலுக்கேற்ப, விருப்பத்திற்கேற்ப, தகுந்த நண்பரைப் பெற்று, கடிதம் எழுதுவதும் அதன் மூலம் அறிவை விருத்தி செய்வதுமே பேனா நட்பு முறை. இந்த பேனா நட்பு மூலம், நமக்கு மிகவும் பிடித்த நண்பர்களையும், ஏன் வாழ்க்கை துணைவர்களையும் கூட கண்டுகொள்ள முடியும். கடிதம் மூலமே இவர்கள் நண்பர்களாக இருக்கிறபடியால், ஒருவரைப் பற்றி ஒருவர் மனதில் ஏதோ ஒருவிதமாகக் கற்பனை செய்து வைத்திருப்பார். இந்த பேனா நட்பின் மூலம் அறிமுகமாகும் நண்பர்களை, ஆயுள் முழுவதும்நேருக்கு நேர் பார்க்காமலேயே இறந்து போவாரும் உண்டு. அதிர்ஷ்டமிருப்பவர்கள் தன் வாழ்நாளில் ஒரு சமயத்திலாவது, தனது பேனா நண்பர்களை நேருக்கு நேர் கண்டு கொள்ள முடியும்.

ஆங்காங்கே இயங்கி வரும் இளைஞர் கழகங்கள் மூலம், நமக்கு விருப்பப்பட்ட நண்பர்களை நாம் தேர்ந்தெடுத்துக்கொள்ள முடியும். இந்தியாவில் சமீபகாலத்தில், ஏக இந்தியாவுக்குமான ஒரு பொது ஸ்தாபனத்தை புது டெல்லியில் நிறுவியிருப்பதும், அதன் கிளை ஒன்றை பம்பாயில் ஸ்தாபித்து இருப்பதும்நமக்கு மகிழ்ச்சி யூட்டுவன. பேனா நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதில் நாம் எந்தவித பொருளையும் சிலவு செய்ய வேண்டியதில்லை. அமெரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா தேசங்களில், ஒவ்வொரு சிறு நகரங்களிலும் கூட இம்மாதிரி பேனா நட்புறவின் மூலம், உலக முழுவதும், நண்பர்களை ஏற்படுத்தித் தருகின்றனர். பேனா நட்பை, வெறும் காசுக்கு பிடித்த சிலவாக ஒரு சிலர் சொன்னால், அதிலும் நியாய மிருக்கிறது. ஆனால் இதன் மூலம், உலக முழுவதிலும் நல்லெண்ணத்தின் பிரதிபலிப்பையும், பரஸ்பர மரியாதையையும் நாம் கண்டு கொண்டால் அதுவே பெரும் பயனாகும்.

என் சொந்த விஷயத்தை இங்கு குறிப்பிடுவது சரியில்லையாயினும், விஷயத்திற்காக இங்கு சிலவற்றை குறிப்பிட விரும்புகிறேன். எனக்கு 15 தேசங்களில் பேனா நண்பர்கள் உண்டு. அவர்களது முகங்களை நான் புகைப்படத்தின் மூலம்கூட பார்த்ததில்லை. இருந்த போதிலும் நாங்கள் நெடுநாள் நேருக்கு நேர் பழகிய நண்பர்கள்போல் ஆகிவிட்டோம். நான் சாரணனாக இருந்தபோது, ஸ்டாம்பு சேகரிப்பதில் எனக்கு மிகவும் விருப்பம்.

நிறம், மதம், ஏழை-பணக்காரன் என்ற எல்லா வித பேதங்களையும் கடந்து நிற்கும் நட்பு 'பேனா நட்பு.'

ஸ்டாம்பு சேகரிக்க வேண்டி ஒரு சில நண்பர்களை நான் முதலில் கண்டு பிடித்தேன். பின்னர் அதி லிருந்து, இப்பொழுது 15 நண்பர்களைக் கண்டுகொண்டு விட்டேன். அதுவும் தவிர 100க்கு மேற்பட்ட அயல் தேச மக்களை நான் கண்டு பேசி, அவர்களது உள்ள வேட்கையை அறிந்துகொள்ள முயன்றிருக்கிறேன். 'நம்மைப் போலவே அவர்களும் மற்றவர்களைப்பற்றி ஒரு சில விஷயங்களுக்காக உயர்வாகவும், ஒரு சில விஷயங்களுக்காகத் தாழ்வாகவும் மதிப்பிட்டு வைத்திருப்பதை அறிந்து கொண்டேன். தவிர, மற்றவர்களைப்பற்றி சரிவர உண்மை விஷயங்களை அறிய வேண்டும் என்பதில் ஊக்கத்தோடும் இருக்கின்றனர்.

பேனா நட்பின்மூலம், ஒரு தேசத்தைப்பற்றிய நமது அறிவைவிருத்தி செய்துகொள்வதோடு, கடல் கடந்து வாழும் நமது உடன் பிறந்த சகோதர மக்களோடும் நமது தொடர்பை நிலை நிறுத்திக் கொள்கிறோம். அடிக்கடி சொந்த நாட்டுடன் தொடர்பு வைத்துக் கொள்வதன்மூலம், சொந்த தேசத்தைவிட்டு பிரிந்திருக்கிறோமே என்ற வருத்த உணர்ச்சியும் மறந்து விடலாம். நமது பண்பாட்டைக் காப்பாற்றிக்கொள்ளவும் முடியும். கடல் கடந்து, தென் ஆப்ரிக்காவிலும், பீஜியிலும், சயாமிலும், மலேயாவிலும், தாய்லாந்திலும் வாழும் நமது மக்களில் ஒரு சிலரேதான் தான் பிறந்த தேசத்தைப் பார்த்திருக்கின்றனர். மற்றவர்களோ, அந்த தேசத்திலேயே பிறந்து வளர்ந்தவர்கள். இருந்தாலும் தங்களது சொந்த தேசத்துடன் அவர்களுக்குள்ள பற்றும், மரியாதையும் அவர்களுடனே கலந்திருக்கிறபடியால், இம்மாதிரி பேனா நட்புறவின் மூலம், 'நாம் பிரிந்து வாழ்கிறோம்' என்ற உணர்ச்சியை மறந்து போகச் செய்யலாம்.

சிதறிக் கிடக்கும் மக்களை ஒற்றுமைப் படுத்தவும், உலகெங்கும் உள்ள மக்கட் சமுதாயத்தை ஒரே குடும்பமாகவும் நாம் பாவிக்க வேண்டும் என்பதையே பேனா நட்புறவு வலியுறுத்துகிறது.

பற்பல கலாசார வளர்ச்சிகளைக் கொண்ட பரந்த தேசம் நமது இந்தியா. இந்நாளில் நமது தேசத்தில்; பிரிவினை உணர்ச்சிகளும், குரோத மனப்பான்மையும் தலைவிரித்தாடுவதை நாம் காண்கிறோம். வடக்கே காஷ்மீரத்திலிருந்து, தெற்கே கன்யாகுமரிவரை, ஐக்கிய இந்தியாவை உருவாக்க, நமக்குள்ளேயே சரியான விஷய பரிவர்த்தனை இல்லாத காரணத்தால், பிறராஜ்யமக்களைப்பற்றி தவறாக நினைத்துக்கொண்டு வருகிறோம். வடக்கும், தெற்கும் இணைந்து செல்லவேண்டும்; பஞ்சாபியும் தமிழனும், வங்கமும் தமிழகமும் சகோதரர்கள் என்பதை உணர நமக்கு ரொம்ப நேரம் தேவையில்லை. கடித மூலம் நண்பர்களைத் தேர்ந்தெடுத்து, நமது உறவை ஸ்தாபித்துக்கொண்டு விடலாம்.

நமது கலைகள் யாவும், உலக மக்களால் பெரிதும் மதிக்கப் படுகின்றன. நாம் அவற்றை வளர்த்து வர முயற்சிப்பதோடு மற்றவர்களின் கலைகளைப்பற்றியும் அறிந்து கொள்ள வேண்டும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பண்பாட்டில் வாழும் தமிழனுக்கு இது புறம்பான கொள்கை யல்ல; பேனா நட்பு அயலானைப் பற்றி அறிய ஒரு சிறந்த வாய்ப்பு; அதற்கு தூரமோ, இனமோ, தேசமோ ஒரு தடையாக இல்லை. ★

★ சகோதரன் இன்றி உயிர் வாழலாம்; ஆனால் நண்பன் இல்லாமல் உயிர்வாழ முடியாது.

—ஜெர்மன் பழமொழி

★ ஒருவருடன்நட்பு கொள்ளு முன் தீரயோசித்து சிநேகம் கொள் அவரது நட்பைத் தவிர்க்க விரும்பினால் இன்னும் நன்றாக யோசித்தே அதைச் செய்.

—பிராங்கிளின்

# கல் ஆயுதங்கள்

மாத்தளை அருணேசர்

உலகில் முதன் முதலில் தோன்றிய மனிதர்கள் பகுத்தறிவற்ற விலங்குகளைப் போலவே காட்டில் வேட்டையாடி உணவுகளைத் தேடி உண்டு வந்தனர். காலஞ் செல்லச் செல்ல, மனிதருக்கு இயற்கையாயுள்ள பகுத்தறிவின் வளர்ச்சியினுல் சிறிது முன்னேறி, தம் வேட்டையாடுந் தொழிலுக்கு இலகுவாயிருக்கக் கூடியதான சில வழி வகைகளை ஊகித்தறிந்து பயன்படுத்திக் கொள்ள ஆரம்பித்தனர். அப்படி அவர்கள் பயன்படுத்திய சாதனங்களில் கல்லாயுதங்கள் முதன்மையான தெனலாம்.

பழங்கால மனிதரின் கல்லாயுதங்கள், புதை பொருள் ஆராய்ச்சி வாயிலாய்க் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாயுதங்களின் தன்மைகளைக் கவனித்தால் அக்கால மனிதரின் கைத்திறன் எப்படிப்பட்டதென்பது வெளியாகிறது. எவ்விதமான சாதனங்களும் ஏற்படாதிருந்த காலத்திலேயே வெறுங்கல்லை ஆயுதங்களாகச் செப்பனிட்டு, உபயோகிக்கும் திறமையைப் பெற்றிருந்ததற்கு அவர்களை நாம் மெச்சத்தான் வேண்டும்.

இதுவே மனிதரின் முதலாவது விஞ்ஞான அறிவின் ஆரம்ப காலமென்று கூறலாம்.

கல்லினுல் ஆயுதஞ் செய்வதென்ருல் அக்கல்லை வெறும் கையினுல்மட்டும் செப்பனிட்டு, ஆயுத உருவுக்குக் கொண்டு வந்துவிட முடியுமா? அது எப்படி அவர்களால் முடிந்தது? முதலில் விலங்குகளைக் கல்லினுல் அடித்துக் கொன்று, ஆகாரத்திற்கு எடுத்திருக்கலாம். அவ்விதம் உபயோகித்து வந்ததில் கற்களைக் கூர்மையாக்கி உபயோகிப்பதால் மேலும் நல்ல பலன் கிடைக்கலாமென்பது மனதில் பட்டு, அக்கற்களை வேறு கல்லுடன் உரசி, அல்லது மோதித் தட்டிக் கூர்மைப்படுத்தி யிருக்க வேண்டும். எப்படிச் செய்திருந்தாலும், முதலில் உண்டாக்கிய கல்லாயுதம் பொதுவாக எல்லா வேலைகளுக்கும் உபயோகிக்கப்பட்டிருக்கக்கூடும். பிறகுதான் குத்துதல், வெட்டுதல், செதுக்குதல், இழைத்தல், குடைதல், தோண்டுதல் முதலான பலவித வேலைகளுக்கேற்ற தனித்தனியான கருவிகளை உற்பத்தி செய்தனர். இவை ஆகாரத்துக்காக மிருகங்களை வேட்டையாடுவதற்கு மட்டுமின்றி, கிழங்குகள் தோண்டவும் மற்றும் பல காரியங்களுக்கும் உயோகிக்கப்பட்டன.

இவ்வித ஆயுதங்கள் உண்டு பண்ணுவதற்குத் தகுதியான கற்கள் எவை எவை என்றும் அவர்கள் தேர்ந்தெடுத்ததோடு, அவற்றைப் பிளப்பதற்கும் உபாயங்களைக் கண்டிருந்தனர். இந்த அனுபவத்திலிருந்து கற்களின் பலதர இயல்புகளையும் நன்கு அறிந்து கொண்டனர்.

இவ்வாறு ஆதிகால மனிதர்கள் பற்பல விதமான கல்லாயுதங்களைச் செய்வதற்குப் பெற்றிருந்த அறிவின் தேர்ச்சியே தற்காலத்தவருக்கு அவசியமாயுள்ள பண்பட்ட கருவிகள் பலவற்றுக்கும் அடிப்படைக் காரணமாகிய தென்பது தெளிவு.



கற்காலக் கருவிகள்

கல்லாயுத காலம் மிகப் பழைமையானது எனத் தெரிகிறது. சமீபகாலத்தில் (1954-ல்) மேற்கு வங்காளத்தில் பர்துவான் ஜில்லா–துர்க்காபுரியில் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த இந்தியர்களின் கல்லாயுதங்களும் இதர சாதனங்களும் கண்டு பிடிக்கப்பட்ட செய்தி பத்திரிகைகளில் வெளிவந்தது இதனை உறுதிப் படுத்துகிறது.

ஆனால், கற்காலம் சரித்திரக்காரர்களின் ஆராய்ச்சியின்படி பழைய கற்காலம், புதிய கற்காலம் என இரு வகைளாகப் பிரித்துக் கூறப்பட்டுள்ளது. முதலாவது கற்காலம் 50,000 ஆண்டுகளுக்கு முந்தியது.

அதற்குப் பிந்தியதே புதிய கற்காலம். இது கி.மு. 10,000 ஆண்டுகளுக்கு முந்தியது என்பர். இக்காலத்திய மனிதர், திருந்திய கல்லாயுதங்களையும், அவற்றைக் கூர்மையாக்கும் விதத்தையும் அறிந்திருந்தனர். இப்போது அவர்களின் ஆயுதங்களில் கத்தி, கோடரி, உளி, ரம்பம், சம்மட்டி, சுத்தியல், அம்புகள் முதலிய கருவிகளைக் கல்லினால் சுலபமான முறையில் செய்யப்பழகி யிருந்தனர். கல்லினால் பாத்திரங்களும் செய்யக் கற்றிருந்தனர். கல் சட்டி, கல் தொட்டி போன்றவை இதற்குச் சான்று.

கால அளவில் மனிதர் கற்களைத் தேடியபோது பிரகாசமான பலவித வர்ணக்கற்கள் அகப்பட்டன. அவற்றை ஆயுதங்களாகச் செய்ய முடியாதென்றாலும், அவற்றின் அழகைக்கண்டு விரும்பி, அக்கற்களை அலங்காரப் பொருள்களாகவும், பலவித ஆபரணங்களாக அணிந்துகொள்ளவும் உபயோகப் படுத்தித் தங்களை அலங்கரித்துக் கொண்டனர்.

பிற்காலத்தில் இரும்பு, செம்பு, தங்கம், வெள்ளி, வெங்கலம், தகரம் போன்ற உலோகங்கள் கண்டு பிடிக்கும் வரையில், கல்லாயுதங்கள்தான் உபயோகத்திலிருந்து வந்தன. உலோகங்களால் ஆயுதங்கள், பாத்திரங்கள் செய்வது எளிதாயிருந்ததைக்கண்டு, கல்லினால் செய்யும் விதத்தை மனித இனம் கைவிட்டிருக்க வேண்டும்.

## இயற்கை யளித்த ஆயுதங்கள்

மனிதன் வாழ்க்கையை நடத்த கல்லைக்கொண்டும் ஆயுதங்கள் செய்து வாழ்ந்தான். ஆனால், பிராணிகள் தங்கள் எதிரிகளிடமிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டி, இயற்கையே அவற்றுக்குத் தற்காப்பு ஆயுதங்களை அளித்திருக்கிறது.

பாம்பின் விஷப்பற்கள்; முள்ளம் பன்றியின் கூரிய முட்கள்; தேளின் விஷம் நிறைந்த கொடுக்கு; பறவைகளின் கூரிய அலகுகள்; ஆமையின் கடினமான ஓடு இவையெல்லாம் இயற்கை, உயிர்ப்பிராணிகளுக்களித்த தற்காப்பு ஆயுதங்கள் தானே?–

—பாரதியார்.

# ஹாஸ்ய சம்பவம்

ஹாஸ்ய சம்பவம் எவ்வளவோ உங்கள் வாழ்க்கையில் ஏற்பட டிருக்கும் அவைகளைப்பற்றி 100 வார்த்தைகளுக்குள் எழுதப்பட வேண்டும். பிரசுரிக்கப்படும் எல்லாவற்றிற்கும் சன்மானம் வழங்கப் படும்.

ஆசிரியர்: 'திங்கள்' 17, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை–2 என்று விலாஸமிட்டு எழுதியனுப்புங்கள்.

## புத்தர் 'காப்பாற்றினார்!'

அன்று எங்கள் பள்ளிக்கூடத்திற்கு கல்வி அதிகாரி வரும் நாள். எங்களுக்கு முதல் பாடம்சரித்திரம். அன்று நடக்க வேண்டிய பாடம் புத்தரைப் பற்றியது. மணி அடித்தவுடன் சரித்திர ஆசிரியர் வந்தமர்ந்தார். அவர் அன்று இரவு முழுவதும் தூங்கவில்லையாதலால், அவருக்குத் தூக்கம் வந்தது. அன்று கல்வி அதிகாரி வரும் நாள் என்பதையும் மறந்து, நாற்காலியில் சாய்ந்தவாறு தூங்கிவிட்டார்.

ஒவ்வொரு வகுப்பாகப் பார்வையிட்டுக் கொண்டு வந்த கல்வி அதிகாரி, எங்கள் வகுப்பிற்கும் வந்தார். அவர் வந்தவுடன் மாணவர்கள் எழுந்து நின்றனர். அதிகாரியின் செருப்பு ஒலியும், மாணவர்கள் எழுந்து நின்றதால் ஏற்பட்ட ஓசையும் கேட்டு, ஆசிரியரும் தூக்கத்திலிருந்து எழுந்து விட்டார். சந்தர்ப்பத்தையொட்டி அவர் சமயோசிதமாக ஒரு வேலை செய்து விட்டார்! அவர் தன் கால்களைத் தூக்கி நாற்காலியில் தவம் செய்பவரைப்போல் வைத்துக் கொண்டு, கண்களை மூடிக் கொண்டார். பிறகு கண்ணைத் திறந்து மாணவர்களைப் பார்த்து, ''இப்படித்தான் புத்தர் போதி மரத்தடியில் மோன நிலையில் தவம் செய்தார். தெரிகிறதா?'' என்று கேட்கவும், கல்வி அதிகாரி ஆசிரியரின் பாடம் போதிக்கும் திறமையைப் பாராட்டிச் சென்றார். அவர் சென்ற மறு நிமிஷம் வகுப்பில் கிளம்பின சிரிப்பொலி அடங்க ஐந்து நிமிஷங்களாயின.

இ. திருவேலன்,
ஈரோடு.

## புத்தி வந்தது!

எனது கிராமத்தில் வழக்கம் போல நானும், என் தம்பியும் நண்பன் நந்தகோபாலும் சேர்ந்து குளிப்பதற்காக கிணற்றிற்குச் சென்றோம். தம்பியைத் தவிர, நாங்கள் கிணற்றில் குதித்து கரையேறினோம். அந்த நேரத்தில் அண்ணாமலை கவுண்டர் என்பவர் அங்கு வந்தார். அவரை எங்களுக்கு நன்றாகத் தெரியும். எங்களுக்காக அவர் எந்த உதவியும் செய்யத் தவறாதவர். இயற்கையிலேயே சிறிது குறும்புத் தனம் உடையவர். எங்களை எங்கு கண்டாலும் குறும்புத்தனமாகக் கேள்வி கேட்டு, அழவைப்பது அவருக்குப் பொழுது போக்கு.

அன்று அவர், ''நீ ஏன் குளிக்கவில்லை?'' என்றார் என் தம்பியைப் பார்த்து.

''எனக்கு நீந்தத் தெரியாது!'' என்று பதில் சொன்னான் அவன்.

''சரி, நான் உனக்கு நீந்தக் கற்றுக் கொடுக்கிறேன். நீ பயப்படாமல் குதி!'' என்றார் கவுண்டர்.

கிணற்றில் ஆழம் அதிகம். அவர் சொன்ன மறுநிமிஷம் தம்பி நீரில் குதித்து விட்டான். தொடர்ந்து

கவுண்டரும் நீரினுள் குதித்தார். தம்பிக்கு நீந்தும் முறைகளைச் சொல்லிவிட்டு, அவர் நீரினுள் நன்றாக மூழ்கினார். கொஞ்ச நேரங்கழித்து தலை தூக்கின கவுண்டர், ''தம்பி எங்கே?'' என்றார் என்னைப் பார்த்து.

''எனக்கெப்படித் தெரியும்?'' என்றேன் நான் கரையிலிருந்த படியே.

பிறகு அவர் மறுபடியும் நீருக்குள் மூழ்கினார். கிணறு முழுவதும் அலைந்து தேடியும் என் தம்பியைக் காணோம்!

ஐந்து நிமிடங் கழித்து மேலே வந்த அவர் பீதியுடன் காணப்பட்டார். கண்கள் நன்றாகச் சிவந்து விட்டன. அவர் சந்தோஷமின்றி, பயமும் திகிலும் கொண்டு காணப்பட்டார். நானும் கலவரம் தாங்காமல் ''தம்பி, தம்பீ,'' என்று கூச்சலிட்டேன்.

''ஐயோ! விளையாட்டாகச் சொல்லப் போய் பெரிய வினையாகி விட்டதே! உன் தந்தைக்கு நான் என்ன பதில் சொல்வது?'' என்று கவுண்டர் என் எதிரில் பரிதாபமாகக் கதறும்போது, மரத்தடியிலிருந்து கலகலவென்று சிரிப்பொலி கேட்டது. தொடர்ந்து என் தம்பி ஓடி வந்தான். ''எனக்கா நீத்தத் தெரியாது! உங்களை அழவைக்க வேண்டுமென்று தான், நீங்கள் பார்க்காதபோது ஜலத்திலிருந்து மேலே வந்து ஒளிந்து கொண்டேன்!'' என்றான். நானும் அவன் விஷமத்தனத்தைக் கண்டு சிரிக்கவே, கவுண்டர் அன்று முதல் எங்களிடம் விளையாட்டாகக் கூட விஷமம் செய்வதில்லை.

எஸ். புருஷோத்தமன்,
மருத்தாம்பாடி.

## தாராளம்!

ஒரு சமயம் நானும் என் நண்பன் ஒருவனும் ஒரு கல்யாண வீட்டிற்கு சாப்பிடச் சென்றிருந்தோம்.

அன்று நாங்கள் சென்றிருந்த கல்யாண வீட்டில் கல்யாணம் முடிந்து, விருந்துக் கென்றே எல்லோரையும் அழைத்திருந்தார்கள்.

நாங்கள் சற்றே தாமதித்துச் சென்றதால் கல்யாண வீட்டுச் சாப்பாட்டு விடுதியில் கூட்டம் காரணமாக ஏற்கனவே இட நெருக்கடி ஏற்படவே, முடிந்தமட்டும் கல்யாண வீட்டார் அங்கங்கே இடங்களை ஏற்படுத்தி உட்காரச் செய்தனர்.

எங்களுக்குப் பரிமாறிய பேர்வழி மிகவும் சிக்கனமானவன்; ஒவ்வொரு வகையிலும் கொஞ்சம் கொஞ்சம்தான் பரிமாறினான். எல்லாம் வெகு ருசியாய் இருந்தன. நிறைய வேண்டும்போல் தோன்றவே நாங்கள் ஒருவர் மாற்றி ஒருவர் என்ன சாடைமாடை காட்டினாலும் சமையல்காரன் தட்டிலிருந்து வெறும் கரண்டியைத்தான் தட்டினான். எங்களுக்கு இதனால் மிகுந்த கோபம். என் நண்பனுக்கோ ஆத்திரம். சாப்பிட்டு முடிவதற்குள் சமையல்காரனை சரியாய் மட்டம் தட்டவேண்டும் என்று காத்திருந்தான் என் நண்பன்.

கடைசியில் மோர்விடும் கட்டம் வந்தது. பால் பஞ்சத்தாலோ என்னவோ, மோர் ஒரே நீராய் இருந்தது. ஆனால் சமையல்காரன் அதைத் தாராளமாய் ஊற்றினான். தன் சிக்கனத்தை அதில் கையாளவில்லை அவன்!

என் நண்பன் இதுதான் சமயமென்று பரிமாறுபவனைப் பார்த்து, ''ஆஹா, மோரில் நீர் தாராளம் ஐயா! தாராளம்'' என்றான். அதாவது மோரில் நீர் (நீங்கள்) ஊற்றுவது தாராளம் என்றும் உங்கள் மோரில் நீர் (தண்ணீர்) ஏராளம் என்றும் இருபொருள்பட பேசி முடித்தான். சமையல்காரன் ''திரு திரு'' வென்று விழித்தான். நாங்கள் எங்கள் ஆத்திரந்தீர ''இடி இடி'' என்று சிரித்தோம்.

எஸ். பி. மாரிசாமி,
கண்டமனாயக்கனூர்.

போன் : 63 தந்தி : SIMCO

தினம் குடிசைத் தொழிலாகத் தயாராகும் 3300 குரோஸ் தீப்பெட்டிகளும் எங்கள் டிப்போக்களில் செலவாகி விடுகின்றன.

சிறந்த சரக்கு உற்பத்தி! சிறப்பான பொதுஜன ஆதரவு!

எங்கள் 40 குச்சி கோபுரம் மார்க்; சிம்கோ ஸேலட் மார்க்; சிம்கோ சைக்கிள் மார்க்; மைனர் சைஸ் சீனு லேடி மார்க்; சிம்கோ 60 குச்சி வேட்டை சிங்கம் மார்க் தீப்பெட்டிகள் கடற்கரை, குளிர் பிரதேசங்கள், மற்றும் மலபார் மழைக்கும் உகந்தவை.

★

**சிம்கோ, சிவகாசி.**

அழகுக்கு அழகு செய்யும்
ஆபரணங்கள்!
PAR
PAR
P.A. ராஜு செட்டியார்
& பிரதர்
ஸ்வர்ண மாளிகை
தந்தி "ராஜா"
கோயமுத்தூர்
போன்: 268
BAKTHA.